

அமுதசுரபி


அக்டோபர்'92 விலை ரூ.5

ஸ்ரீராகவேந்திர

கல்பதரு நகர்

சென்னையை அடுத்த தாம்பரத்திற்கு மிக அருகாமையில் ஸ்ரீபாதராஜ மடம் - முல்பாகல் சுவாமிஜி நிர்மாணிக்கும் ஸ்ரீராகவேந்திரர் பிருந்தா வனம், வேத பாடசாலை, இந்திய கலாசார மையம், முதியோர் இல்லம், ஆயுர்வேத, சித்த மருத்துவ மையம் கூடிய ஸ்ரீஹரிபாத ஸ்ரீ ஸ்ரீபாதராஜ ஹரிதாச ஆசிரமம் ஒட்டிய இடத்தில் உங்கள் வசதி, விருப்பத்திற்கேற்ப வீடு கட்டிக்கொள்ள அரிய வாய்ப்பு.

MADRAS CITY



- ☆ சுத்தமான, சுவையான நல்ல குடிநீர்.
- ☆ நல்ல தார்ரோடு வசதி.
- ☆ பஸ், ரயில் நிலையம் அருகாமை.
- ☆ தாம்பரம் டெலிபோன் இணைப்பக வசதி.
- ☆ பிரச்சனையற்ற வில்லங்கம் இல்லா பத்திரங்கள்
- ☆ அமையவிருக்கும் 200 அடி சுற்று ரோடு கல்பதரு நகரிலிருந்து 300 அடி தூரத்தில்.

☆ கிரெசன்ட் அறிவியல் கல்லூரி, பாரத் அறிவியல் கல்லூரி, கிறித்துவக் கல்லூரி, மேல்நிலைப் பள்ளி, சினிமா அரங்கம், கடைகள், நேஷனல் உயிரியல் பூங்கா ஆகியவை மிக அருகாமையில் அமைந்துள்ளது.

☆ 24 மணிநேர சிறப்பு மருத்துவ வசதிகள், அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனைகளின் அருகாமை. மொத்தத்தில் எல்லா வசதிகளும் கொண்ட ஒரு 'ரெடிமேட்' நகர்.

விவரங்களுக்கு

பாலபாரி பில்டர்ஸ் (பி) லிட்
பாலபாரி ரியல் எஸ்டேட்ஸ்

எண் 2, முதல் மாடி,
ராமநாதன் தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600017, போன்: 445161.

அமுதசுரபி

★ அக்டோபர் : 1992 ★ மலர் : 45 ★ இதழ் : 6 ★ ஆங்கிரஸ ஐப்பசி
★ விலை : ரு. 5 ★ ஆண்டுச் சந்தா : ரு 60 ★ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா.
★ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.
★ ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் ★ இதழ் ஆஃப்செட் அமைப்பு : சிவகுமார். ❁ மேலட்டை வண்ணப்படம் : யோகா

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே
—பாரதியார்

தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்த நற்பணிகளுள் தலைசிறந்தது தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்கு என்றே பெரிய கோயில் உள்ள தஞ்சையில் ஏற்படுத்தப்பட்ட சிறந்த கல்விக் கோயில் ஆகும்.

அவர்களுடைய பணிகள் என்னென்ன, தமிழ் வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகம் என்ன செய்திருக்கிறது, செய்து வருகிறது, செய்யப் போகிறது என்பதற்கு ஓர் ஆய்வே நடத்த வேண்டிய காலகட்டம் நெருங்கிவிட்டது. ஆனால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சிறந்த திட்டங்களுள் ஒன்று 'இராசராச சோழன்' பெயரால் ஆண்டுதோறும் இலட்ச ரூபாய் பரிசளிப்பதாகும்.

படைப்பிலக்கியம் சிறக்க அளிக்கப்படும் பரிசு அது.

இதுவரையில் இராசராச சோழன் பரிசு பெற்றவர்கள்: கவியோகி சுத்தானந்த பாரதியார் (அமரர்), எழுத்தாளர் ஜெயகாந்தன், எழுத்தாளர் கோவி. மணிசேகரன்.

தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தபோது திரு. மு. கருணாநிதி அவர்களுக்கும் இராசராசசோழன் பரிசு வழங்கப்பட்டது. கலைஞர் கருணாநிதிக்குப் பிறகு இராசராசன் பரிசு ஒருவருக்கும் வழங்கப் படவில்லை. காரணம், இராசராசன் விருது பெறத் தகுதி வாய்ந்தவர் ஒருவருமில்லை என்ற முடிவுக்குப் பல்கலைக் கழகம் வந்துவிட்டதாக அறிகிறோம்.

தமிழ்ப் படைப்பாளிகளுக்கு இதைவிடப் பெரும் அவமானம் வேறு ஒன்றும் இருக்க முடியாது.

இராசராசன் பரிசே பெற முடியாதபோது ஞானபீடப் பரிசு, நோபல் பரிசு இவற்றைத் தமிழ்ப் படைப்பாளிகள் எங்கே பெறப் போகிறார்கள்?

தமிழ்ப் படைப்பாளிகள் சிந்திக்க வேண்டும்; ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும்.

நாளை நமதே

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்

அண்மையில் அமரர் மயிலாப்பூர் பிரமுகர் கல்வியாளர் பெயர் போன வழக்கறிஞர் திரு.கி.பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களின் நூற்றாண்டு விழா நடந்தது. பாரதத்தின் ஜனாதிபதி மேதகு திரு.ஆர்.வி.அவர்கள் நேரில் வந்திருந்து விழாவை நடத்தி வைத்தார்கள்.

பாரதக் கலாசாரத்தின் மொத்த உருவாக திரு.கி.பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களை வர்ணித்த பாரதத்தின் அறிவுமிகு மேதகு ராஷ்டிரபதி அவர்கள் ஓர் அற்புதமான விசாரணையில் இறங்கினார்கள். தர்ம மணி அய்யர் அவர்களைப் பற்றிப் பேசும்போது, தர்மம் என்னும் சொல்லுக்கு ஆங்கிலச் சொல் உண்டா? இருப்பின் யாராவது அது என்ன என்று கூற முடியுமா என்றொரு வினாவை எழுப்பினார் மேதகு ஆர்.வி. அவர்கள்.

கூட்டத்திலிருந்த ஒருவர் "Duty" (கடமை) என்று பதிலளிக்க அதை மறுத்த ஜனாதிபதி அவர்கள், கடமை என்பது தர்மத்தின் ஒரு பகுப்பாக இருக்கலாம், ஆனால் கடமை மட்டுமே தர்மம் ஆகிவிடாது என்றார்.


ஆம். தர்மம் என்பது என்ன? காலம் கால மாக இக்கேள்வி கேட்கப்படுகிறது. பதில்தான் சரியானபடி கிடைக்கவில்லை என்று தொடர்ந்த ஜனாதிபதி அவர்கள் கூறினார்கள்.

"இந்தக் கேள்வியை நான் கேட்கவில்லை. நடமாடும் தெய்வமாக இன்று விளங்கும் காஞ்சி காமகோடி பீட, மாமுனிவர் ஜகத்குரு சங்கராச் சாரியார் பூஜ்யஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி அவர்கள்தான் என்னிடம் ஒரு முறை இக்கேள்வியை எழுப்பினார்" என்றார் இந்திய மண்ணின் முதல் குடிமகன், மேதகு ஆர்.வி. அவர்கள். ஜகத்குருவின் கேள்விக்குத் திருவாளர் ஆர்.வி.அவர்களால் சரியான பதி லளிக்க முடியவில்லை. ஏனெனில், மேலை நாடுகளில் 'தர்ம தத்துவம்' கிடையாது. தர்மம் என்ற பயிர் அங்கு விளையவே இல்லை. இது தான் உண்மை என்றார் நம் ஒப்பற்ற ஜனாதிபதி. எனவே ஆங்கிலத்தில் அதற் கேற்ற சரியான சொல்லை அறியமுடிய வில்லை என்றார்.

நான் சில காலம் இங்கிலாந்தில் இருந்த போது புகழ்மிகு தமிழ்ப்பெரும் புலவர் டாக்டர் ஜி.யூ. போப்பையர் அவர்களின் "வெளியிடப் படாத கட்டுரைகள்" (Unpublished Papers) பற்றி ஓர் ஆய்வு நடத்தினேன்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் பெயர்த்த டாக்டர் போப் அவர்கள் 'விடையவனே' என்ற சொல்லை 'Lord of the Bull' என்று அழகுற ஆங்கிலத்தில் கூறிய அறிஞர் போப் அவர்கள், ஓரிடத்தில் நம் திருக்குறள் பற்றிக் குறிப்பிடு கிறார். மறக்க முடியாதபடி திருக்குறளை ஆங்கிலத்தில் பெயர்த்த நம் போப்பையர் அவர்கள் என்ன கூறுகிறார்கள்? பார்க்கலாமா?

"உலகின் சிறந்த தத்துவமேதை, அறிவுமிகு ஆசான் அரிஸ்டாடில் பெருமகனார் என் பார்கள். கிரேக்க ஞானி அரிஸ்டாடில் அன்று ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்தார். அவர் நடக்குமிடமெல்லாம் அறிவு தொடர்ந்தது, அறிவுத் தாமரைகள் பூத்தன என அன்றைய வரலாற்று ஆசிரியர்கள் முழங்கினர்.



அந்த அரிஸ்டாடிலையும் நம் வள்ளுவப் பெருந்தகையையும் ஒப்பிட்டு எடை போடுகிறார் போப். அரிஸ்டாடில் என்னும் உலக மேதை வள்ளுவர் என்னும் உலகத் தத்துவஞானியுடன் ஒப்பிடப்படுகிறான்.

அரிஸ்டாடில் காலத்தில் ஒருவர் நமது வலது கண்ணை எடுத்துவிட்டால் நாம் அவரது வலது கண்ணை எடுத்துவிடலாம். "An Eye for an Eye and a tooth for a tooth philosophy" என்ற தத்துவம் அன்று அங்கு ஓங்கி இருந்தது. நம் வலது கையை ஒருவர் வெட்டி எடுத்துவிட்டால் நாம் அவரது வலது கையை எடுக்கலாம். ஆனால் இடக்கையைத் தொடக்கூடாது. இதுதான் நீதி. அன்றைய சட்ட வழக்கம்.

அப்போது தமிழ்த் திருவள்ளுவன் என்ன கூறினான்?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

இது எப்படி? ஒருவன் நமக்குக் கெடுதல் செய்கிறானா? அவனுக்கு நீ கெடுதலே செய்யாதே, நலமொன்று செய்து அவனை வெட்கப்பட வை, அவமானம் தானாகவே அவனைச் சூழட்டும். உன் நல்ல செய்கை யால் அவன், உன் எதிரி, வெட்கித் தலை குனியட்டும் என்கிறார். இப்படிக் கூறிய பொய்யாமொழியாரையும் அரிஸ்டாடிலையும் எடை போட்டுப் பார்த்துவிட்டுப் போப்பையர் கூறுகிறார்: "When compared, because of his Unique thought of forgiveness, Tiruvalluvar is, atleast one inch taller than Aristotle" என்கிறார். அரிஸ்டாடிலை யும், வள்ளுவரையும் ஒன்றாக நிற்கவைத்து வள்ளுவன் உயரம் என்கிறார் டாக்டர் போப்.

எவ்வளவு அழகாக நம் தமிழ் அன்பர் போப் கூறுகிறார் பாருங்கள். வள்ளுவன் உலகில் அரிஸ்டாடிலைவிடச் சிறந்தவன்; சொல்வது ஆங்கிலேயர். நமக்கு எவ்வளவு பெருமை?

இன்னா செய்தாருக்கு நன்மையே செய்திடக் கூறும் வள்ளுவன் உலக மேதை எனப்படும் அரிஸ்டாடில் பெருமகனாரைவிட ஓர் அங்குலம் உயர்ந்தே காணப்படுகிறார். நாமும் ஓர் அங்குலம் உயர்கிறோம்.

திரும்பத் திரும்ப இதைச் சொல்லிச் சொல்லி மகிழலாம்.

ஆம். வள்ளுவனால் உலகில் உயர்ந்தவன் தமிழன். வள்ளுவனால் மனித இனமே எழுந்து உயர்ந்து நிற்கிறது.

திருவள்ளுவன் சொன்ன "இன்னா செய் தாரை ஒறுத்தல்" தத்துவம்தான் 'தர்மம்' எனலாமா?

வாமன் சிவராம் ஆப்தே என்பவர் எழுதிய ஆங்கில வடமொழி நிகண்டு என்ன கூறுகிறது. "தர்மம்" பற்றி "மதம், சட்டம், நன்னடை நல்கல், நியாயம், பிறர் நலம் பேணல்" இவையெல்லாம் சேர்ந்த ஒரு கலவைதான் அது என்று. "A combination of Character, Morality, Piety, Poopriety Decorum" etc.

ஒரு மனிதனிடம் இவையெல்லாம் இருக் குமா? அத்துணை நலங்களும் ஒன்றுகூடக் குறையாமல் இருக்க முடியுமா? மனிதனைத் தள்ளுங்கள். ஓர் அரசிடம் இவையெல்லாம் இருக்க முடியுமா? Dharmic State, Dharmic Government, Dharmic Person என்கிறார்களே - தர்மம்மிக்க அரசு, தர்மம்மிக்க அரசாங்கம், தர்மம்மிக்க மனிதன் என்று கூறுகிறார்களே இவையெல்லாம் போலிச் சொற்களா?

தர்மமிகு என்று மக்கட்குப் பட்டங்கள் அளிக்கப்படுகின்றனவே- அவையும் போலியா?

"தருமமிகு சென்னை" என்று வள்ளலார் அடிகள் சென்னையை, நம் சென்னையைத் தான் பாடிவிட்டுப் போயிருக்கிறார்களே. பல மனிதர்கள் ஒருவேளைச் சோற்றுக்கு அல்லல் படும்போது, அருமை நாய்க்குட்டிகளுக்குக் குளுகுளு அறையில் வைத்துக் குளிப்பாட்டி வீட்டு நடுவில் படுக்க வைத்து உடன்படுக்கிற மக்களைக் கொண்ட சென்னையைத்தான் தருமமிகு சென்னை என்றார்களா என மலைத்து மயக்க நிலையில் உள்ளீர்களா? கவலை வேண்டாம்? இச்சொல் அன்றையச் சென்னையைக் குறித்தது. ஒரு குஷ்டரோகிக்கு ஒரு நயா பைசா கொடுக்க மனம் வராமல், ஒரு ரிக்ஷா இழுப்பவருக்கு ஒரு அரையணாகூடக் கொடுக்காது, குஷ்டரோகியாகவும், ரிக்ஷா இழுப்பவராகவும் நடிக்கும் படங்களுக்கு "கும்கும்" குத்துச்சண்டைப் படங்களுக்கு 2 ரூபாய் சினிமா டிக்கட்டை 50 ரூபாய்க்குக் கள்ளச்சந்தையில் வாங்கும் இன்றையச் சென்னை பற்றி அவர் கூறவில்லை. ஆம், அவர் சொன்னது அன்றையச் சென்னை பற்றி. நல்லவேளை உங்கள் மூச்சு திரும்பி வருகிறதா? நன்று.

பின் எதுதான் தர்மம்? ஆங்கிலத்தில் தர்மம் என்ற வாக்கியம் இல்லை. ஏனெனில் அவர்கள் வாழ்க்கை முறை வேறு. நம் வாழ்க்கை முறை வேறு. அமெரிக்கா போன்ற மிக முன்னேறிய நாடுகளில் குறைந்தது, மூன்று முறை விவாகரத்து செய்தவர்கள் ஏராளம் ஏராளம்.

கணவன் மனைவி உறவு அங்கு ஒரு வியாபார உறவு (Contact) இங்கு அப்படி இது வரை இல்லை.

எனவே இங்கு தர்மம் இருக்கிறது. இருப்பினும் இன்னும் தர்மம் என்ற இச்சொல் கொஞ்சம் நம்மைவிட்டு நழுவி ஓடுவது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுகிறது.

மகாபாரதத்தைப் பார்ப்போம். தர்மபுத்திரர் முழுக்க முழுக்க தர்மவானில்லை, ஒரு முறை நிஜத்தைப் பொய் போல் சொல்லி, அல்லது பொய்யை நிஜம்போல் சொல்லி நழுவி விழுந்து விடுகிறார். அச்வத்தாமா இறந்து விட்டான் என்று கூற முடியாது, ஏனென்றால் அச்வத்தாமா உயிருடன் இருக்கிறான். துரோணரை மடக்க ஒரே வழி அவர் மகன் அச்வத்தாமா மரணம் அடந்துவிட்டான் என்று கூறியாக வேண்டும். எப்படிக் கூறுவது? அச்வத்தாமா அசாதாரண வீரன். யார் சொன்

அமுதசுரபி தீபாவளி மலர் '92

னாலும் துரோணர் நம்பமாட்டார். பாண்டவர் பலம் குறைகிறது. துரோணரை நீக்கினாலன்றி வெற்றி கிடையாது. எப்படி இதைச் செய்வது? பரந்தாமன் தருமரை வேண்டுகிறான். அச்வத்தாமா என்னும் யானை ஒன்றைக் கொல்லுவோம். நீர், அச்வத்தாமா என்னும் யானை இறந்துவிட்டது என்ற கலப்படமற்ற உண்மையைக் கூறுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்கிறார்கள். அச்வத்தாமா என்ற யானை மடிகிறது. "அச்வத்தாமா அத: குஞ்சர:" என்கிறது வடமொழி. அதாவது, அச்வத்தாமா என்னும் யானை மடிந்தது என்று கூறுகிறார்கள். யானை என்ற சொல் வரும் போது ஏகமாக வாத்ய கோஷங்கள் முழங்கி, தாரைதப்பட்டைகள் ஒலித்து அச்வத்தாமா இறந்தான் என்று சொன்னபடி ஒரு மயக் கத்தை ஏற்படுத்தி துரோணரை மனமிழக்கச் செய்து புத்ரசோகத்தை உண்டுபண்ணி அழிக்கின்றனர்.

இது யுத்த தர்மமா? என்பது பற்றிப் பல்லாண்டுகளாக ஆராய்ச்சி நடக்கின்றன. தர்மபுத்திரர் ஓர் அங்குலம் கீழே இறங்கி விட்டார் இதனால் என்கிறது மகாபாரதம்.

வாலியை மறைந்திருந்து வதம் செய்த ஆண்டவன் செயல் தர்மமா? அதர்மமா? பல நூற்றாண்டுகளாக இந்த வாதமும் தொடர் கிறது.

தந்தை, தம்பி அண்ணன்களைக் கொன்று விட்டு, சிலரைக் குருடாக்கிவிட்டு, பெற்ற பாவத்திற்காகத் தந்தையை விலங்கிட்டுச் சிறையிட்டு அரியணை ஏறிய முகலாய பரம்பரைகள் செய்தது ராஜதர்மமா? எது தர்மம்? மாணவன் 'காப்பி' அடிப்பது மாணவ தர்மமா? அவனைக் காப்பியடிக்கத் தூண்டும் மகாத்மா காந்தியின் ஆசிரியர் போன்றோர் செய்வது ஆசிரிய தர்மமா?

குடும்பம் செழிக்க, கணவனை வாழவைக்க, மனைவி பல வழிகளில் பணம் சம்பாதிப்பது குடும்ப தர்மமா?

எது தர்மம்? ஒரு பரிட்சையில் எல்லாருக்கும் மார்க் அள்ளிப்போடுவது கல்வி தர்மமா? அண்டைய மாநிலம் ஒன்றில் முதல்வரின் மகளுக்கு எண்களைக் கூட்டித் தங்க மெடல் கொடுத்தது முதல்வர் தர்மமா? தர்மத்தில் பல வகை உண்டா? எப்படி?

பொய்யே சொல்லாத பழையனூர் வேளாளர் இருந்த தமிழகத்தில், உண்மையைக் காக்கத் தீக்குளித்த இப்பெரியவர்களின் வழித் தோன்றல்கள் நாம்தானா? என்னும் ஐயம் வளரும் வகையில் இன்று உலகெங்கும் காரியங்கள் நடக்கின்றன. பாரதியார் கூறிய படி 'நடிப்புச் சுதேசிகளாக' நாம் எதற்கும் அஞ்சிச் சாகிறோம். தர்மம் எப்படித் தழைக்கும்?

முதலில் தர்மத்தின் பொருளே சரியாகத் தெரியவில்லையே? சாதிப்பெயர்கள் தெருக் களில் இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணத் தில், "நாயர் ரோடு" என்பதில், நாயரை எடுத்து விட, நாம் வெறும் 'ரோடில்' குடியிருப்பது போன்ற நிலையல்லவா இது? தர்மமாக இருக்கவேண்டும் என நினைக்கிறோம். நம் வீட்டுச் சாப்பாட்டைப் பக்கத்து வீட்டுக்கார னுக்குக் கொடு என மதங்கள் இயம்புகின்றன. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு என ஓதுகின்றது தமிழ் மறை. வீட்டிலே பெற்ற தாய் தந்தையரையே வைத்துக்கொள்ள முடியாது வெளியேற்றும் புண்ணியவான்களும், புண்ணிய

வதிகளும் "பகுத்துண்ணும்" தத்துவத்தை எப்படி அறிவர்?

என் சந்தேகம் வலுக்கிறது. எது தர்மம், எது தர்மம், எது தர்மம்? எனக்குச் சந்தேகம் வரும்போதெல்லாம், திருவண்ணாமலை அருள் மலை யோகியார் திரு. இராம் சூரத்குமார் அவர்கள் காலடிகளில் நான் சரண் அடைவதுண்டு. இன்றல்ல நேற்றல்ல. இது ஒரு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறுகிறது.

என்ன அபாயம் வரட்டும். நாக பாணம் உங்களைத் துரத்துகிறதா? அரசன் கணை உங்களைத் துளைக்க வருகிறதா? உங்கள் மூளை உங்களுடன் ஒத்துழைக்க மறுக்கிறதா? உங்களுக்கு ஞாபக சக்தி போய்விட்டதா? "மக்காக" மாறி வருவதாக உணருகிறீர்களா? உலகிலேயே தன்னந்தனியாக நிற்பதாக ஒரு பிரமை ஏற்படுகிறதா? 'இன்றுபோய் நாளை வா' என்று பண்புடன் சொல்லாது இன்றே உங்களைக் கொல்லத் துடிக்கிறார்களா உங்கள் துரோகிகள்; ஓடுங்கள், ஓடுங்கள், வேகமாக ஓடுங்கள். பறந்து போங்கள். எங்கு? அண்ணாமலைக்கு, திருவண்ணாமலைக்கு. அங்குள்ள அருங்குணக்குன்று, மந்திரமலை, அமுத கலசம், காமதேனு, கர்ப்பக விருட்சம், யோகி இராம் சூரத்குமாரின் பாதங்களை நோக்கி ஓடுங்கள்.

விடையே கிடைக்காத கேள்விகட்கு விடை கிடைக்கும்.

என்னைத் 'தர்மம்' இந்த வாரம் ரொம்ப தொந்தரவு செய்துவிட்டது. எது தர்மம், எது அதர்மம் என்று தெரியவில்லையே? "தனி ஒருவன் கொலை செய்தால் அவன் கொலைக் குற்றவாளி. ஒரு பேரினத்தையே அணுகுண்டு வைத்து அழிப்பவன் தர்மமூர்த்தி, தங்கமெடல் பெறும் தேசியத் தொண்டன்" இது எப்படி என்றார் அறிஞர் பால்கிவாலா.

பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? மனித இனத்துக்குப் பைத்தியம் பிடித்தாகி விட்டதே. இன்னுமா பிடிக்க வேண்டும்? என்று மகாத்மாவை அழித்தோமோ அன்றே பித்தம் பிடித்துவிட்டது.

சரி, எனக்குத் தெரிந்த ஒரே மந்திரம் யோகியாரின் நாமஜெபம். ஓடினேன் திருவண்ணாமலைக்கு இந்தத் 'தர்மச் சிக்கலை' விடுவிக்க. ஐந்தே நிமிடங்களில் சிக்கல் தீர்ந்துவிட்டது.

யோகியார் அவர்கள் தனக்கே உரித்தான புன்சிரிப்புடன் என் முதுகைத் தட்டிக் கேட்கிறார்: "என் அருமை மகனே, என் தந்தையார் (Holy Father) உன்னை ஆசீர்வதிப்பாராக. நீ இந்தியாவில், இங்கிலாந்தில்; அமெரிக்காவில் படித்தவன். கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறாயே? இந்தியா, நம் பாரதம் உலகுக்கு ஈந்த கொடை பகவத் கீதையல்லவா? தெளிவாக அதில் தர்மம் எது என்று சொல்லப்பட்டிருக்கிறதே "கர்மாசுகவுசலம்" என்பதே தர்மம் என்கிறது கீதை. எவனொருவன் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணியில் கருமமே கண்ணாகி, கண்துஞ்சாது பசி நோக்காது அப்பணியில் தலைசிறந்து நிற்கிறானோ அதுதான் அவன் தர்மம். "தர்மம் என்பது பிறருக்கு நாம் செய்வது இல்லை. நாம் நமக்கே செய்து கொள்வதுதான் தர்மம்" என்கிறது கீதை என்றார், அண்ணாமலை தீபம் குருநாதர் யோகியார். எனது மாயை உடனே அகன்றது. கீதைப் பேருரை என் கண்முன்னே இமயம் போல் நின்றது. அன்றே கன்பூசியஸ் என்னும் சீனத் தத்துவ மேதை சொன்னார்: "எந்த நாட்டில் தந்தை தந்தையாக நடந்து கொள்கிறானோ, தாய் தாயாக நடந்து கொள்கிறாளோ, மகன் மகனாக நடந்து கொள்கிறானோ, அரசியல்வாதி அரசுடன் ஆள்வதை நிறுத்திக் கொள்கிறானோ, அதிகாரி தன் அலுவலுடன் நிறுத்திக் கொள்கிறானோ அவனவன் மற்றவர் வேலையில் தலையிடாது அவனவன் வேலையைப் பார்க்கிறானோ அந்த நாடு முன்னேறும்".

ஆம், இது கீதையின் மறுபதிப்பு. கண்ணன் கூறிய தர்மம் என்ன, முதலில் பலனைக் கருதாது உன் பணியைச் செய், இரண்டாவது அப்பணியில் நீ மிகச் சிறந்து விளங்கு (கர்மாசுகவுசலம்) அப்படி நீ இருந்தால் உன் வீடு, நாடு உயர்ந்து விடும். நீ உன்னை உயர்த்திக் கொள்ள தானாக நாடு உயர்ந்து விடும்,இதுதான் தர்மம்.

என் கனமான மனம் இலேசானது.

இன்று நம் நிலை என்ன?

நம்முடைய இன்றையக் கவலையெல்லாம் அடுத்த வீட்டைப் பற்றியதுதான். அடுத்த நாட்டைப் பற்றியதுதான். இதையெல்லாம் விடுத்துவிட்டுக் கண்ணன் அன்று கூறியபடி மாக்ஸ்முல்லர் தன் வாக்கிலே கூறுவாரே அப்படி "Do your Duty that too Excellently" என்று ஆரம்பித்துவிட்டால் நம் நாடு ஒரு சொர்க்கபுரியாக மாறி விடாதா? நிச்சயம் மாறும், இது வேறு யார் கையிலும் இல்லை. உன் கையிலும், என் கையிலுமே இருக்கிறது.

நாம் செய்வோமா? செய்துதான் பார்க்கலாமே!

அன்பர்கள் அனுபவங்கள்

1


ஸ்ரீ கர்மயோகி

தமிழ்நாட்டில் பெரும்பாலான அன்பர்கள் அன்னையை 'அமுதசுரபி' மூலமே அறிவார்கள். அன்னையை அறிந்தவுடன் முதற்காரியமாகத் தங்களுடைய தீராத பிரச்னையைத் தீர்க்க முற்படுவார்கள். முதலில் நம்பிக்கையில்லாமல் செயல்பட்டாலும், பிரச்னை தீரும் வகையைக் கண்டு நம்பிக்கை ஏற்பட்டவுடன் அவர்கள் செய்யும் காரியம் இரண்டு. ஒன்று சமாதி தரிசனத்திற்கு வருவது, மற்றொன்று எனக்கு எழுதுவது. அதுபோன்று வந்த கடிதங்களில் சிலவற்றைத் தொகுத்து 'ஆராதனை' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம். அந்தத் தொகுப்பு வெளிவந்தபின் வந்த கடிதங்களை அடுத்த தொகுப்பாக வெளியிட முயல்கிறோம். அத்தொகுப்புகளில் வர இருக்கும் சில கடிதங்களை இக்கட்டுரைகளில் வெளியிடுகிறேன். பெரும்பாலும் அக்கடிதங்களுக்கு விளக்கம் தேவையில்லை என்பதால் கடிதத்தில் வெளியிட வேண்டிய பகுதியை மட்டும் கீழே தருகிறேன். தேவையானால் சிறு விளக்கமும் அளிக்க முயல்கிறேன்.

1. "ஒரு பயங்கர பிரச்னையின்போது நான் மிகவும் தவித்துத் துடித்தபோது அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு வேண்டிக் கொண்டதும், அந்த பயங்கரப் பிரச்னை ஒரு நிமிஷத்தில் தீர்ந்து என்னைக் காப்பாற்றியது. அன்னையைப் பற்றி நிறையப் படித்தேன். படிக்கிறேன். பரிபூரணமாக ஏற்றுக் கொண்டேன். ஸதா சண்டையும், கத்தலும், கடுகத்தனை அமைதியில்லாத தனிமையாக இருந்த வீட்டில் Harmony சுமுகம் பூவைத்து வேண்டிக் கொண்டே வந்ததில் ஆச்சரியகரமான மாறுதல். .... அன்னையைப் பற்றி உணர்ந்த அன்றிலிருந்து பூஜை, விரதம் முதலியன குறைத்து அன்னையை மட்டும் பிரார்த்தித்து வந்தேன். ஜனவரி 12லிருந்து மே 18 வரை எதிர்பாராத மாறுதல் இவரிடம் - கலகல எனப் பேசினார். ஓரளவு பணம் 700 ரூபாய் என்பது 900 ஆக மாறியது. அதிக கண்டிப்பு இல்லாமல் என்னையும் ஒரு மனுஷியாக உணர்ந்து நடத்தினார். .... இதுவரை அன்னையைக் கும்பிடுவதைக் கேலி செய்தவர் அவருடைய பிறந்த நாள் அன்று பாண்டிச்சேரிக்கு வந்துதான் ஆக வேண்டும் என்று கூப்பிடும் அளவுக்கு மாறுதல்."

2. "ஒரு வாரத்திற்குமுன் ஒரு கடிதம் எழுதினேன். அதில் மாப்பிள்ளை, ஜாதகம் எதுவுமே சரியாக அமையவில்லை என எழுதினேன். தங்களுக்கு எழுதிய 15 நாட்களில் தங்களிடமிருந்து பூ வைத்து அனுப்பியிருந்தீர்கள். ஒரு வாரத்திற்குள் கல்யாணம் நிச்சயமாய் விட்டது. நிச்சயம் வருகிற ஞாயிறன்று வைத்திருக்கிறார்கள்."

3. "நான் மூக்கில் ஓர் அறுவை சிகிச்சை செய்துகொள்ள இருந்தேன். ரூ. 1000 /- ஆகுமென டாக்டர் கூறினார். கடன் வாங்கித்தான் செய்ய வேண்டும். இப்பணப் பிரச்னையை அன்னையிடம் ஒரே ஒரு முறைதான் கூறினேன். ஒருநாள் என் தோழியைச் சந்தித்தேன். அவள் அப்பல்லோ ஆஸ்பத்திரியில் வேலை செய்பவள்... அவளோடு அங்கு போய் என்ன செலவாகும் என விசாரித்தேன். ஆப்பரேஷனுக்கு 2000/- ஆக மொத்தம் ரூ. 4000 /- ஆகும் என்றார். தோழி என் நிலைமையை விளக்கினாள். திடீரென டாக்டர் இலவசமாக ஆப்பரேஷன் செய்வதாகச் சொன்னார். Medical Superintendent யிடம்கடிதம் வாங்கி வரச் சொன்னார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முதலில் தடை சொன்ன சூப்பிரெண்டு மனம் மாறி எங்களைப் பார்க்காமலேயே கடிதம் கொடுத்தார்... என்னுடைய தோழி எனக்கு அதிர்ஷ்டம் தான் என்றாள். நான் அதிர்ஷ்டத்தைப் பற்றி நினைக்கவில்லை. அன்னையின் சக்தியைப் பற்றித்தான் நினைத்தேன்... கடைசியில் 4000 ரூ கொடுக்க வேண்டிய இடத்தில் 400 ரூபாய்தான் கொடுத்தோம்."



4. "ஸ்ரீ அரவிந்தர், அன்னை அருளால் எனது மனைவியின் மனநோய் நீங்கி குணம் அடைந்து வருகிறாள். கடந்த 5 ஆண்டுகளாக வாட்டிய நோய் ஸ்ரீஅன்னை அருளால் தற் சமயம் குணமாகி வருகிறது .... எப்படியும் அன்னை நினைவைப் பூரணப்படுத்தினால் அனைத்துப் பிரசனைகளும் தீர்ந்துவிடும் என்ற வேதவாக்கை அவுரங்காபாத்தில் வேலை செய்யும் என் மகன் இன்ஜினியருக்கு எழுதினேன்... தற்சமயம் அவன் பிரச்னை களும் ஸ்ரீ அன்னை அருளால் நீங்கி நல்ல படியாக இருப்பதாக எழுதினான். எல்லாம் ஸ்ரீ அன்னையின் திருவருளே ஆகும்."

5. "நான் ஒரு Diploma in Electronics & Communication மாணவி. நான் 6 மாதத்திற்கு முன் உங்களுக்குக் கடிதம் எழுதினேன். நீங் கள் அன்னை படத்தை என் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அனுப்பியிருந்தீர்கள். என் வேண்டுதல்படி எனக்கு ஒரு மாதத்தில் வேலை கிடைத்தது".

6. "அன்னையின் அருளால் என் பெரிய பெண்ணிற்கு L.I.C.யில் வேலை கிடைத்துள்ளது. B.Com., பரிட்சை முடிந்த அடுத்த நாள் வேலையில் சேர்ந்துள்ளாள். யாருடைய சிபா ரிசும் இல்லாமல் நேரடியாக அவர்கள் வைத்த பரீட்சையில் பாஸ் செய்து கிடைத்திருக்கிறது. நேர்மை, சத்தியம், உண்மை இவைகளைக் கொண்ட அவளுக்கு அன்னை கொடுத்த பரிசு என்றால் அது சத்தியமானது."

7. "என் கணவர் தினமும் குடித்துக் கொண்டிருந்தார். தற்போது குறைத்துவிட்டார். மேலும் ஓர் இடம் வாங்க எண்ணி அன்னையை வேண்டினேன். அதன்படி வாங்கியுள்ளேன்."

8. "நான் ஒரு விதவை. எனக்கு ஓர் மகன். நானும் அவனும் 4 வருஷமாகப் பிரிந்து வாழ்ந்தோம். என்னுடைய வீட்டையும் மகனிடம் ஒப்படைத்துவிட்டு வாடகைக்கு வீடு எடுத்திருந் தேன். மகன் என்னை வந்து பார்ப்பதும் இல்லை, கண்டால் பேசுவதும் இல்லை. அன்னையின் ஆதரவு கிடைத்தபின் நான் அவ்விடம் என் கவலையை விட்டுவிட்டேன். நான் அன்னையை அறிந்து 6 மாதம்கூட இருக்க மாட்டா. ஆனால் என் மகன் என்னைப் பார்க்க 10ஆம் தேதி வந்தான். நான் என் மனமார்ந்த நன்றியை அன்னைக்கு அறிவிக்கிறேன்."

9. "ஸ்ரீ அன்னையின் அருளால் எங்கள் தகப்பனாருக்குக் கால் ஆப்பரேஷன் நன்றாகச் செய்யப்பட்டு குணமாகி வீடு திரும்பியுள்ளார். இந்த 70ஆம் வயதில் அவருக்குக் குணமான வேகத்தை அனைவரும் கண்டு வியந்தனர்."

10. "எங்களுக்குச் சொந்த வீடு அமைய அன்னைக்குக் காணிக்கை அனுப்பியிருந்தேன். அந்த வீடு W.4 நம்பர் வீடு. எங்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. தோல்வியையும் அன்னை கொடுத்ததாக எண்ணி நம்பிக்கை யோடு இருந்தேன். என் வீட்டிலுள்ளவர்கள் முரண்பாடாகப் பேசினார்கள். நான் நம்பிக்கை யோடிருந்தேன். W.4ம் நம்பர் வீடு 1 லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய். நான் வீட்டிற்கு எங்கும் அலைந்தேன். 2 லட்சத்திற்கு மேல்தான் இருந் தது. அன்னையிடம் என் சக்தி உங்களுக்குத் தெரியும். இந்த வீட்டுப் பிரச்னையை நீங்கள் தான் தீர்க்க வேண்டும் என்று வேண்டினேன். 25.6.90இல் பிரார்த்தனை செய்துவிட்டு ஹவு ஸிங் யூனிட்டில் உள்ள ஒருவரைக் கேட்டேன். அவர் Y.4 வீடு இருக்கிறது என்றார். உடனே அன்னையை நினைத்துப் போனேன். 4ஆம் நம்பர் வீட்டைப் பார்த்தேன். வீடு பிடித் திருந்தது. நானே வீட்டார் எதுவும் சொல்லாமல் 27.6.90இல் 20 ஆயிரம் அட்வான்ஸ் கொடுப்ப தாக வாக்குக் கொடுத்தேன். 4ஆம் நம்பர் ஓனர் மதுரையில் இருப்பதால் அவர்களையும் 27.6.90 இல் வரச் சொல்லி எழுதச் சொன்னேன். வீட் டின் விலை 80 ஆயிரம்."

11. "நாங்கள் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள நல்லதொரு இடம் கிடைத்ததும், அதில் அழகானதொரு வீடு கட்டிக்கொள்ள முடிந் ததும், ஸ்ரீஅன்னையின் பேரருளால்தான். வீடு கட்டும் காலத்தில் எவ்வளவோ பிரச்னைகள். அவ்வளவும் ஸ்ரீஅன்னைக்குப் பிரார்த்தனை செய்தவுடன் தீர்ந்துபோயின."

12. "நான் 1987ஆம் வருஷம் ஜூன் மாதம் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதில் எனக்கு இன்னும் திருமணமாகவில்லை என்று எழுதி னேன். அன்னைக்குப் பிரார்த்தனை செய்யும் படி நீங்கள் எழுதியிருந்தீர்கள். அதன்படி அன்னை அருளால் 1987ஆம் வருஷம் ஆகஸ்ட் 19ஆம் தேதி எங்கள் திருமணம் சிறப்பாக நடந்தது."

13. "15 வருடங்களுக்கு முன் ரூ. 2600 கடன் பெற்றவர் இப்பொழுது ரூ. 1600 திருப்பி அனுப்பியிருக்கிறார். எல்லாம் அன்னையின் அருள். என்னுடைய சிறு அசைவிலும் அன்னை யின் உதவி கிடைக்கிறது.

14. "என் கெட்ட பழக்கங்களை லேசாக மாற்ற ஆரம்பித்தேன். மெதுவான நல்ல மாற்றம் தெரிந்தது. தவறான நினைவு வந்தால் அன்னை பெயரைச் சொல்ல ஆரம்பித்தேன். மெதுவாக மற்றவர்கள் என்னிடம் பழகுவதில் நல்ல மாற்றம் தெரிந்தது."

இனி யாருக்காக?

ரஸவாதி

'என்ன இது? இன்றைக் கென்று பார்த்து இன்னமும் இவரைக் காணோமே?'

சாரதா ஜன்னல் வழியே மறுபடியும் பார்த்தாள். அந்த ஓரத்திலிருந்து தெருக்கோடி வரையில் நன்றாகவே தெரியும். ஜன நடமாட்டம் அதிகமாக இல்லாத சாலைதானே?

'நேற்றுக்கூட நாலரைக்கே வந்துவிட்டார். வழக்கம் போலத் தான். ஒருவேளை இன்று ஆபீஸில் வேலை அதிகமோ? அப்படி இல்லையென்றால் ரயில் சரியானபடி கிடைக்க வில்லையோ?'

"ஏன்டீம்மா குழந்தே! அவர் வரத்துக்கு ஏன் லேட்டு? நான் வேணுமானா மெயின் கேட்டுக் கிட்டே போய் நின்னு பாக் கட்டுமா?"

அம்மாவுக்கு ஆதங்கம். பரபரப்பைச் சாமர்த்தியமாக அடக்கியபடி அமரிக்கையாகப் படுத்துக் கொண்டிருக்கும் தன் பெண்ணைப் பார்த்தாள். மாப்பிள்ளை வருகையை எதிர் பார்த்து இனந்தெரி யாத ஒரு பூரிப்புடன் அவள் இருப்பது அம்மாவுக்கா புரி யாது?

"வெட்டி அலைச்சல்! இதோ வந்துடப் போறார். வேணுமானா வராந்தா கோடி யிலேயே இருந்து பாரு. வீணா சிரமப்படாதே".

அம்மாவுக்குத் தெரியும். தான் அருகில் இருந்தாலும் சாரதா தன்னுடன் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை என்று. ஏன் இன்று பகல் முழுவதுமே சரியாக நிறையத் தன்னுடன் அவள் பேச வில்லை. சிறிசுதானே? என் னென்னவோ மனோராஜ்யம் என்று வாய்க்குள் சிரித்துக் கொண்டாள். மகளை இன் னொரு முறை உற்றுப் பார்த் தாள்.

"சாரதா! இன்னிக்கு என்னவோ தெரியலே. நீ ரொம்ம்ம்ப அழகாயிருக்கே!"

திருஷ்டிக் கழிக்க வந்த அம்மாவின் கையை நாசூக் காகத் தடுத்தாள் சாரதா.

"போம்மா! நீ ஒண்ணு. தினம் போலத்தான் இருக்கேன். க்கும்!"

இடது கை தானே கண்ணா டியை எடுத்து முகத்துக்கு நேரே பிடித்தது. அவளுக்கே வெட்கமாகிப் போய்விட்டது. உதட்டோரம் சுழிந்து ஒரு சிறு கீறலில் அதை அடையாளம் காட்டியது.

'உண்மைதான்! நானேதான் ஆசைப்பட்டு, பின்னிவிடச் சொல்லி, முகத்தைத் துடைத்து, பவுடர் போட்டு திலக மும் வைக்கச் சொன்னேன் அம்மாவிடம்.

நேற்று இரவு ராகவன் திரும்பிப் போனதிலிருந்தே மனசு இப்படித்தான் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கிறது. நன்றாகவே தூங்கினேன்.

பார்வை சாலையின் கோடி யில் நிலைத்திருந்தது. மனம் மட்டும் ஒரு தனி உணர்ச்சியில் துளும்பிக்கொண்டிருந்தது.

நேற்று -

அவர் வந்தார். வழக்கம் போல் அதே பரபரப்பு. கைப்பை விசுக் விசுக்கென்று அசைந்தாட, சாரைப் பாம்பு போலச் சரசரவென்று வந்து கொண்டிருந்தார். பாவம்! என்னைப் பார்க்க வருவதில் தான் எத்தனை ஆவல், ஆசை அவருக்கு?

அத்தனை வியர்வைக் கசகசப்பிலும் ஒரு தனி மலர்ச்சி அவன் முகத்தில்.

"மருந்தெல்லாம் மறக்காமே ரெண்டு வேளையும் சாப்பிட் டியா?"

"உம். அதுதானே இங்கே நான் செய்யற வேலையே?"



புன்சிரிப்பு தவழ்ந்த அவள் கன்னத்தை லேசாக ஆசையாக அவன் நிமிண்டினான்.

பையிலிருந்த ஆரஞ்சு, ஆப்பிள் பழங்களைக் கை நிதானமாக எடுத்து மேஜை மீது வைத்தது. முக்கால்வாசி காலியான கண்ணாடி டம்ளரை எடுத்துக் கொண்டு போய் அவனே நன்றாகக் கழுவி புதிதாகத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்து வைத்தான். மெல்லிசான பிளாஸ்டிக் மூடியைத் தன் சட்டையால் நன்றாகத் துடைத்து அதை மூடினான்.

அவருக்குத்தான் எத்தனை ஆசை, எத்தனை சிரத்தை? வியாதிக்காரியான எனக்கு, முடிந்தவரையில் தானே எல்லாம் கவனித்துச் செய்ய வேண்டும் என்கிற ஒரு ஆர்வம்.

சந்தோஷத்தில் மனசு நர்த்தனமாட அவன் முகத்தையே அவள் ஏறிட்டுப் பார்த்தாள். அவருக்குத்தான் எத்தனை சிரமம்? ஒருநாள்கூடத் தவறாமல் ஆபீசைவிட்டு அவசரத்துடன் கிளம்பி ஓடிவந்து எலக்ட்ரிக் ட்ரயின் பிடித்து இந்த ஸானடோரியம் ஸ்டேஷனில் வந்து இறங்கி...

பாவம்! ரொம்ப நல்லவர். இவரைப் புருஷனாக அடைய நான் ரொம்பவும் கொடுத்து வைத்திருக்கிறேன்.

ஒவ்வொருத்திக்கு வாய்த்திருப்பது போலவா நமக்கு?

ஊஹூம். இல்லவே இல்லை.

இன்னும் எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் பரவாயில்லை. ஆமாம். அது ஒரு சிரமமே இல்லை. ஆனால் பெண்ணாகத்தான் நான் பிறப்பேன். இவர்தான் என்னைத் தொட்டுத் தாலிகட்டி –

எல்லாமே இவர்தான் எனக்குச் செய்ய வேண்டும். இங்கிதமறிந்து பாங்கு தெரிந்து நடந்து அவர் மனம் கோணாதவாறு இருந்து என் மூலம் சந்தோஷத்தைத் தவிர வேறு எதுவும் அவருக்குப் போய்ச் சேராமல் நான் பார்த்துக் கொள்வேன். இது நிச்சயம்! சத்தியம்!

சட்டென சாரதா தன்னைச் சுதாரித்துக்கொண்டாள். என்ன பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள்! ஆனால் இந்த வெறும் எண்ணங்களே எனக்குச் சொல்லவொண்ணாத பூரிப்பையும், மகிழ்ச்சியையும் வாரித் தருகிறதே? கொடுத்து வைத்த எந்தப் பெண் பிறவிக்கும் இப்படித் தான் இருக்குமா?

இல்லை! இந்த எண்ணம், உற்சாகம், சந்தோஷம், எல்லாமே எனக்கு மட்டுந்தான் வாய்த்திருக்கிறது. பூர்வ ஜன்ம புண்ணியமா?

திடீரென அறைவிளக்கு ஒளிர்ந்தது. அம்மாதான்! எப்போது உள்ளே வந்தாள்?

"என்னம்மா? மாப்பிள்ளையை இன்னமும் வரக் காணோமே? ஒருவேளை..."

"அதெல்லாம் ஒன்னுமிருக்காது. இதோ வரப் போகிறார். நீ வேணா பாரேன்!" என்று சாரதா சிரித்தாள்.

சாலையோரத்து விளக்குகள் வரிசையாக எரிந்து கொண்டிருந்தன. நடமாட்டம் குறைந்திருந்தது. ஸானடோரியத்துக்கு வந்துவிட்டுத் திரும்பிப் போகும் ஜனங்கள் தான் சற்றைக்கொருதரம் இரண்டு பேர் மூன்று பேர் என்று தனியாகப் போகிறவர் என்று கண்ணில்பட்டனர்.

ஏன் இன்று இவரை இன்னமும் காணோம்? நெடுமூச்சு ஒன்று அவளையுமறியாமல் வந்து உடலைச் சிலிர்க்க வைத்தது.

அதோ தூரத்தில்... யாரோ... கையும் பையுமாக... தள்ளாடியபடி வருவது –

அது யார்? அவரா! ஏன் இந்தத் தள்ளாட்டம்?

கண்கள் நிலைகுத்தி தீர்க்கமாக அந்த மங்கிய ஒளியில் தெருவைப் பார்த்தபோது –

அவர்தான். அவரேதான். ஆனால்...

ராகவன் உள்ளே நுழைந்தபோது ஏனோ அவன் முகத்தில் சுரத்தே இல்லை.

"வாங்கோ! ஏன் இத்தனை நாழி இன்னிக்கு?"

"................"

"முதல்லே உக்காருங்கோ. ரொம்பவும் ஓய்ஞ்சுபோய் வர மாதிரி இருக்கே? ஏன் உடம்புகிடம்பு...?"

ராகவன் பதிலே பேசாமல் நாற்காலியில் சாய்ந்தான். முகம் பேயறைந்தாற்போல இருந்தது. வழக்கமான களையே இல்லை.

சாரதாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"டீ காபி ஏதானும் வரும் போது சாப்பிட்டு வந்தேளா? பசியா இருக்கேளா? அம்மா கிட்டேசொல்லி..."

ராகவன் கையமர்த்தி வேண்டாமென்று ஜாடை செய்தான்.

"ரொம்ப நாழியா காத்துண்டிருக்கும்படி பண்ணிட்டேளே? என்ன ஆச்சு? ஆபீஸிலே ஏதானும்...?" குரல் கொஞ்சிற்று.

மெல்ல தன் புடைவைத் தலைப்பால் அவன் நெற்றியில் வழிந்த வியர்வையை ஒற்றித் துடைத்தாள். ஆர்வத்துடன் அவன் கையைப் பற்றி மெதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

ராகவன் அவளையே வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவள் கை தன்மீது பட்டதற்கு எந்தவித உணர்ச்சிப் பிரதி பலிப்பும் அவனிடம் தெரிய வில்லை.

சற்றுப் பொறுத்து நிதான மாக அவனே பேச ஆரம்பித் தான்.


"சாரதா!"

"என்ன? சொல்லுங்கோ. வரும்போதே என்னமோ போல இருந்தேள். இப்போ இங்கே வந்துங்கூட ஒரு மாதிரியா உடம்பு இருக்கேளே? உடம்பு ஒண்ணுமில்லேன்னா மனசு வேதனைப் படற மாதிரி ஏதானும்..? ஏதாக இருந்தாலும் எங்கிட்டே சொல்லுங்கோ. நமக்குள்ளே அதுக்கு வேண்டிய பாந்தவ்யம் இருக்கே!" படபடப் புடன் அவள் பேசினாலும் பரிவும் பிரேமையும் அந்தக் குரலில் பிரதிபலித்தன.

"சாரதா! என்ன சொல்றது எப்படிச் சொல்றதுன்னு புரியாமே நான்..."

"எதானாலும் எங்கிட்டே சொல்லுங்கோ. ஏன் இப்படி குரல் தடுமார்றது?"

"வந்து... வந்து... நான் மகா பாவி!"



சாரதாவுக்கு ஒன்றும் புரிய வில்லை. என்ன சொல்கிறார்?

"நேத்திக்கு இங்கேயிருந்து திரும்பிப் போனதும்..."

"போனதும்?"

"வீட்டிலே சூழ்நிலையே மாறிப் போயிருந்தது போல எனக்கே தோணித்து!"

"ஏன்?"

"அப்பாவும் அக்காவும் மூஞ்சியை என்னமோபோல வச்சுண்டு உக்காந்துண் டிருந்தா!"

"அக்கா வந்திருந்தாளா?" கணவனின் சகோதரிக்குத் தன்னிடம் அனுதாபம் துளிக்கூட இல்லை என்பது வெகுநாட்களாகவே அவள் புரிந்து கொண்டிருந்த ஒரு விஷயம் தான்.

"சொல்லுங்கோ!"

"வீட்டு வாசப்படி ஏறும் போதே மனசிலே ஏதோ தட்டித்து. அக்காவைப் பார்த் ததும் லேசா பயமே வந்துடுத்து எனக்கு. நல்லதுக்காக அவ வரலேன்னு ஒரு சந்தேகம் எனக்கு".

"அக்கா என்ன சொன்னா?" குரலில் லேசாக பயம்.

என்றைக்குமே அந்த நாத் திக்கு நல்ல மனசு இல்லை என்பது சாரதாவுக்கா தெரி யாது? ஆரம்பத்திலிருந்தே மன வேறுபாடுதான். அவள் நினைத்த பெண்ணைத் தம் பிக்குக் கட்டிவைக்க முடிய வில்லையே என்று நெஞ்சு முழுக்க அவளுக்குக் குறை!

"என்ன சொல்லுவா? கத் தினா".

"என்ன?"

"வியாதியை மறைச்சு வச்சு தாரைவார்த்து கொடுத்துட்டா ளாம் உங்காத்திலே!"

அடிப்பாவி! எவ்வளவு பெரிய பொய்! வியாதியே அப்புறம்தானே வந்தது?

"வார்த்தைக்கு வார்த்தை மலடு மலடுன்னு வேறே சாடினா. ஒரே வேதனை. நீ எதுக்கு இதையெல்லாம் தெரிஞ் சுக்கணும் சாரதா?"

→

"தெரிஞ்சுண்டா தப்பு இல்லே. என்னைப் பத்திப் பேசறது என் காதிலேயும் விழுந்தா நல்லதுதானே?" லேசான சிரிப்பு அவள் முகத்தில்.

"சாரதா..."

"தைரியமா சொல்லுங்கோ. நான் பயப்பட மாட்டேன்!"

ஆனால் அவள் குரலில் சுருதி சற்று குறைந்திருந்ததை அவன் கவனித்தானோ என்னவோ?

"வேண்டாம். சொல்றதைக் கேளு!".

"ஊஹூம்! உங்க மனசு கலங்கும்படியா என்னவோ நடந்திருக்கு நேத்திக்கு. சொல்ல மாட்டேளா?" என்று கெஞ்சினாள்.

"எப்படி சொல்றதுன்னே புரியலே சாரதா. மூளையே குழம்பிப் போயிருக்கு எனக்கு!"

நீங்கள் வந்த தினுசி லிருந்தே அதை நான் புரிந்து கொண்டு விட்டேன். உங்கள் மனசு எனக்குத்தான் நன்றாகத் தெரியும். இத்தனை வருஷ தாம்பத்யத்தில் அதைக்கூடப் புரிந்து கொள்ள முடியாத அசடா நான்?

"நடந்ததை மறைக்காமே அப்படியே அப்பட்டமா சொல் லுங்கோ!"

"சொன்னா..நீ...!"

"ம்! ஆகட்டும். சொல்ல மாட் டேளா?" அவனது தோளைப் பிடித்து உலுக்கினாள்.

"வந்து... மாயவரத்துப் பொண்ணு - அதான் அக்கா வோட சிநேகிதி பொண்ணு... அவளை எனக்கு ரெண்டாந் தாரமா..."

பக்கென்றது சாரதாவுக்கு. இந்த மாதிரிப் பேச்சு குடும்பத் திலே ரொம்ப நாளாவே அடி படறதா? இவர் ஏன் இதுவரை என்னிடம் மூச்சுக்கூடக் காட்ட வில்லை? என்னிடம்... ஒரு வேளை பயமா? அல்லது மனம் வேதனைப்படுமோ என்று தயங்குகிறாரா? மனுஷன் பல் லிடுக்கால் மறந்து போய்க்கூட இன்றுவரை ஒரு வார்த்தை...!

இல்லை. இவர் என் மனம் புண்படும்படி நடக்கவே மாட் டார். பயந்தவர்தான். ஆனா லும் கோழை அல்ல. இத்தனை வருஷமாகப் பழகி நான் இவரைப் பற்றிப் புரிந்து கொண்டது தப்பாகவே போகாது. ஆமாம்.

ராகவன் அவள் கன்னத் தைக் கனிவுடன் தடவிக் கொடுத்தான்.

"அப்புறம்?" என்றாள் அவ ளாகவே.

"அதுக்கப்புறம்தான் ரகளை ஆயிடுத்து!"

அவளுக்குப் புரியவில்லை. ஏன்?

"என்ன ஆச்சு?" மெதுவான குரலில் பரபரப்பை அடக்கியபடி கேட்டாள்.

"நான்... நான்... மொதல்லே பதிலே பேசலே".

"சொல்லுங்கோ. காக்க வைக்காமே கிடுகிடுன்னு நடந்தது பூரா சொல்லிடுங்கோ".

ராகவன் மறுபடியும் தலை யைக் குனிந்து கொண்டான். சாரதா இனம் புரியாத ஒரு உணர்வில் அவன் முகத்தை நிமிர்த்தினாள். அவன் கண் ணையே நேராகப் பார்த் தாள். அவளுக்கு உடம்பை என்னவோ செய்வது போல இருந்து.

"ம்? சரி... மேலே?" மறுபடி யும் தூண்டுதல்.

"அவாளுக்கு ஆத்திரம். அம்மாவும் கூடச் சேர்ந்துண்டது தான் எனக்கே பயமாப் போச்சு".

"ம்...?"

"வாய்க்கு வந்ததை எல் லாம்... வேண்டாம் சாரதா... ப்ளீஸ்!"

"ஊஹூம்! ஒண்ணு விடாமே எல்லாத்தையும் நீங்க இப்போ எங்கிட்டே சொல்லத்தான் போறேள்!"

கண்களில் பயம் மிளிர அவளைப் பார்த்தான் ராகவன்.

"திடீர்னு..." என்று நடுங்கும் குரலில் ஆரம்பித்தான்.

"திடீர்னு?"

"... அம்மா வெறிவந்தவ போலக் கத்தினா!"

"என்னன்னு?"

"எதுக்கும் லாயக்கில்லாத வளை... அதான்... உன் பேரைச் சொல்லி... கட்டிண்டு பைத்தியக்காரத்தனமா மார டிக்கிறேனாம்!"

"நீங்க ஏதானும்..."

"வாயைத் திறக்கவே இல்லை!".

"நீங்கள் வாயைத் திறந்தால் திறந்து என்ன பேசுவது என்று புரிந்து கொண்டு நடந் திருந்தால் எல்லாமே எனக்கு நன்றாக நடந்திருக்குமே? இந்த வியாதி... இது மனோவியாதி தான் எனக்குத் தெரியும்... எனக்கு ஏன் வரப்போகிறது. ஹ்ம்?"

"ஆகாத்தியம் பண்ணி எட்டு ஊருக்குக் கேக்கற மாதிரி கத்திண்டிருந்த அம்மா திடீர்னு கிணத்திலே விழுந்து பிரா ணனை விட்டுடப் போறேன்னு ஓடினா!"

'உங்கள் அம்மாவாவது விழுவதாவது. என்னைத் தள்ள முடியவில்லையே, ஏச்சு பேச்சு போலீஸ் கேஸ் இதெல்லாம் வருமே என்று அவளுக்கு உள்ளூர பயம். தெரியாதா எனக்கு?'

சாரதாவுக்குக் கண நேரம் வெறுப்பாகத்தான் வந்தது கணவன் மேல். ராமர் மாதிரி வாக்குத் தவறாத பிள்ளை இது! இல்லை.. இல்லை... தைரியம் என்பதே துளிக்கூட இல்லாத ஒரு ஆண்பிறவி! தெய்வமாக

மதிக்கிறேனே இவரை! முடியாது என்று மறுத்துவிட ஏன் இவரால் முடியவில்லை?

'நான்தான் தப்பாக எடை போட்டு விட்டேன். ஏமாந்து விட்டேன்'.

ஆமாம். மற்ற எல்லாரையும் போல இவரும் ஒரு சாதாரண மனிதன்தான். பிரியத்தையும் மனப்பூர்வமான காதலையும் இனம் கண்டு கொள்ளத் தெரிந்து இசைந்து பதிலுக்கு நடக்க இயலாத, எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பவர் தான். சுயபுத்தியைத் தைரிய மாகச் செயலில் காட்டத் துணிவில்லாத, பழக்கமில்லாத ஒரு ஜடம், சே! கடைசியில் இவ்வளவுதானா?'

"சாரதா! ஏன் நீ என்னமோ போல..."

'பாவம், இவர் இரண்டுங் கெட்டான். அது புரிந்திருந் தும் இவர்மீது ஆத்திரப்படுவதிலோ, கோபித்துச் சண்டை போடுவதிலோ அர்த்தமே இல்லை. வெறும் அசட்டுத் தனம் அப்படிச் செய்வது!

சட்டென சுதாரித்துக் கொண்டாள். சே! என்ன பைத்தியக் காரத்தனமான எண்ணங்கள். அவர் நல்லவர். சாது. அவ் வளவுதான்.

"ஒண்ணுமில்லை... நீங்க மேலே சொல்லுங்கோ. கடைசீலே சரின்னுட்டேள்! அதானே?"

அவள் பேசிய விதமும் அந்த அமைதியும் ராகவனை ஒருகணம் அயர்த்தியே விட்டது.

"நீங்க செஞ்சது தப்பே இல்லை. ரொம்ப சரி. உங்க மேலே கோபமோ வருத்தமோ எதுவும் இல்லே எனக்கு. நிஜம்மாத்தான்!"

"சாரதா...வந்து...நான்..."

"ஸ்! மேலே எதுவுமே நீங்க பேசவேண்டாம். அவசியமு மில்லே. முதல்லே உங் களை ஆஸ்வாஸப்படுத்திக் கோங்கோ".

கண்ணாடி டம்ளருடன் ஜலத்தை அவனிடம் கொடுத் தாள். அதை வாங்கியபடி தயங்கித் திகைப்புடன் பார்த்த அவனிடம், "இதைச் சாப்பி டுங்கோ. இன்னிக்கு அம்மா வைக்கலே. நானே உங்களுக் காக எப்பவோ எடுத்து வச்ச ஜலம்தான்!" அவள் சிரித்தாள்.

ராகவனுக்கோ உடம்பை சொல்லத் தெரியாமல் என்னவோ பண்ணிற்று. மடமட வென்று குடித்துவிட்டு டம் ளரைக் கீழே வைத்தான்.

அவள் முகத்தில் அலாதி யான ஒரு மலர்ச்சி.

ஆனால் -

உள்ளே பலமான அஸ்தி வாரத்துடன் அன்று அவள்

எழுப்பியிருந்த சுவர் லேசாக ஆட்டம் கண்டது. அந்த நம்பிக்கைச் சுவரிலிருந்து ஓரிரு செங்கற்கள் உதிர்வது போல உண்டான ஒரு பிரமையைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டாள்.

பெரியதாக மூச்சு ஒன்று அவளிடமிருந்து வெளிவந்தது. அடுத்த கணமே கலகலவென்று அழகாகச் சிரித்துவிட்டாள்.

ராகவன் திகைப்பிலிருந்து இன்னமும் மீளவே முடியாத நிலையில் இருந்தான். அவளுடைய பாதிப்பு எப்படி இருக்குமோ, விஷயம் தெரிந்தால் எப்படி நடந்து கொள்வாளோ என்று வரும்பொழுது இருந்த திகில் மட்டும் சற்றுக் குறைந்தாற்போல அவனுக்கே தோன்றிற்று.

"நாளையிலேர்ந்து இந்த நடை உங்களுக்கு மிச்சம்!"

திடுக்கிட்டான் ராகவன். கண்கள் அகன்றன அதிர்ச்சியில்.

"நிஜம்மாத்தான் சொல்றேன்!"

"..............!"

"ஆமா! இனிமே நீங்க இங்கே வரவே வேண்டாம் வரவும் கூடாது. அது தப்பு!"

"சா...ர...தா!".

"உஸ்ஸ்ஸ்!" தன் மெல்லிய விரலால் அவன் உதடுகளை புன்சிரிப்பு மாறாத முகத்தோடு மெல்ல அழுத்தி மூடினாள்.

"உங்களுக்கு வழி பொறந்தாச்சு இனிமே!"

"............"

"வர பொண்ணு நிச்சயமா ஒங்களைப் பாத்துப்பா, என்னைவிட நன்னாவே கவனிச்சுப்பா. துளிக்கூட அதிலே சந்தேகமே எனக்கு இல்லே!"

"என்ன சாரதா இது?"

அவள் பதில் பேசவில்லை. அவன் பையை எடுத்து அவன் மடிமீது வைத்தாள். உடனேயே இயந்திரம் போல எழுந்து நின்று விட்டான் ராகவன்!

"நன்னா இருட்டிடுத்து. ஜாக்கிரதையாப் போங்கோ. மனசைத் தெளிவா வச்சுக்கோங்கோ. என்னைப்பத்தின ஞாபகம் இனிமே சொப்பனத்திலேகூட வரக்கூடாது உங்களுக்கு. புரியறதா? வந்தா ரொம்ப கஷ்டம். தப்பு. ஆமா! சொல்லிட்டேன். பயப்படாதீங்கோ. மனப்பூர்வமா சந்தோஷமாத்தான் பேசறேன்".

அவள் உதடுகள் மீண்டும் அழகாகச் சிரித்தன.

ஆனால் நெஞ்சு கனத்தது. பாதிச் சுவருக்கு மேல் சரிந்து வெறும் கற்களாக அவள் நெஞ்சுக்குள் குவிந்ததாலோ?

அவள் கண்களிலிருந்து எதையுமே ராகவனால் புரிந்து கொள்ள அவனுக்குத் தெரியவில்லை. தெம்பு இல்லை.

'இஷ்டமாவது இருந்ததோ? ஹ்ம்! அது ஏது? இது அம்மா பிள்ளை. இப்படித்தான் செய்யத் தெரியும் இதற்கு. சுதந்திரமாக நினைக்கவோ பேசவோ, நடந்துகொள்ளவோ இனிமேலா அவர் கற்றுக் கொள்ளப் போகிறார்?

படி இறங்கிய ராகவன் வராந்தாவில் சற்று நின்றான். ஒருகணம்தான். பிறகு சாலையில் நடக்க ஆரம்பித்தான்.

வேறு எங்கோ வெற்று வெளியைப் பார்த்துக் கொண்டிருந்த சாரதாவுக்கு ஒரு செகண்ட் சிறு விக்கல் வாய்க்குள். அடுத்த மூச்சு பெரிய நெடு மூச்சாக வந்து அவளைப் படுக்கையில் தள்ளிவிட்டது.

இனி எழுந்துதான் என்ன செய்யக் கிடக்கிறது?

யாருக்குச் செய்ய வேண்டும்?

கானாமல் போன நதிகள்

சி. பன்னீர்செல்வம்

ஆவேசத்துடன் புரண்டு வந்த பேரலை, சடாரென்று சாடி நனைத்துவிட்டுப் பின் னோக்கிப் போய்க் கடலுக்குள் கலந்து, மறு அலை புரண்டு வருவதற்குள் ஆயிரக்கணக் கான ஆண்டுகளின் வரலாற் றுப் பக்கங்களைப் பாய்ச்ச விட்டுப் புரட்டி முடித்து விட்டது, ராஜாராமனின் மனம்.

சீதையைச் சிறைப்பிடித்துச் சென்ற இராவணன்;

அந்தச் சீதையைச் சிறை மீட்டுக் கொண்டு வந்த இராமன்;

படையெடுத்துச் சென்று வந்த மன்னர்கள்;

ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் பிழைப்புதேடி அந்த மண்ணுக்குப் போன மனிதர் கள்;

இன்று துயரத்தின் பிரதி நிதிகளாகத் 'தாயகம்' திரும்பிக் கொண்டிருக்கிற அதே மனிதர் களின் வாரிசுகள்;

அவர்களில் ஒருவனாய் இதோ இந்த சமுத்திரக் கரை யில் அலைகளை எண்ணிக் கொண்டிருக்கிற ராஜாராமன் என்கிற நான்...;

யுகம் யுகமாய்த் தொட ரும் துயரங்கள்; இழப்புகள்! இதென்ன, சாபக்கேடா? விதியா? இன்னும் எத்தனை யுகங்களுக்கு?

நினைக்க நினைக்க மண் டைக்குள் எரிமலைக் குழம்பு வெடித்துச் சிதறுவது போலி ருந்தது.

'இன்று மட்டும்தான் இங் கிருப்பேன்... நாளை, இந்தக் கடலையும் பிரிந்து வெகு தொலைவுக்குப் போய்விடு வேன். அப்புறம்...'

திரும்பத் திரும்ப வந்து மோதிச் சென்ற அலைகளில் ஆங்காரம் மிகுந்திருந்தது. அவ னது கால்களை வாரிச் சாய்த்து கடலுக்குள் இழுத்துச் செல்ல முயன்றது ஒரு பேரலை. "ஐயோ, பெரியவரே!" என்று கூவியபடி ஓடிவந்த மாணிக் கம், அவரைப் பற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

"என்ன பெரியவரே... அலைக்குள்ளே போய் இப் பிடியா சின்னப் புள்ளை யாட்டம் நிப்பாங்க?"

"கடல் என்னை இழுத்துக் கிரும்னு பயந்திட்டியா மாணிக் கம்?"

"பின்னே! தெனமும் கடற் கரையிலே வந்து மணிக் கணக்கிலே உக்காந்திருக்கிற தனாலே கடல் ஒங்களை ஒண்ணும் பண்ணாதுன்னு நெனைப்பா? நல்ல வேளை, போங்க".

"எனக்கென்னமோ என் சாவு கடல்லே இல்லேன்னு தோணுது மாணிக்கம்".

"இல்லாதவரைக்கும் சந் தோசம்தான்! இன்னெக்கி ஒரு நாள் பொழுது... நாளைக்கு இன்னேரம் பாதித்தூரம் போயிருப்பீங்க... அதுக்குள்ள எதுக்கு இந்த விபரீதமெல் லாம்? நாம பட்டனுபவிச்சு வந்திருக்கிற வேதனையெல் லாம் போதாதா?"

"அதைவிடு மாணிக்கம்... எனக்கு டீ குடிக்கணும் போல ருக்கு. வா, கடைத்தெருப் பக்கம் போய்ட்டு வருவோம்".

மணலில் கால்கள் புதையப் புதைய நடக்கத் தொடங்கி னார்கள். ராஜாராமன் அடிக் கடி கடலின் பக்கமாய்த் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

"அருவி, நதி, கடல் - இதை யெல்லாம் ரசிக்கிறதும் நேசிக் கிறதும் தனிச்சுகம் மாணிக் கம்! சில தடவை பார்க்கிற தனாலே மட்டும் இந்த ஆசைகள் தீர்ந்து போகிற சங்கதி இல்லே! என்னோட பர்வதவர்த்தினி தெரியுமா...? சின்ன ஆறுதான்... ஆனா எவ்வளவு அழகு தெரியுமா! கட்டுக்குலையாத காட்டு மரங் கள். கரை நெடுகப் பசுமை. வெகு தொலைவில் மலைத் தொடர். பாக்கப் பாக்கப் பர வசமா இருக்கும். அதைப் பிரிஞ்சு நாற்பது வருசம் கழிஞ்சு போச்சு. ஆனாலும் நேத்து பாத்தாப்ல நெஞ்சுக் குள்ளயும் கண்ணுக்குள்ள யும் அப்பிடியே இருக்கு மாணிக்கம்!"

"பொறந்த மண்ணு மேல இவ்வளவு ஆசை பாசமா இருக் கீங்க. எதுக்கு இந்த நாட்டை விட்டுப் போனீங்க?"

"நானாக ஆசைப்பட்டுப் போகலே, மாணிக்கம்! விதி தான் என்னைத் துரத்திச்சு. விதின்னா, தேசத்தோட விதி! ஒரு பிடி சோத்துக்காகவும் ஒருபிடி மண்ணுக்காகவும் கூடப் பொறந்த அண்ணன் தம்பிக ஒருத்தரை ஒருத்தர்

வெட்டிக் கூறு போட்டுக் கிட்டாங்க. ஒரே கிராமத்தில் பொறந்து வளர்ந்து, ஒரே மொழியைப் பேசினவங்க - ஒரே சாமியைக் கும்பிட்டவங்க - அந்தச் சந்நதியிலேயே பழிக்குப் பழின்னு இறங்கி னாங்க... உன் சாதி பெரிசு, என் சாதி பெரிசுன்னு வீடு களுக்குத் தீ வச்சு அழிச் சாங்க... நான் செஞ்ச தவறு, ரெண்டு சாதிக்காரங்களும் செஞ்சது தவறுன்னு சொன் னதுதான்...! ரெண்டு தரப்புக் குமே நான் எதிரியாகிட்டேன். நான் இந்த நாட்டை விட்டு ஓடினப்போ ரெண்டாம் உலகப் போர் காலம்... ஜப்பான்லே ரெண்டு நகரங்களை அணு குண்டு வீசி நிர்மூலமாக்கி னாங்க... என்னோட ஜென்ம பூமியோ சாதிவெறி, சொத்து வெறிங்கிற நெருப்புலே எரிஞ்ச சாம்பலாகிக்கிட்டு இருந்திச்சு... இந்த வேதனை கள் மட்டுந்தானா? இன்னும் எத்தனை வேதனைகள்! எதைத்தான் மறக்க முடியும்?"

இப்போது ராஜாராமனோடு சேர்ந்து மாணிக்கமும் கடலைத் திரும்பிப் பார்த்தபடி நின்று பெருமூச்செறிந்தான்.

"கேக்கவே அச்சமா இருக்கு! எங்க தாய் தகப்பன் எங்களைப் பெத்து விட்டுட்டு அந்த மண்ணுலயே மாண்டு போயிட்டாங்க... இந்த தேசத் திலே எங்களுக்கு என்ன தெரியும்? கேம்புக்கு வந்து ஆறுமாசமாச்சு... இன்னும் தொழில் கெடைக்கலே! எப்ப கெடைச்சு, எந்த மூலைக்குப் போகப் போறோமோ தெரி யலே. நீங்க ஒண்டிக்கட்டை. பொறந்து வளர்ந்த ஊரு. எப்பிடியாச்சும் பொழைச்சுக் கிருவீங்க" என்றான், மாணிக் கம்...

"மனசு தளராதே, மாணிக் கம்! மேயப்போற மாடுக புல்லைக் கொம்பிலே கட்டிக் கிட்டுப் போறதில்லே. நீயே என்னை இப்ப ஒண்டிக்கட் டைன்னு சொன்னே. நாப்பது வருசம் கழிச்சு எத நம்பிப் பொறந்த மண்ணுக்குத் திரும்பி வந்திருக்கேன்? சொத்து சுகம் கிடைக்கும்ன்னா? இல்ல, மாணிக்கம்! ஒரு ஆசை... ஏதோ ஒரு நம்பிக்கை... ஒரு தேடுதல்... சாகப் போறப்பவும் ஒரு முயற்சி... இதான் மனுசன்!"

"இவ்வளவுக்கும் பிறகு - நாப்பது வருசம் கழிச்சு நீங்க சொந்த ஊருக்குப் போறதை நெனைச்சா ஆச்சரியமா இருக்கு, பெரியவரே! இப்ப யார் ஒங்களை நெனைவு வச் சுக்கிட்டு இருக்கப்போறாங்க?"

"யாரும் வேணாம். என் னோட பர்வதவர்த்தினி இருக் கும். நான் அதிர்ஷ்டக்காரனா இருந்தா பர்வதம் உயிரோட இருப்பா. என்னை அடை யாளம் கண்டுக்கிருவா. எனக்கு அது ஒண்ணே போதும்! பர்வதம் எவ்வளவு அன்பும் அழகும் ஆனந்தமும் நிறைஞ் சவ தெரியுமா மாணிக்கம்! முகஞ்சுளிச்சுப் பார்க்க முடியாது. வாயிலே ஒரு சுடு சொல் வராது! ம்... இந்த நாற்பது வருசமும் என்னமா வாழ்ந்தாளோ! இப்ப எப்பிடி இருக்காளோ!"

"நாளைக்குத்தான் ஊருக் குப் போய் பாக்கப் போறீங் களே - கவலைய விடுங்க!" என்றான், மாணிக்கம்.

"காலையிலேயிருந்து அப் பிடி என்னத்தைதான் கடலுக் குள்ளே தேடுறீங்க பெரிய வரே?" என்ற மாணிக்கத்தின் குரல் கேட்டு மெல்லத் திரும்பி னார், ராஜாராமன்.

"தேடுறவனுக்கு முடிவேது மாணிக்கம்? அலையும் கடலும் மாதிரி அது. ஒரு விசித்திரம் பார்... உலகத்தின் நதிகள் எல்லாமே சங்கமிக்கிற இடம் சமுத்திரமா இருக்கு. பேதங் கள் நிறைஞ்ச மனிதனோட பேதமற்ற சங்கமமா மரணம் அமைஞ்சு போகுது... இதுக் குள்ளே எத்தனை தேடல், எவ்வளவு தூரப் பயணம்! எத்தனை துன்பங்கள்!"

"காலம்பூரா நீங்க எங்க ளோடயே இருந்திரமாட்டீங்க ளான்னு ஏக்கமா இருக்கு. என்னோட முப்பது வயசு காலத்திலே ஒங்களைப் போல ஒருத்தரை நான் சந்திச்சதே இல்ல பெரியவரே! ரயிலுக்கு நேரமாகிருச்சு. கௌம்புங்க" பொழுது வேறே எறங்கிருச்சு".

ராஜாராமன் எழுந்து நின்று சமுத்திரத்தையும் அதன் பரந்து விரிந்த வெளிகளையும் மனசுக்குள் பதிவு செய்து கொள்வதுபோல் பார்த்துக் கொண்டு நின்றார். பிறகு மாணிக்கத்துடன் நடக்கத் தொடங்கினார். அறைக்கு வந்து ராஜாராமனின் ஒரே ஒரு பெட்டியை எடுத்துக் கொண் டான், மாணிக்கம். இருவரும் முகாமைக் கடந்து வெளியே வந்தார்கள். அந்த அகதிகள் முகாமையே பெயர்த்தெறிவது போல் சுழன்று போயிற்று, சூறைக்காற்று... "பாத்தீங் களா, பெரியவரே! காத்துக்கே பொறுக்கலே" என்றான் மாணிக்கம்.

"காலம்ங்கிற வெளியிலே இந்தக் காற்றெல்லாம் எந்த மூலைக்கு? டீ குடிக்கலாம், மாணிக்கம்".

"இன்னைக்காவது என்ன காசு குடுக்க விடுங்க பெரிய வரே!"

"நீயே குடு மாணிக்கம்".

இருவரும் தேநீர் குடித்து விட்டு ரயில் நிலையத்துக்குள் நுழைந்து பெஞ்சியில் உட்கார்ந் தார்கள். வயது வித்தியாச மற்று, நீண்டகால நண்பர் களைப்போல அவர்களிடையே பேச்சு தொடர்ந்தது- ரயிலுக்கு நேரம் ஆக ஆக இனம்புரியாத


துயரம் ஒன்று அவர்களை நெருங்கி வருவதைப்போல் உணர்ந்தார்கள்.

"பெரியவரே! நல்லபடியா போய்ச் சேருங்க... போனதும் மறந்திராமே தபால் போடுங்க. ஊரு ஒத்துவரலேன்னா திரும்பி இங்கயே வந்திருங்க. நாம எல்லாரும் ஒண்ணா எங்கேயாச்சும் போய் பொழைச்சுக்கிரலாம்".

"உன் பேச்சைக் கேட்கையிலே சந்தோசமா இருக்கு. முப்பது நாள்தான் ஒன்னோட பழகியிருக்கேன். ஆனா முப்பது வருஷ சிநேகம்போல மனசு நெறைஞ்சிருக்கு. போனதும் தபால் போடுறேன்... நீ இந்தக் கேம்பிலேருந்து போறதுக்கு முன்னாலே என்னோட ஜென்ம பூமிக்கு வரணும். பர்வதவர்த்தினி ஆற்றிலே நீந்திக் குளிக்கணும்... கரையிலே உட்கார்ந்து மணிக்கணக்கிலே பேசணும். முருங்கைக்காய் குழம்பு வச்சு மணக்க மணக்க சாப்பிடணும். வருவியா மாணிக்கம்?"

"வருவேன்... கட்டாயம் வருவேன்!" என்ற மாணிக்கம் ராஜாராமனின் கைகளைப் பற்றிக்கொண்டு கண் கலங்குகையில் ரயில் வந்து நின்றது.

ராஜாராமனின் மனம் என்கிற ரயிலில் எத்தனையோ பெட்டிகள்; பிரயாணிகள்; சந்திப்புகள்... இந்தக் கணத்தின் கடைசிப் பெட்டியாய், பயணியாய் மாணிக்கம்...!



இயந்திர ரயிலோ இருளைக் கிழித்துக்கொண்டு, ஒவ்வொரு நிலையத்திலும் நின்று, பிரயாணிகளை ஏற்றியும் இறக்கியும் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது. விடிவதற்குச் சற்று நேரம் இருக்கும்போது இந்த ராஜாராமனையும் ஒரு நிலையத்தில் உதிர்த்துவிட்டு மேலும் போய்க் கொண்டேயிருந்தது...

இறங்கி நின்ற ராஜாராமன் அங்கிருந்த சிமிண்ட் பெஞ்சியில் சற்று நேரம் உட்கார்ந்திருந்தார். பெரிதாய் மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை. நாற்பது வருடங்களுக்கு முன் பார்த்த மாதிரிதான் இப்போதும் இருப்பதாகத் தோன்றிற்று. கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்து சாலையில் இறங்கினார்...

முதலாவது மாறுதலாய், மழைக்காலத்தில் சேறாகவும் வெய்யிற் காலத்தில் புழுதியாகவும் கிடந்த செம்மண் சாலையை விழுங்கிவிட்டு அகலமாய், ஒரு நிறத்தில் நீண்டு செல்லும் தார்ச்சாலை... சாலையை ஒட்டி நிறைந்திருந்த குடிசைகள் காணாமல் போய், நவீனமான வீடுகள். அடுக்குமாடிக் கட்டடங்கள். புதிய புதிய தெருக்கள்...

நடக்க நடக்க நகரம் விரிந்து கொண்டே போயிற்று... பஸ் நிலையத்திலிருந்து ரயில் நிலையம் கூப்பிடு தூரந்தானே, அப்போது!

"பஸ் ஸ்டாண்டு எந்தப் பக்கம்?" என்று எதிர்ப்பட்டவரிடம் விசாரித்தார், ராஜாராமன்.

"இதோ சாலையிலே மேற்கே போங்க. ஒரு கிலோ மீட்டர் தூரம்".

ஆச்சர்யத்தோடு மேலே நடந்தார். இந்த நாற்பது வருடங்களில் எத்தனை மாற்றங்கள்! என்ன அசுர வேகம்! பிரமிப்புத்தட்ட வைத்தது நவீன பேருந்து நிலையம்...

ஒருமணி நேரம் கழித்து ஊருக்குப் போவதற்காகப் பஸ்ஸில் ஏறி ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த பொழுது இதயத்தில் ஒருவிதப் பரபரப்பும் பரவசமும் நிரம்பி யிருந்தன.

இன்னும் ஒரு மணி நேர பஸ் பயணம்தான்... பாதி தொலைவில் போகும்போதே அந்தக் கருநீல மலைத்தொடர் தெரியும். நெருங்க நெருங்கத் துள்ளிக் குதிக்கும் பர்வதவர்த்தினியின் அற்புதக் காட்சிகள் விரியும்...

பஸ்ஸின் வேகம் கூடின போது புழுதியும் வெப்பமும் கலந்த காற்று முகத்தில் மோதி வலிக்கச் செய்தது. ஒரு சமயம் இன்னும்கூடப் பலமாக வலிக்கட்டுமே என்று தோன்றிற்று...

செம்மண் சாலைகள் அபூர்வமாய்த் தென்பட்டன. அகலமான தார்ச்சாலை. இரு புறமும் வீடுகள். இராட்சதத் தொழிற்சாலைகள். அவற்றின் கழிவுநீர் தேங்கிக் குளம்போல் காட்சியளித்தது.

அந்த அருவருப்பிலிருந்தும், அதிர்ச்சியிலிருந்தும் அவன் மீள்வதற்குள், வெகு தொலைவில் அந்தக் கருநீல மலைத்தொடர் கண்களைத் தீண்ட, புதுச்சுவாசம் பெற்றான். இதயம் வேகமாய் அடித்துக் கொள்ள விழிகளில் ஈரக்கசிவை உணர்ந்தான். பர்வதவர்த்தினி அவனுக்காக அலைக்கரங்களை விரித்துக் கொண்டு வருவது போலவும், 'மாமா!' என்ற அழைப்போடு பர்வதம் கரங்களை ஏந்திக் கொண்டு ஓடிவருவது போலவும் ஒரு பரவசம் முகிழ்த்து மறைந்து போயிற்று.

இவனுக்கு அப்போது பதின்மூன்று வயது. அப்பா இவனையும் அழைத்துக் கொண்டு யாத்திரை போயிருந்தார். கங்கை, கடல்போல் தோன்றிற்று. மக்கள் வெள்ளத்தைப் பார்த்துப் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

'என்ன ராஜா மலைச்சுப் போய் உட்கார்ந்திருக்கே? இது ரொம்ப புனிதமான நதி. இந்த இடத்துக்குப் பெயர்தான் திரிவேணி சங்கமம்'.

'திரிவேணி சங்கமம்ன்னா என்னப்பா?'

'கங்கை, யமுனை, சரஸ்வதிங்கிற மூணு நதிகளும் ஒன்று கலக்கிற இடம். ஆனா வேத காலத்திலே ஓடின சரஸ்வதியை இப்ப கண்ணாலே பார்க்க முடியாது. அந்த நதி இங்கே பூமிக்குக் கீழே ஓடுறதா நம்பிக்கை. வருசம் தவறாமே இங்க வந்து இந்தப் புனித நதியில நீராடணும் ராஜா'.

'அடுத்தத் தடவை வர்றப்ப நம்ப பர்வதத்தையும் கூட்டி யாரலாம்பா'.

'பர்வதத்தையா? ம்... வா, நீராடலாம்'.

கங்கையில் முங்கினார்கள். கரையோரமாய் நீந்தினார்கள்.

'காலம் பூராவையும் இந்த கங்கைக்கரையிலேயே கழிச்சிரலாம் போலருக்கு' என்றார் பரவசமாய் அப்பா.

'வேணாம்பா. நாம நம்ப பர்வதவர்த்தினிக்கே போயிரலாம்பா" என்றான் ராஜாராமன்.

'நல்லப் பிள்ளை! ஒலகத்திலே எந்த மூலைக்குப் போனாலும் ஒனக்குப் பர்வதமும் பர்வதவர்த்தினியும்தானா!' என்றார் அப்பா.

"பர்வதவர்த்தினி டிக்கெட்டெல்லாம் எறங்கிக்க!" என்ற பஸ் கண்டக்டரின் குரல், அவனது மனக்குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து, நிறுத்தியது.

வண்டியிலிருந்து இறங்கினவன் ராஜாராமன் மட்டும் தான். ஒரு விதப் பரவச உணர்வோடு இறங்கினவன் சில நிமிடங்கள் அப்படியே நின்று விட்டான்.

நிழலும் இருளும் குளிரும் பரப்பிய மரங்களை இழந்த மலைத்தொடரின் வெறுமை, கண்களையும் இதயத்தையும் சுட்டது. ஆங்காங்கே – இளமையிலேயே தலை நரைத்துப் போன மனிதர்களை நினைவூட்டும் – தோப்புகள் என்ற பொருளை இழந்து போன – பனைமரங்கள். தலைகளில் புழுதியை வாரிக் கொட்டிக் கொண்ட சிறுவர்களைப் போலப் புளிய மரங்கள். பரப்புகள் சுருங்கிப் போன ஒற்றை ஆலமரங்கள்... இது தான் என் ஜென்மபூமியா?

அவனுக்கு ஏனோ தரையில் உருண்டு புரண்டு, வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது.

சற்று நேரத்துக்குப் பிறகு நடக்க ஆரம்பித்தான். புழுதி படிந்த சாலை. தோட்டந்துரவுகளை ஆக்கிரமித்துக் கொண்ட வீடுகள். முகத்தைச் சுடும் வெப்பக்காற்று...

எதிரே ஒரு மனிதன் வந்தான். அவனை உற்றுக் கவ்னித்தான். நாற்பது வயதிருக்கலாம். யாருடைய மகனாய் இருப்பான் என்று யோசித்துப் பார்த்தான். புரியவில்லை. தனது குடும்பத்தின் பெயரைச் சொல்லி விசாரித்தான்.

"அட, அந்தக் குடும்பமா? அதைப் பாக்கவா வந்திருக்கீங்க? ம்... ஒரு காலத்திலே கொடிகட்டி வாழ்ந்த குடும்பம்டா அதுன்னு எங்க தாத்தா சொல்லுவாரு. இப்ப அந்தக் குடும்பத்திலே யாரும் இல்லே பெரியவரே!"

"பர்வதம்ன்னு ஒரு பொண்ணு இருந்திச்சே... அவங்க?"

"எந்தப் பர்வதத்தைக் கேட்கிறீங்க?"

"பர்வதவர்த்தினி ஆற்றங்கரையோரம் இருந்திச்சே, ஒரு மச்சு வீடு..."

"ஓ, அந்த வீடா? இப்ப அந்த மச்சுவீடெல்லாம் இல்லே... அந்தப் பர்வதம் அம்மாகூட ரெண்டு வாரத்துக்கு முன்னாலேதான் செத்துப் போச்சு! ஆமா, நீங்க யாரு பெரியவரே?"

"நான் சொன்னாலும் ஒனக்குப் புரியாதுப்பா" என்ற ராஜாராமன், பர்வதவர்த்தினி ஆற்றின் திசையைக் குறி வைத்தவராய் மேலே நடந்தார்... "பர்வதம், பர்வதம்" என்று உதடுகள் முணுமுணுத்தன.

ஆற்றை நெருங்கினதும் திகீரென்றது. பர்வதவர்த்தினி ஆறு சுருங்கி, ஒரு மணற் கால்வாய் போலத் தோற்றம்.

ந்ர. அந்தப் பாலம் சிதைந்து உருக்குலைந்து எப்போது இடிந்து விழுமோ என்ற நிலையில் இருந்தது.

பாலத்தின் மேல் ஏறி நின்று அந்த வெளிகளை வெறிக்கப் பார்த்தார். தொலைவில் ஓர் இளைஞன் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். கைதட்டி அவனைக் கூப்பிட்டார்.

"என்ன பெரியவரே?"

"பர்வதவர்த்தினிங்கிற ஆறு இதுதானே?"

"ஆமா!"

"ஒரு காலத்திலே எவ்வளவு அகலமா இருந்த ஆறு! எப்பவும் சிலு சிலுன்னு தண்ணீர் ஓடிக்கிட்டே இருக்குமே... எதனாலே இந்த ஆறு இப்படி ஆச்சு?"

"அதைக் கேக்கிறீங்களா! பத்துப் பதினைஞ்சு வருசத்துக்கு முன்னாலே மலையடிவாரத்திலே ஒரு அணையக் கட்டித் தண்ணியையெல்லாம் வாய்க்கால் வெட்டிப் பிரிச்சுப் பாசனத்துக்குத் திருப்பி விட்டுட்டாங்க... ஆனா, அணையக் கட்டின பெறகு மழையே கொறஞ்சு போச்சு... அவனவன் ஆத்தை நெருக்கி வெட்டிச் சேத்துக்கிட்டான். எப்பவாவது மழை புயல்ன்னு அடிச்சா இதிலே வெள்ளம் ஓடும்... இல்லேன்னா இப்பிடித்தான்... இன்னும் கொஞ்சக் காலம் போனா மிஞ்சிக்கிடக்கிற இந்த ஆத்தையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டிருவானுங்க..." என்ற அவன் ஆடுமாடுகளை மேய்க்க ஓடினான்.

ராஜாராமன் பாலத்திலிருந்து இறங்கினார். அனலாய்த் தகித்த மணல் சூட்டை விரும்பி அனுபவிப்பதுபோல் சில நிமிடங்கள் அப்படியே நின்றார். பிறகு ஊருக்குள் நடந்தார்.

மத்தியானத்துக்குப் பிறகு கனத்த மேகத்திரள் அந்த மலைத்தொடரை முற்றுகையிடத் தொடங்கிற்று. கிராமத்தின் மீது நிழல் விழுந்தது.

பொழுது சாய்ந்த வேளையில் மறுபடி பாலத்துக்கு வந்தார். வெப்பம் தணிந்த ஆற்று மணலில் வானத்தைப் பார்த்தபடி படுத்துக் கொண்டார்.

'ஒன்னோட மடியில தல வச்சுப் படுத்திருக்கிற இந்த நிமிசமே செத்துரணும் போலருக்கு, பர்வதம்'.

'அப்படியெல்லாம் சொல்லாதீங்க மாமா! நீண்ட ஆயுசோட நீங்க நல்லாருக்கணும். இங்க யாரோ ஒசந்தவங்களா இருந்திட்டுப் போகட்டும். ஆனா எனக்கு ஒசத்தி நீங்க மட்டுந்தான். இன்னெக்கி ராத்திரியே - இப்பவே நீங்க இந்த ஊரைவிட்டு ஓடிப் போயிருங்க, மாமா!'

'ஒன்னையும் இந்தப் பர்வதவர்த்தினியையும் விட்டுட்டு நான் எங்கே பர்வதம் போவேன்?'

'எங்கயாச்சும் போயிருங்க மாமா! இல்லேன்னா ஒங்களை வெட்டிக் கொன்னு கூறுபோட்டுருவாங்க. எங்கருந்தாலும் ஒங்களையே நெனைச்சு வாழ்ந்திருப்பேன், மாமா!'

பூமியின்மீது இருள் கவிந்தது. அந்த இருளையும் பூமியையும் கிழிப்பதுபோல், மின்னல்கள் ஓயாமல் பாய்ந்து வந்தன. மலைத்தொடரைத் தகர்த்தெறிவதுபோல் இடிமுழக்கங்கள் அதிர்ந்தன. கறுத்துத் திரண்ட மேகத்திலிருந்து பேய் மழை பூமியை நோக்கி இறங்கி, மணிக்கணக்கில் நீண்டு, தாக்கிற்று...

மலையடிவாரத்திலிருந்த அணையை மீறிக்கொண்டு, வெகு காலத்திற்குப் பிறகு பாய்ந்த வெள்ளத்தின் சீற்றத்தில், பர்வதவர்த்தினியின் இரு கரைகளும் அதிர்ந்து விரிந்தன.

பாலத்தினடியில் படுத்திருந்த ராஜாராமனின் விழிகளில் அப்போதுதான் தூக்கம் இறங்கியிருந்தது.

"புத்தகங்களை இரவல் தராதீர்!"

வீட்டு நூலகம்



— திரு. ஏர்வாடி இராதாகிருஷ்ணன்

திரு. ஏர்வாடி இராதா கிருஷ்ணன், ஸ்டேட் வங்கியில் பணிபுரியும் இளம் எழுத்தாளர். சிறந்த கவிஞர், நாடகாசிரியர், கட்டுரையாளர், பத்திரிகை – வானொலி – தொலைக்காட்சி ஆகியவற்றில் படைப்புகள் பல படைத்து வருபவர். இவர் வீட்டில் இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கையோ நாலாயிரம்!

இவர் புத்தகங்கள் சேர்த்தது எப்படி?

நடைபாதைக் கடைகளில் நிறையப் புத்தகங்கள் வாங்குவார். அதுதவிர, நண்பர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த நூல்களும், இவர் நடத்தும் 'கவிதை உறவு' பத்திரிகைக்கு மதிப்புரைக்கு வரும் நூல்களும் இவரது புத்தக அலமாரியில் இடம் பெற்றுள்ளன.

பொதுவாக, இவர் நல்ல நூல்களை வாங்கத் தவற மாட்டார். புத்தகக் கண்காட்சி எங்கு நடந்தாலும் அங்கே இவர் இருப்பார். 'நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்' என்பது இவர் கருத்து.

வீட்டில் புத்தகங்களை வைப்பதற்கென்றே அழகிய அலமாரி காட்சியளிக்கிறது.

"என்னிடம் சிறுகதை மற்றும் கவிதை நூல்கள் நிறைய உள்ளன. இவற்றுள் கவிதை நூல்களே மிக அதிகம். சிலம்பொலி செல்லப்பனார் போல, புத்தகங்களுக்கு அட்டை போட்டு வைத்திருக்கிறேன்" என்று கூறும் இவர், பயணத்தின்போது எதை எடுத்துச் செல்ல மறந்தாலும், புத்தகங்களை எடுத்துச் செல்ல மறக்க மாட்டார்.

'புத்தகங்களை இரவல் தரக்கூடாது!' என்பது இவரது கருத்து. அதற்கு இவர் கூறும் காரணம், 'கொடுத்ததைக் கேட்டால் மனத்தாங்கல் ஏற்படுகிறது. அதனால் நட்புறவு பாதிக்கப்படுகிறது' என்கிறார்.

"கவர்ச்சி மிகுந்த இக் கால கட்டத்தில், இளைஞர்களின் கவனம் எங்கேயோ செல்கிறது. அவர்களைக் கவனத்தில் கொண்டு, புத்தகச் சந்தை ஒன்றைக் கவிதை உறவு – உரத்த சிந்தனை மூலம் நடத்தி வருகிறோம். அதற்கு நலல பலன் கிடைத்து வருகிறது" என்கிறார் இவர்.

"புத்தகம் விற்பனையாவதற்கு, வாசகர்களைக் கவர்வதற்குச் சில உத்திகளைக் கையாள வேண்டும். புத்தகத்தைத் தயாரிக்கும் போது, அதன் வடிவமைப்பில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அதே சமயத்தில் பிழை இல்லாமலும் இருக்க வேண்டும். பிழை திருத்தத்திலேயே பிழை இல்லாமலிருந்தால் இன்னும் நல்லது!" என்று கூறும் இவர், "பெரிய பெரிய புத்தகங்களாக வெளியிடுவதைத் தவிர்த்து, சிறு சிறு தொகுதிகளாக வெளியிடலாம்" என்று யோசனை கூறுகிறார்.

"சென்னைத் தொலைக்காட்சியில் 'நூல் நயம்' பகுதி வருகிறது. அதில் சில வகை நூல்களை மட்டுமே மதிப்புரை செய்கிறார்கள். எல்லா வகை நூல்களையும் மதிப்புரை செய்வது நல்லது. 'புத்தகச் செய்தி' என்னும் தலைப்பில் நூல்களைப் பற்றி விரிவாகக் கூறலாம்" என்கிறார் இவர்.

"என் வீட்டு நூலகத்தில் ஒரு நூலைப் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன். அதுதான், டாக்டர் எம்.ஜி.ஆரைப் பற்றி திரு. ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுதிய நூல். இதில் விசேஷம் என்னவென்றால், இந் நூலில் அன்னை தெரசா கையெழுத்துப் போட்டுத் தந்திருப்பது தான்!" என்று பெருமையோடு கூறுகிறார் திரு. ஏர்வாடி இராதாகிருஷ்ணன்.

— பேட்டி : பி.வி.கிரி

ரசமான தகவல்

அந்த நகரத்தில் உள்ள கோடீசுவரரைப் பேட்டிகண்டு, அவர் எவ்விதம் பணக்காரரானார் என்பதுபற்றி அறிவதற்காக பிரபல பத்திரிகைக்காரர் ஒருவர் சென்றார்.

"அதுவா? அது பெரியகதை ஆயிற்றே அதை நான் உங்களுக்கு விவரமாகச் சொல்கிறேன். அதுவரையில் இந்த மின்விளக்கு எரிவானேன்?" என்று சொல்லிக் கொண்டே விளக்கை அணைத்து விட்டார் கோடீசுவரர்.

"உங்கள் கதை எனக்கு அவசியமே இல்லை. நான் வந்த காரியம் ஆகிவிட்டது. வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே பத்திரிகைக்காரர் அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

– "துணுக்கு களஞ்சியம்" என்ற நூலிலிருந்து.

ஆர். மகாதேவன்.

அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி 1992

வெல்வெட் ஷாம்பு நிறுவனத்தாரும் அமுதசுரபி வெளியீட்டாளர்கள் ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து அளிக்கும் இலக்கியச் செல்வர் அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி. **மொத்தப் பரிசு ரூ. 7,000.**

'அமரர் சின்னிக் கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி' 1992 என்று மேல் உறையின்மீது குறிப்பிடவும்.

டிசம்பர் 9'ல் நடைபெற்ற ஸ்ரீராம் டிரஸ்ட் - சுஜாதா பிலிம்ஸ் லிட், இலக்கியப் பரிசளிப்பு விழாவில், வெல்வெட் ஷாம்பு நிறுவனத்தின் தலைவர் ஸி.கே. ராஜ்குமார் சிறந்த சிறுகதைகளுக்குப் பரிசளிப்பதாக அறிவித்தபடி அமுதசுரபி - வெல்வெட் ஷாம்பு நிறுவனம் இணைந்தளிக்கும் சிறு கதைப் போட்டியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

முதல் பரிசு	ரூ. 3000 /-
இரண்டாம் பரிசு	ரூ. 2000 /-
மூன்றாம் பரிசு	ரூ. 1000 /-

தேர்ந்தெடுக்கப்படும் 10 சிறுகதைகளுக்கு ரூ. 100 வீதம் ரூ. 1000.

நிபந்தனைகள்

1. இந்தச் சிறுகதைப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம்.

2. கதை, அமுதசுரபியில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும். (முழு வெள்ளைத்தாளில் பத்து பக்கங்களுக்கு மேற்படாமல்) சரித்திரம், சமூகம், நகைச்சுவை என எந்த வகைக் கதையையும் எழுதலாம்.

3. எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ, மற்றவர்களின் சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவோ இருக்கலாகாது.

4. கதைகளைச் சுருக்கவும், கதைத் தலைப்புகளை மாற்றி அமைக்கவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

5. பரிசு பெற்ற கதைகளின் பூரண காபிரைட் உரிமை 'அமுதசுரபி' வெளியீட்டாளர்களையேச் சாரும்.

6. முழு வெள்ளைத்தாளில் தெளிவான கையெழுத்தில், ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் கதையைத் திரும்பப் பெற கதையுடன் போதிய தபால் தலை இணைக்க வேண்டும்.

7. போட்டிக்கான சிறுகதைகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 4.10.92 முடிவுத் தேதி எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது.

8 போட்டி சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.

9. உறையின் மீது மறக்காமல் 'சிறுகதைப் போட்டி - 1992' என்று குறிப்பிடவும்.

10. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

சிறுகதைப் போட்டி	- 1992
மொத்தப் பரிசு	ரூ. 7,000
கடைசித் தேதி	4-10-92

சிறுகதைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

அமுதசுரபி

த.பை.எண் : 5043

145, லிங்கச் செட்டி தெரு,

சென்னை - 600 001.

ஈரம்

கங்கா ராமமூர்த்தி

"அது எங்கேம்மா? பிரெண்ட் வீட்டுக்கு அனுப்பிட்டியா?"

"இல்லை. இங்கதான் இருக்கான்!"

"ஏம்மா. படிச்சுப் படிச்சுச் சொன்னேனே! மணி ஆறு. அவர் வர்ர நேரம். க்விக். கௌப்பு அதை. ம்".

"அவனைக் கௌப்ப முடியாது லீலா. அவனுக்கு அம்மை போட்டிருக்கு".

வானமே தலையில் இடிந்து விழுந்ததைப்போல லீலா நாற்காலியில் சரிந்தாள். "சனியன், என்னை இது வாழவிடாது. எல்லாம் போச்சு".

"அம்மன் வந்திருக்கிற கொழந்தையைத் திட்டாதேடி. அவரை இன்னொரு நாள் வரச் சொல்லேன்".

"இன்னம் அஞ்சு நிமிஷத்துல இங்க வந்திடுவார். இனிமே என்னத்தைச் செய்ய? தலையெழுத்து, அம்மா. நெஜமாலுமே அதுக்கு அம்மையா, இல்ல நான் கல்யாணம் பண்ணிக்கறது பிடிக்காம சொல்றியா? பளிச்சுனு சொல்லு!"

"ஏண்டி, இது வெளையாடற விஷயமா? கொழந்தை மத்யானமே ஸ்கூல்ல இருந்து வந்துட்டான். பல்லுல பச்சத் தண்ணிகூடப் படல்லே. அம்மா அம்மானு பொலம்பறான். அவனைக் கண்டா கரிச்சுக் கொட்டறே. வெளியூர்ல மாத்தலாகிப் போன. நான் ஏதானும் சொன்னேனா? ஊர்ல இருந்து வந்திருக்க, குழந்தகிட்ட ரெண்டு வார்த்தை பேசினா என்ன?"

"கொழந்தை... இதுக்கும் எனக்கும் எந்த பந்தமும் இல்ல. ஐயோ. அவர் வந்தா என்ன சொல்வேன்?"

வாசலில் பூட்ஸ் ஒலி. லீலா வாசலுக்கு ஓடுகிறாள்.

"வாங்க, பிரகாஷ்" வெளிறிக் களையிழந்த முகத்தில் சட்டென்று ஒரு புன்னகையை மாட்டிக் கொள்கிறாள்.

பிரகாஷ்... உள்ளே வர, லீலா குழப்பத்தில் தவித்தாள்.

வாசல் வராந்தாவைக் கடந்ததும் ஒரு கூடம், பக்கவாட்டில் சிறிய படுக்கையறை... இதில்...

பிரகாஷ் கூடத்தில் காலடி வைக்க...

"பாட்டி, அம்மா ஆபீஸ் போயிருக்காளா பாட்டி?"

ரவி கண் விழித்துக் கேட்க, "ஆமாண்டா கண்ணா, நீ தூங்கு. இப்ப வந்திடுவா..." என்று சாவித்திரி சொல்லிக் கொண்டே கூடத்தில் நின்ற லீலாவையும் பிரகாஷையும் ஒர விழிகளால் பார்க்கிறாள்.

லீலாவின் வயிற்றில் ஐஸ் கத்தி பாய்கிறது. நிலை கொள்ளாமல் தவிக்க, பிரகாஷ் விழி பிறளாமல் ரவிமீது பார்வையைச் செலுத்த...

"பாட்டி, உன் புடவையை அம்மாக்குக் குடேன்".

"ஏண்டா கண்ணா?"

"அப்பத்தான் அம்மாவும் ஒன்னப்போல எங்கிட்ட பேசுவா".

சாவித்திரிக்குக் குலுக்கிப் போடுகிறது. நான்கு வயசுப் பிள்ளையா! இதன் மனசுக்குள் எவ்வளவு தாபம்! எவ்வளவு ஏக்கம்!

பிரகாஷ் நெஞ்சை உலுக்கின ரவியின் சொற்கள். இவன் லீலாவின் குழந்தையா? லீலாவைப் பார்த்தான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவள் உடல் நடுங்கியது தெரிந்தது.

"இந்தக் குழந்தை..."

"இல்லை. இது இது குழந்தை இல்லை. எமன். என் வாழ்க்கையைப் பறிக்க வந்த எமன்".

விருட்டென்று எழுந்து ஓடி, அடியற்ற மரம்போலப் படுக்கையில் விழுந்தாள்.

பிரகாஷ் குழந்தையின் அருகில் சென்றான். சோகம் என்ற புகை படிந்த அழகான ஓவியமாகக் கிடந்த குழந்தையைப் பார்க்க மனத்தைப் பிசைந்தது.

சாவித்திரி அவனையும் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"உட்காருங்கோ. காபி சாப்பிடறேளா?"

"காபி வேண்டாம். ஆமாம், இது லீலாவின் பிள்ளையா?"

இவனிடம் ஆதியோடந்தம் கூறவேண்டுமா? ஒற்றை வரி பதில் போதுமா? என்ன சொல்வது லீலாவுக்குச் சாதகமாக இருக்கும்? நான் சொல்

வதைக் கேட்பதால் இவர்கள் உறவுக்கயிறு இற்றுப் போய் விடுமா? சொல்வது லாபமா? சொல்லாமல் இருப்பது லாபமா?

"லீலாவோட பிள்ளைதான்". கல்லைத் தூக்கிக் கிணற்றில் போட்டாயிற்று. சலனம் ஏற்படாமல் இருக்குமா?


"அப்ப லீலாவுக்குக் கல்யாணம் ஆயிடுத்துனு சொல்லுங்கோ. அவ ஏன் இதை எங்கிட்ட மறைக்கணும்? லீலா உண்மையைத் தைரியமா எதிர்கொள்ளும் பெண்னு நான் நெனைச்சிருந்தேன். அது தவறுனு தோணறது".

"நீங்க நெனைச்சதில தப்பு ஒண்ணுமில்ல. அவ சொல்லாம மறைச்சதிலும் தப்பு இல்ல. இந்தக் குழந்தைக்கும் தனக்கும் பந்தம் இருப்பதா அவ நெனைச்சிருந்தா மறைச்சிருக்க மாட்டா! குழந்தைதான் பிறந்ததே தவிர லீலாவுக்குக் கல்யாணம் ஆகியிருக்கணும்னு கட்டாயமில்லையே!"

"நீங்க என்ன சொல்றேள்?"

சுவரோடாயினும் சொல்லி அழும் நிலையில் சாவித்திரி இருந்தாள்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னால், கல்லூரி கடைசி வருடத்தில் லீலா கொடைக்கானலுக்கு எக்ஸ்கர்ஷன் போனாள். திரும்பும் வழியில் நடுஇரவில் ஒரு இனக் கலவரக் கும்பலிடம் அகப்பட்டுக் கொண்டார்கள். அழுகையும் கூப்பாடுமாக, பெண்கள் ஓடித் தப்பிக்க, ஒரு சிலர் வெறியர்களின் கைகளில் கசங்கிப் போனார்கள். லீலா அதிர்ச்சியால் நிலை குலைந்தாள். கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் படுத்த படுக்கையில் கிடந்தாள். அவள் கர்ப்பமாக இருக்கும் செய்தி பெற்றவர்களைக் கலங்கடித்



தது. சாவித்திரி எப்படியாவது லீலாவுக்கு அபார்ஷன் செய்து விடும்படி டாக்டரைக் காலில் விழாத குறையாகக் கெஞ்சி னாள்.

கருவுற்ற உயிருக்கு ஆயுசு கெட்டி. லீலாவின் பலவீன உடம்பு அபார்ஷனைத் தாங் காது என்று டாக்டர்கள் மறுக்க, லீலாவைப் பெற்றவர் அதிர்ச்சிக்குப் பலியானார். படிப்பைப் பாதியில் விட்டு வேறு இடம் குடியேறி... துக் கத்தைத் தொண்டைக் குழியில் விஷமாகப் புதைத்து... அம்மா வும் பெண்ணும் வளைய வந் தார்கள்.

சுகப்பிரசவம். அழுது அழுது லீலா துடித்தாள். குழந் தையை எங்காவது அனாதை ஆசிரமத்தில் விட்டுவிடச் சொன்னாள். சாவித்திரியின் மனம் கேட்கவில்லை. என்றா வது ஒரு நாள் லீலாவின் இதயத்திலும் தாய்மை மொட்ட விழும் என்று நம்பினாள்.

லீலா குழந்தை கதறக் கதற தாய்ப்பால் கொடுக்காமல் பாலைச் சுவரில் பீச்சுவாள். அவ்வளவு வெறுப்பு.

"நான் லீலாவைப் பார்த்துப் பேசறேன்". பிரகாஷ் எழுந்து படுக்கையறைக்குச் சென்றான். முதுகு அதிர்ந்து அவள் சோகத்தை மௌனமாக ஒலி பரப்ப... இன்னும் அழுகிறாளா?

"லீலா..."

தலை உயர்த்திப் பார்த்தாள். பன்னீர்த் துளிகள் விழுந்த வாடிய புஷ்பமாக...

"நீங்க போயிருப்பேள்னு நெனைச்சேன்" எழுந்து உட் கார்ந்தாள்.

"நாம ஒருவர்க்கொருவர் சரியாப்புரிஞ்சுக்க நெறய இருக் குன்னு நெனைக்கறேன்..."

ஏதோ சொல்வதற்கு முன் னுரை இது. எதுவாக இருந் தால் என்ன இனி என்வரையில் ஒன்றுதான் - என்ற இறுக்கத் தில் முகம் வெறுமை காட்ட லீலா மௌனம் சாதித்தாள்.

"உனக்கொரு குழந்தை இருக்குனு எங்கிட்ட சொல்லவே இல்லியே!"

"அது என் குழந்தையில்லை" என்றாள் வெடுக்கென்று.

"உன் வயிற்றில் ஜனித்தது தானே!"

"வயிற்றில் பூச்சிகள்கூட இருக்கும். அதையெல்லாம் உரிமை கொண்டாடவா செய் கிறோம்?"

"இவன் பூச்சி இல்லை, பிள்ளை".

"இருக்கட்டுமே! எவனோ ஒரு ரௌடியின் வாரிசு. என்னைப் பாழடிச்ச வெறி யனின் வித்து!"

"அந்த வித்தை நீதானே செடியாக்கினே!"

"தப்புதான். முளையிலேயே கிள்ளியெறிஞ்சிருக்கணும்".

"கடவுள் சித்தம் அப்படி. ஒரு உசிரை அழிக்கற வல் லமை ஒனக்குக் கிடையாது. வெறியனின் வித்துனு சொல்



றியே. அதை உன் உடம்பு ஏத்துகிட்டதா இல்லியா? இதை ஒன்னால மாத்த முடிஞ்சுதா? நீ இயற்கைக்கு எதிரா இருக்கப் பார்க்கறே. பூமிமீது எப்படியெல்லாமோ விதைகள் விழுகின்றன. அதற்காகப் பூமி முளை விடாமல் தடுக்கிறதா? இல்லை செடிக்கு ஜீவசக்தியைக் கொடுக்காமல் வஞ்சிக்கிறதா?"

"நான் மண்ணில்லை. உயிரும் உணர்வுமுள்ள பெண்!" லீலா கரைந்து உருகினாள். என்றோ நடந்த பயங்கரங்கள் அவளை ஆவேசம் கொள்ளச் செய்தன.

"மண்ணைவிட மோசமானவள் நீ. துளியாவது ஈரம் இருக்கிறதா? ஈரம் இருந்தா உன் குழந்தைகிட்ட இப்படியெல்லாம் நடந்திப்பியா?"

"மிஸ்டர் பிரகாஷ்! என் குழந்தை என் குழந்தைனு சொல்லி எனக்கு வெறியேற்றாதீர்கள். போங்கள். என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று சொல்லப் போகிறீர்கள். அவ்வளவு தானே! உங்கள் அறிவுரை எதுவும் தேவையில்லை. போய் வாருங்கள்".

"லீலா. நீ தப்பாவே கணக்குப் போடற. வழியை மாற்றிப் போட்டுப் பார். விடை சரியாக வரும். லீலா. உன் வயிற்றில உருவான குழந்தைக்கு எவனோ ஒருவன் தகப்பனா இருக்கலாம். ஆனா அதைக் குழந்தையா உருவாக்கினது நீ... நீ... மட்டுமே! உன் உதிரம் அதன் உடம்பில் ஓடுகிறது. நீ கொடுத்த உணவில் அது மூச்சு விடுகிறது. நீ பத்து மாதம் சுமந்தாய்! பத்து மாதம் வளர்த்தாய்! அதில் உன் பங்கு எவ்வளவு என்று யோசி! அந்த வெறியனுக்குச் சிலநிமிட உறவு. உனக்குப் பத்துமாத பந்தம். இப்போது சொல் ரவி உன் குழந்தையா இல்லையா?"

உலகில் திரைப்படங்களுக்கு 'சென்சார்' இல்லாத நாடு பிரான்சு தான்.

ஆட்டோமொபைல் என்ற வார்த்தையை முதன்முதலாகப் பயன்படுத்திய நாடு பிரான்சு ஆகும். ஆட்டோ (Auto) என்ற கிரேக்க வார்த்தைக்கு "தானாக" என்ற பொருள். மொபைல் (Mobile) என்ற கிரேக்க வார்த்தைக்கு "நகரும்" என்று பொருள்.

–கெ. சு. மணியன்.

ஆறாம் மாதம் எட்டி உதைத்தபோது சில நொடிகளே ஆயினும் புல்லரித்ததில்லையா? அந்தக் கணங்களை நினைத்தாள்! குழந்தையின் அழுகுரல் கேட்டும் திரும்பிப் பார்க்கக் கூடாது என்ற வைராக்கியத்துடன் குலுங்கி அழுததை எண்ணினாள்! 'அம்மா' என்று மழலையில் தலைப்பைப் பிடித்துக் கொண்டு நின்றவனை வாரி அணைக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் வெறுப்பை வளர்த்துக்கொண்டாள்.

இளக்கம் கண்ட மண்ணின் நிலையில் லீலா இருப்பது பிரகாஷுக்குப் புரிந்தது. இப்போது இந்த மண்ணில் எதையும் உருவாக்கலாம்!

"லீலா. நான் ஒரு அனாதை. இதை ஓங்கிட்ட இன்னிக்குச் சொல்றதா இருந்தேன். சூழ்நிலையே மாறிப்போச்சு. மூனு வயசில நான் ஒரு அனாதை ஆசிரமத்துல விடப்பட்டேன். ஆசிரம அன்னையின் அன்புங்கற அமுத ஊற்று என்னைத் துளிர்க்க வைத்தது. இல்லைனா நான் இன்னிக்கு வற்றல் மரமா இருந்திருப்பேன்!"

லீலா ஒரு கதை கேட்கும் சுவாரஸ்யத்துடன் முகத்தில் உணர்ச்சிகள் மாறிமாறி வர...

பிரகாஷ் தீவிரமாகப் பேசலானான்.

"தனி மனிதனுக்குள்ள எழுகின்ற கோபத் தீ... சமுதாயத்துல தகிக்கும் ஜ்வாலையா மாறக் காரணம் ஒரு மனிதன் அடையற வெறுப்புதான்!"

"பிரகாஷ்..."

"முழுதும் கேள். எனக்கு மட்டும் அன்புங்கற ஈரம் இல்லாமப் போயிருந்தா பசி, அது தொடர்பா வன்முறை, கல்லெறிதல், தீவைத்தல், கொள்ளை. எப்படி வேண்டுமானாலும் நான் மாறி ஒரு சமூக விரோதியாயிருப்பேன். அதனாலதான் சொல்றேன். நீ உன் குழந்தையின் நெஞ்சில் விஷத்தை விதைக்காதே. ஒரு வெறியனோ ரௌடியோ பிறப்பதில்லை. அவன் உருவாக்கப் படறான்!"

"பிரகாஷ்... எனக்கென்று ஒரு குடும்பம்... கணவன் – இதையெல்லாம் நான் மறந்துவிட வேண்டும்னு சொல்றீங்களா பிரகாஷ்?"

"யார் அப்படிச் சொன்னது?"

"நீங்க சுற்றி வளைத்து 'நீ ஒரு தாய், அதற்குமேல எதுவும் ஆசைப்படாதே' என்று சொல்ல வருகிறீர்கள்".

"மறுபடியும் தப்புக் கணக்கு போடற. உன்னை ஒரு வெறியன் கசக்கினான் என்கிறாய். அது போன்ற வெறியர்களை உருவாக்குவது உன்னைப் போன்ற நெஞ்சில் ஈரமில்லாத தாய்மார்கள்தான் என்று சொல்ல வருகிறேன். உன் மகன் வெறுப்புக்கு ஆளான குழந்தையாக வளர்ந்து, வாலிபனாக ஆனதும் அவன் கோபம் ஆவேசமாகும். வெறியனாவான். பெண்களிடம் பண்போடு நடந்து கொள்ளத் தெரியாமல் போகும். இன்னும் பல லீலாக்களை அவனும் உருவாக்குவான். காரணம் நீ.

அவனைப் பெற்றவள்! அன்பின்மை எவ்வளவு விபரீதங்களுக்கு வித்தாகிறது யோசி..."

அவன் முடிக்கவில்லை...

லீலா காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

"எனக்கு எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பிரகாஷ்...!"

"போ, உன் குழந்தைக்கு அன்பைக் கொடு. அதை நல்ல பிள்ளையாக வளர்க்கத் துணையாயிரு! அவன் உன் குழந்தை உன் குழந்தை!"

'உன் குழந்தை' என்ற சொற்கள் காது மடல்களில் திரும்பத் திரும்ப ரீங்காரமிட்டது.

"அவன் என் குழந்தை. ஆம். என் குழந்தை" என்று மெல்ல முணுமுணுத்தாள்!

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நிலைப்படியில் நின்றிருந்த சாவித்திரி கண் தளும்ப பிரகாஷைப் பார்த்தாள்!

"அவனை நன்னா படிக்க வைக்கணும். நல்ல மகனா வளர்க்கணும்! இது மாதிரி ஆசையெல்லாம் எனக்கும் இருக்கு லீலா! நீ அவனை மகனா ஏத்துக்காட்டியும் நான் அவனுக்கு அப்பாவா இருக்கத்தான் போறேன்!"

"பிரகாஷ்" நடுங்கும் குரலில் லீலா கூப்பிட...

சாவித்திரிக்குத் தொண்டை அடைத்தது. அவசரமாகத் தண்ணீர் குடிக்க உள்ளே போனாள்! துடைக்கத் துடைக்கக் கண்ணீர் வழிந்தது.

"லீலா, கல்யாணத்துக்குப் பிறகு ரவியோட வர்றேன்னு சொல்லு! இல்லைனா..."

அவள் வைத்த ஒவ்வொரு அடியும் ரவியை நோக்கிச் சென்றது.

தாய்மை அவளுள் மொட்டவிழ்த்தது.

காந்தி மகராஜன்

மூலம் : கவியரசர் இரவீந்திரநாத தாகூர்

தமிழாக்கம் : பாரதிகாவலர் கே. ராமமூர்த்தி

(17.12.1940இல் சாந்திநிகேதனில் தாகூர் எழுதிய காந்தி மகராஜ்)



காந்தி மகராஜன் காலடியொற்றிச்
சென்றவர் நாம்;
கருத்தினில் ஒருபொது நோக்கு
உடையவர் நாம்;
ஏழையர் வீழ்ச்சியில் பொருளினைக்
குவிப்பர் அல்லர் நாம்;
தனவான் தாள்களை நிதம்
பணிபவர் இல்லை நாம்.

தொல்லை தரும் தடியொடு முஷ்டியுயர்த்தி
நம்மொடு
சச்சரவுச் சண்டைக்கு வரும்வேளை
புன்னகை புரிவம் நாம்,
பகர்ந்திடுவம் ;
"துஞ்சும் சிறாரை எழுப்பிடலாம்,
நும்செக்கர் விழிப்பார்வைக் கனல்
பயமெனும் பேய்தனைக் கொன்றிடும்
கண்முன் - என்னாகும்? -?"

நேர்பட நிற்கும்; எளிமையைத் தழுவும்
நம் சொற்கள்;
சட்டக் குழப்பம், அப்படி இப்படியென்று
அதனில் -
பொருளினை மாற்றிடும் தந்திரமில்லை

நேரான குறிகொண்டு வழிகாட்டும்
யாத்ரீகர் நிலையில்
சிறைச்சாலை எல்லைக் கோட்டருகில்
வந்தோர் -
சிறைக்கதவம் முன்ஒரு பாதையென
நின்றோர் -
சின்னாளில் அவமானச் சுமையாவும்
தீர்ந்திடவும்,
பன்னாளாய் நின்றபெரும் கட்டுக்கள்
மண்ணோடு மண்ணாகிச்
சாய்ந்திடவும்,
நெற்றிக்குத் திலகமென அமைந்ததுதான்
காந்திமகராஜன் வழங்கிய
நல் ஆசிகளாம்.

காலக் கப்பலில் கருப்பசாமி

எம். சோலையன்

குப்பனாண்டிபட்டியின் கடைத்தெருவில் நடந்து கொண்டிருந்த கருப்பசாமியின் நெஞ்சில் அந்த முதியவரைப் பற்றிய நினைவு மேலோங்கி இருந்தது. முதல் நாள் இரவில் தொலைக் காட்சியில் காணாமற்போன அந்த முதியவரைப் பற்றி அறிவித்திருந்தார்கள். நரைத்த தலைமுடியும், நீண்ட நரைத்த தாடியும் உடையவராம் அவர்! காணாமற்போன அன்று வெள்ளை வேட்டியும், பட்டு மேல் அங்கவஸ்திரமும் அணிந்திருந்தாராம்.

பேருந்து ஒன்று தூசிப் படலத்தைக் கிளப்பியவாறு அவனைத் தாண்டிச் சென்றது. சற்றுத் தொலைவில் உள்ள நிறுத்தத்தில் நின்றது. அடேடே! அந்தப் பேருந்தில் ஏற முயல்வது யார்? ஒரு கையால் நரைத்த தாடியைத் தடவியபடி, மறு கையால் அங்கவஸ்திரத்தைச் சரி செய்யும் அந்த முதியவர் யார்?

கருப்பசாமி முயலெனத் தாவி ஓடினான். முதியவரின் கையைப் பிடித்து நிறுத்தினான்.

"அய்யா உங்கள் பெயர் உலகறிந்த பெருமாள்தானே?" என்று கேட்டான்.

"ஆமா!" என்றார் முதியவர்.

"வீட்டிலே கோபித்துக் கொண்டு கிளம்பியது நீங்கள் தானே?" என்று மீண்டும் கேட்டான் கருப்பசாமி.

"ஆமா! ஆமா! அதுக்கென்ன இப்போ?" என்று கேட்டார் முதியவர். இதற்குள் பேருந்து அவ்விடத்தை விட்டுப் போய்விட்டது!

"வாருங்கள் சொல்கிறேன்!" என்றபடி அவர் கையைப் பற்றிக் காவல் நிலையத்தை நோக்கி நடந்தான் கருப்பசாமி. கோபத்துடன் ஏதோ முணுமுணுத்தவாறு பின்னால் முதியவர் வந்தார்.

நிலையத்திற்குள் நுழைந்ததும் –


"அப்பா! ஊருக்குப் போவதாகச் சொன்னீர்களே. இங்கே எப்படி?" என்று உரத்த குரலில் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"அதை ஏன் கேட்கிறாய்? பஸ் ஏறப்போகிற நேரத்தில் இச் சிறுவன் வந்தான். உங்க பெயர் ரங்கநாதனா என்று கேட்டான். ஆமாம் என்றேன். 'நீங்க இன்ஸ்பெக்டரோட அப்பாவா' என்ற மறுபடியும் கேட்டான். நான் ஆமாம் என்றேன். இங்கே இழுத்து வந்துவிட்டான்" என்றார் முதியவர்.

கருப்பசாமிக்குத் தலை சுற்றியது. இது என்ன பூகம்பம்? கோபமாகத் தன்னை முறைத்துப் பார்த்த இன்ஸ்பெக்டரிடம் தன் துப்பறியும் ஆர்வத்தையும், நடந்ததையும் விவரமாகக் கூறினான். அதைக் கேட்டு இன்ஸ்பெக்டர் வெடிச்சிரிப்பை உதிர்த்தார்.

"அடே பயலே! என் அப்பாவிற்குக் காது சற்று மந்தம். அதனால் நீ ஒன்று கேட்க அவர் புரிந்து கொண்டது வேறாகப் போயிற்று. இருக்கட்டும். துப்புறிய நாங்கள் இருக்கும்போது உனக்கு ஏன் வெட்டி வேலை? ஓடிப் போ இங்கிருந்து" என்று விரட்டி விட்டார் இன்ஸ்பெக்டர்.

வெட்கத்துடனும் அவமானத்துடனும் ஊருக்கு வெளியில் நடந்து கொண்டிருந்தான் கருப்பசாமி. அப்போது எதிரே ராக்கெட் ஒன்று வெட்ட வெளியில் இருப்பதைக் கண்டான். சரசரவென்று அதன் படிகளில் ஏறி உள்ளே நுழைந்தான். உள்ளிருந்த இருக்கையில் அமர்ந்தான். அது ஒரு காலக் கப்பல் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது.



"வணக்கம். நமது பயணம் எதிர்காலத்திற்கா? அல்லது கடந்த காலத்திற்கா?" என்ற குரல் எதிரிலிருந்த கணிப் பொறியிலிருந்து வந்தது.

"கடந்த காலத்திற்கு -" என்று அவன் வாயிலிருந்து பதில் வந்தது. அவ்வளவுதான்! காதே செவிடாகும்படியான ஒலி எழுந்தது. இருக்கையும் அதிர்ந்தது.

"கடந்த காலத்தில் யாரைச் சந்திக்க வேண்டும்? கரிகாலனையா? நெடுஞ்செழியனையா? சேக்கிழாரையா? அல்லது ராபர்ட் கிளைவையா?..." என்ற கேள்வி அடுத்துப் பிறந்தது.

"கரிகாலனை - " என்று அவன் பதிலளித்தபோது, "வந்துவிட்டோம் காவிரிப்பூம்பட்டினத்திற்கு. இறங்கிடுக. கரிகாலனைக் கண்டு மீண்டும் வருக" என்ற பதில் வந்தது.

கருப்பசாமி இறங்கிப் பார்த்தான். தொலைவில் அரண்மனை தெரிந்தது. அங்கு மக்கள் கூடியிருப்பதும் தெரிந்தது. அருகில் சென்றான்.

"அய்யா, இங்கு என்ன ஒரே ஆரவாரம்?" என்று ஒருவரைக் கேட்டான். அவர் கருப்பசாமியை மேலும் கீழும் பார்த்தபடி,

"மன்னர் கரிகாலனை இளைஞர் என்று ஏளனமாக வழக்காட வந்தவர்கள் கூறினார்களாம். அதனால் முதியவர் ஒருவரை வழக்கில் தீர்ப்புக் கூறுமாறு மன்னர் அனுப்பிவைத்தார். முதியவரின் தீர்ப்பைக் கேட்டு எல்லோரும் வியந்து பாராட்டுகிறார்கள்" என்றார் அவர்.

அப்பொழுது பட்டு அங்கவஸ்திரத்தைப் போர்த்தபடி நரைத்த தாடியுடன் முதியவர் ஒருவர் நடந்து வெளியே வந்தார்.

கருப்பசாமி ஓடி அவரைப் பிடித்தான். "அய்யா நீங்கள் உலகறிந்த பெருமாள்தானே?" என்று கேட்டான்.

அவரோ, "இல்லை, விடப்பா" என்று கையை உதறினார். பதற்றத்தில் கருப்பசாமியின் கையில் முதியவரின் தாடி சிக்கியது - கையோடு வந்தும் விட்டது.

"ஆ! மன்னர் கரிகாலன். முதியவராக வேடமணிந்து வந்து அபாரமான தீர்ப்பைக் கூறியவர் இளைஞர் கரிகாலன்தான்.

வாழ்க கரிகாலன் ஓங்குக கரிகாலன் புகழ்" என்று மக்கள் கூக்குரலிட்டனர்.

"யாரிந்தச் சிறுவன்? விந்தையான உடையிலே வந்திருக்கிறானே. பிடியுங்கள் அவனை" என்று மன்னர் கத்தினார். அதற்குள் கூட்டத்திற்குள் நழுவிக் காலக் கப்பலை நோக்கி ஓடிவிட்டான் கருப்பசாமி.

காலக் கப்பலில் அமர்ந்து, "எதிர்காலத்திற்குக் கொண்டு செல்" என்று கட்டளையிட்டான் அவன்.

"எதிர்காலத்தில் யாரைச் சந்திக்க வேண்டும்?" என்ற கேள்வி பிறந்தது.

"யாரா? என் கொள்ளுப் பேரன்களையும், எள்ளுப் பேரன்களையும்" என்றான் கருப்பசாமி சலிப்புடன்.

"அப்படியே ஆகட்டும். உம்... நீங்கள் இறங்கிக் கண்டு வரலாம்" என்ற பதில் வந்தது அடுத்த நொடியில்.

கருப்பசாமி இறங்கி நடந்தான். தொலைவில் மக்களின் திரளான கூட்டம். நெருங்கிச் சென்று பார்த்தான். குதிரை

மழை பெய்யுது மழை பெய்யுது...

மழை பெய்யுது மழை பெய்யுது
சோ - சோ - சோ
காற் றடிக்குது காற் றடிக்குது
விர் - விர் - விர்!

மின்னல் மின்னுது மின்னல் மின்னுது
பளிச் பளிச் பளிச்
இடி இடிக்குது இடி இடிக்குது
டம் டம் டம்...

ரோட்டு மேலே ரோட்டு மேலே
நீர் நீர் நீர்
காட்டுக் குள்ளும் வெள்ளம் போகுது
பார் பார் பார்...

தோட்டம் காடு மேடு எல்லாம்
நீ ரோட் டம்
வீட்டு மச்சுக் குள்ளும் வந்து
குளி ராட் டம்!

சா. சண்முக பாண்டியன்



வீரன் சாமி பாணியில் ஒரு மண்சிலை நின்றிருந்தது. "என்ன சாமி இது?" என்று ஒருவரைக் கேட்டான் கருப்ப சாமி.

"காலக் கப்பலில் ஏறி மூன்று காலங்களிலும் சஞ்சரித்த எங்கள் முப்பாட்டனுக்கும் முப்பாட்டன் கருப்பசாமி சிலை இது. இங்கிருப்போர் எல்லோரும் அவருடைய சந்ததியினர்தாம்" என்றார் அவர்.

"என்ன வியப்பு! நான்தான் அந்தக் கருப்பசாமி" என்றான் கருப்பசாமி ஆர்வமாக.

"அடே சுண்டைக்காய்ப் பயலே, என்ன வார்த்தை சொன்னாய்? நீயா தெய்வம்? விளையாடுகிறாயா? எங்கள் கருப்பசாமிக்குக் கோழி காவு கொடுப்பதா அல்லது ஆட்டைக் காவு கொடுப்பதா என்றுதான் சண்டை போட்டுக் கொண்டிருந்தோம். நல்லது திமிர்பிடித்த உன்னையே காவு கொடுத்து விடுகிறோம். அடே! பிடியுங்கள் இந்தச் சிறு பயலை" என்றார் முறுக்கு மீசைக்காரர் ஒருவர்.

அவ்வளவுதான் –

அந்த 'பேரக்' கும்பலுக்குள்ளே புகுந்து குழப்பத்தை ஏற்படுத்தித் தப்பிக் காலக் கப்பலுக்கு வந்தான் கருப்ப சாமி.

அப்புறம் என்ன? மீண்டும் தற்காலக் குப்பனாண்டி பட்டிக்கு வந்து விட்டான். பெரும் அபாயத்திலிருந்து அவன் தப்பியதையும், கரிகாலனின் பெருமையை வெளிப் படுத்தியதையும் யாரும் நம்பத் தயாராக இல்லை.

ஏனென்றால் அதற்குப் பிறகு அவன் பயணம் செய்த காலக் கப்பல் காணாமல் போய் விட்டது. ப்ளீஸ் நீங்களாவது நம்புங்களேன். °°

பிறர் திறமை போற்று

சிலந்தி போல வலையைப் பின்ன
நம்மால் ஆகுமா – ஒரு
சிறுத்தை போலச் சீறிப்பாய
நம்மால் ஆகுமா

ஆமை போல உடல் ஒடுக்க
நம்மால் ஆகுமா – ஓர்
ஆந்தை போல இருளைப் பார்க்க
நம்மால் ஆகுமா


குரங்குபோல உடல் ஒடுக்க
நம்மால் ஆகுமா – ஒரு
குதிரைபோல விரைந்து ஓட
நம்மால் ஆகுமா

பறவைபோல பறந்துபோக
நம்மால் ஆகுமா – ஒரு
பல்லிபோல ஒட்டிக்கொள்ள
நம்மால் ஆகுமா

அது அதற்கும் ஒரு திறமை
ஆண்டவன் வைத்தான்
அத்தனையும் ஓரிடத்தே
அமைந்திட மாட்டா

நம் திறனே மேலென்று
தருக்கிட வேண்டாம்
நாம் காணும் பிறர் திறனைப்
போற்றிட வேண்டும்!

சிறுவயல் செயமணி



மூளைக்கு வேலை I

விடுகதைகள்

தங்க நிறத்திருக்கும்
தலையைக் குனிந்திருக்கும்
சிறு காற்று அடித்தாலும்
சிங்காரமாய்ச் சிலிர்க்கும்
வயிற்றுப் பசி மாற்றும்
வள்ளலாய் இது இருக்கும்
– இது என்ன?

தலையை விரித்திருக்கும்
தண்ணீர்க் குடம் சுமக்கும்
அக்கினி வெயிலினிலும்
ஆற்றங்கரை மேட்டிலிருக்கும்
உச்சிமுதல் பாதம் வரை
உடம்பெல்லாம் பயன் கொடுக்கும்
– அது என்ன?

1. நெற்கதிர்.
2. தென்னை மரம்.

ரா. அழகர்சாமி
முத்துராமலிங்கபுரம்



அதிசயப் பிறவி...

பாம்புக் கொத்துப் போலே கடலில்
பாய்ச்சல் காட்டு வேன்
பழுப் புச் சாய மசியைப் பீச்சிப்
பகையை ஓட்டுவேன்.

பவளத் திட்டில் பள்ளம் தோண்டிப்
பதுங்கிக் கொள்ளுவேன்
பசிக்கு மீனும் நண்டும் தின்று
பம்மித் துள்ளுவேன்.

நிலை கொள்ளாமல் நீர்க்குள் மேனி
நிறங்கள் மாறுவேன்;
நினைத்தால் உடலைத் தட்டையாக்கி
நிலத்தில் ஊருவேன்.

எனக்கு வார எட்டுக் கைகள்
எலும்புகள் இல்லை.
என்னைத் தின்ன விரும்புவோரால்
எத்தனை தொல்லை!


அக் வாரியம் விட்டே வந்த
அருமை ஆக்டபஸ்
ஆட்கள் தேடி வருவதற்குள்
ஆவாயே வாபஸ்!

லெமன்

படிப்பின் பயன்...

ரா. பொன்ராசன்

நிறைய நிறைய நிறைய அவன்
படித்தவன் – பிறர்
நினைப்பதற்கும் மேலே திறம்
படைத்தவன்
அறிவுலகில் மிக மிகவும்
சிறந்தவன் – ஆனால்
அடிப்படையில் ஒன்றே ஒன்றை
மறந்தவன்.
தாய் மொழி போல் பத்து மொழி
பேசுவான் – எந்த
தகவலையும் நொடியில் அள்ளி
வீசுவான்.
ஆயகலை அத்தனையும்
அறிந்தவன் – ஆனால்
ஆண்டவனை மட்டும் தொழ
மறந்தவன்.
எத்தனைதான் படித்திருந்த
போதிலும் – அந்த
இறைவன் பாதம் மட்டும்
தொழ மறந்திடின்
எள்ளளவும் அதனால் பயன்
இல்லை யாம் – நம்
இனிய தமிழ் வேதம் அதைச்
சொல்லுதாம்!



கற்றதனால் ஆய பயனென்கொல் – வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். குறள்

கெட்டிக்காரக் குட்டி நாடு

சூரியன் முதலில் உதிக்கும் நாடு என்று எந்த நாட்டை சொல்வார்கள்? உலகத்தி லேயே எந்த நாட்டில் மிக அதிகமாகக் கப்பல்கள் கட்டப் படுகின்றன? உலகத்திலேயே மிக அதிகமான வேகத்தில் ஓடும் ரயில்கள் உள்ள நாடு எது? இவ்வளவுக்கும் விடை – ஜப்பான்.

எரிமலைகள் மிகுந்த நாடு என்றும் இரண்டாம் உலக யுத்தத்தில் பெரும் சீரழிவுக்கு உள்ளான நாடு என்றும் கருதப்படும் இந்த ஜப்பான் – எல்லாத் தடைகளையும் மீறி இன்று உலகத்தின் முன்னணி யில் நிற்கிறது. 92 ஜூனில் நம் பாரதப் பிரதமர் இந்த நாட்டின் தொழில் நகரமான ஒகாசா வுக்குச் சென்றபோது அவரை ஒரு விசித்திரமான பிரமுகர் கை குலுக்கி வரவேற்றார். ஆங்கிலத்தில் வரவேற்புரை சொன்னார். அது மட்டுமல்லா மல் ஒரு சில நிமிடத்துக்குள் நம் பிரதமரின் உருவப் படத்தையும் வரைந்து விட்டார். இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது என்கிறீர்களா?


இவ்வளவும் செய்தவர் – மனித இனத்தவர் அல்ல. ரோபோ(ட்) என்னும் இயந்திரம்.

ஜப்பானியர்களுக்கு வெறும் பேச்சு அறவே பிடிக்காது. செயல்தான் அவர்கள் உயிர் மூச்சு. தேசிய கீதம் பாடக்கூட அவர்கள் அதிக நேரம் எடுத் துக் கொள்வதில்லை அவர் களின் தேசிய கீதம் நான்கே வரிகளைக் கொண்டது. அந்த ஜப்பானியர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய்ய்ய்ய இருக்கிறது.

மு. மோகனசுந்தரி,
திருச்சுழி.

அனுபவம் புதுமை

கட்டடத் தொழிலில் பல்லாண்டு பெற்ற அனுபவம், வீடு – மனை விற்பனையில் பன்னிரண்டாண்டு கற்ற அனுபவம், 'யுவர்ஸ் ஃபெய்த்ஃபுலி' என்ற பெயரில், 'பி.ஜே. கன்ஸ்ட்ரக்ஷன்' போன்ற பிற கட்டட நிறுவனங்களின் விற்பனை முகவராக இருந்தபோது தாமே இந்தக் கட்டடத் தயாரிப்பில் ஈடுபடலாமே என்றெழுந்த எண்ணத்தைச்செயலாக்கி 'அபினவ் அசோஸியேட்ஸ்' என்ற நிறுவனத்தைத் துவக்கி நடத்திய அனுபவம் இவற்றின் பின்னணியில், ஆர்வம் மிகுந்த திரு. சி. நடேசன், 'சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்' என்ற தகுதியுடன்கூட, எந்தத் துறையிலும் ஏற்றம் பெறும் வேகம் நிறைந்த திரு. டி.வி. கிரிராவ் – இருவரும் மூன்றாண்டுகள் முன்பு இணைந்த அனுபவம் தந்த நிறுவனம்தான், 'அனுபவ் ஃபவுண்டேஷன்ஸ்' (ANUBHAV FOUNDATONS). வீடு வாங்குபவர்களுக்கு நியாயமான விலையில் தரமான வீடு கிடைக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கும். அதை நிறைவேற்றுவதே தங்கள் நோக்கம் என்கிறார்கள் இவர்கள். 'உள்ளதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம் வேறொன்றும் தெரியாது' என்கிறார்கள்.




திரு. சி. நடேசன்




வீட்டு விலையில் முதலில் குறிப்பிடுவதைப் பிறகு மாற்றுவது கிடையாது என்கிறார்கள். சில கட்டட நிறுவனங்கள், வீடு வாங்க வருபவர் தரும் முன் பணத்தைக் கொண்டு, மற்ற இடங்களில் மலிவாக மனை கிடைத்தால் வாங்கிப் போடுவதில் முதலீடு செய்து விட்டுக் கையிலிருக்கும் திட்டத்தை முடக்கி, பிறகு இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் இடு பொருட்களின் விலை உயர்வைக் காரணம் காட்டி, வீட்டு விலையை ஒப்பந்த அளவிற்கு மேல் உயர்த்தி விடுவதைச் சுட்டிக் காட்டியபோது, "அது எங்கள் பழக்கமில்லை; மனை வாங்குவதில் நாங்கள் மொத்தமாக முதலீடு செய்து, திட்டங்களைத் துரிதமாகச் செயலாக்கி, அப்படியே விற்று விடுகிறோம். தவிர, தவிர்க்க முடியாமல் ஏற்படும் இடு பொருட்களின் விலை உயர்வைக் கூடச் சமாளிக்கும் விதத்தில் எங்கள் லாப அளவை முன்பே நிர்ணயித்து விடுகிறோம்" என்கிறார்கள்.

கட்டுமான அளவுகள், விவரங்கள் ஆகியவற்றிலும்கூட கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே தங்கள் கொள்கை என்றார்கள். பிரதான பகுதியைத் தேர்ந்தெடுத்து அடுக்கு வீடுகள் கட்டுவதும், நேர்த்தியான கட்டடக்கலை நுணுக்கங்களை வெளிப்படுத்தும் (ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு கட்டடக் கலை வல்லுநரின் கைவண்ணம் கிடைக்கச் செய்கிறார்களாம்),



டி.வி. கிரிராவ்



ஊகங்களுக்கு இடந்தராத தெளிவான ஒப்பந்தங்களைப் போடுவதும், சிக்கலற்ற உரிமைப் பத்திரங்களை உறுதி செய்வதும் தங்கள் சிறப்பான அம்சங்களில் சில என்று குறிப்பிட்டார்கள். மொத்தத்தில் நான்கு லட்சம் சதுர அடி கட்டுமானம் கொண்டவையும், நாற்பது கோடி ரூபாய் வருமானம் தரத் தக்கவையுமான நாற்பது திட்டங்கள் கைவசம் இருப்பதாகத் தெரிவித்தனர். நங்கநல்லூரில் உள்ள 'அனுஷா' கட்டடத்தில் பிளாட் வாங்கியிருப்பவர்கள் (புதிதாக அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோயில் அர்ச்சகர் உட்பட) இவர்களின் முழுமையான கட்டடத் திறனை வெகுவாகப் பாராட்டி, 'அனுபவ்' நிறுவனத்தினருக்கு விருது கொடுத்து உபசரித்தனராம். தற்போது கோவை நகரிலும் கட்டுமானப் பணியில் ஈடுபடுவதாகக்கூறினார்கள்.

இப்போது புதுவெள்ளமாய்ப் புறப்பட்டிருக்கும் 'பிளான்டேஷன்' விற்பனையிலும் 'அனுபவ்' தனி முத்திரை பதிக்க இருக்கிறதாம். (ANUBHAV PLANTATIONS) 'அனுபவ் பிளான்டேஷன்ஸ்' என்ற பெயருடன் இத்தொழிலில் அவர்கள் ஈடுபடக் காரணம்?

வீடு கட்டும் தொழிலில் உச்சநிலை எட்டப்பட்டு விட்டதால் தான் எங்கும் இத்தகைய தொழில் துவக்கப்படுகிறதா என்ற நம் சந்தேகத்தை வன்மையாக மறுத்தார்கள். "பொதுவாக வீடு கட்டும் தொழில் அப்படியொன்றும் உச்சநிலையை எட்டி விடவில்லை. இதுவரை கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள், மக்கள் தொகையின் பத்து சதவிகிதத்தினரின் தேவையை நிறைவு செய்யத்தான் போதுமானவை" என்று புள்ளி விவரத்தை நீட்டினார்கள். "குறிப்பாக, எங்களைப் பொறுத்தவரை, வருமானத்தைப் பெருக்குவதற்கென்றும் இதில் நாங்கள் ஈடுபடவில்லை. வீடு கட்டும் தொழிலில் நாங்கள் பெறும் வருமானமே கணிசமானது தானே?" என்று வாதிட்டார்கள்.


சரி, பெரும்பாலும் எல்லா நிறுவனங்களும் தேக்குமர விற்பனையில் ஈடுபடுவதேன்?

"வளைகுடா நாடுகளுக்குப் பெட்ரோல்போல் இந்தியாவிற்குத் தேக்கு என்று கூறலாம். நம் தேசத்தின் செல்வம் தேக்கு. அதன் வளர்ச்சிக்கு உகந்த மண்வளமும், நீர்நிலையும் பருவச் சூழலும் இங்கு தான் உண்டு. மேலை நாடுகளில் இந்த இயற்கையின் கொடை இல்லை, ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாம் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தேக்கு மர உற்பத்தி மிகவும் குறைந்து விட்டதால், இந்திய அரசே தன் அலுவலகங்களில் மரச்சாமான்களுக்குத் தேக்கு கூடாது என்று உத்தரவிடும் நிலை. இது மாற வேண்டாமா? விற்பனையும், வருமானமும்தான் எங்கள் நோக்கங்கள் என்றெண்ணி விடாதீர்கள். தேச நலன் என்ற உயரிய கண்ணோட்டமும் உண்டு எங்களுக்கு.

நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள அக்ரோ 1500 திட்டத்திற்கான, போடிநாயக்கனூரில் ஆண்டுக்கணக்கில் தரிசாகக் கிடந்த நிலங்களை வாங்கிப் பண்படுத்திப் பயிரிடவிருக்கிறோம். தேக்கு மட்டுமின்றி பப்பாளி, திராட்சை உள்ளிட்ட பழப் பண்ணையும், மருக்கொழுந்து உள்ளிட்ட மலர்ப் பண்ணையும் அங்கே வரும். சுமார் ஐந்நூறு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும், இருபதாண்டுக் காலத்தில் எழுபதாயிரம் தேக்கு மரங்களை உற்பத்தி செய்யவும், தமிழகத்தில் வருமானத்தில் 525 கோடி ரூபாய் உயர்வைக் கொண்டு தரவும் நாங்கள் முற்படுகிறோம்" என்று அடுக்கினார்கள்.

பழப்பண்ணையும் மலர்ப்பண்ணையும் இதில் சேரக் காரணம் கேட்டோம். பப்பாளியிலிருந்து தயாரிக்கப்படும் 'பப்பைன்' என்ற ரசாயனப் பொருள், உயிர் காக்கும் மருந்துகளின் தயாரிப்பிலும், பீர் பெருக்கும்

தொழிலிலும் மெத்தப் பயன்படுகிறதாம். இதற்கு அயல் நாடுகளில் அதிக வரவேற்பு உண்டாம். அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் பேசி வந்திருக்கும் திரு. சி. நடேசன் கூறுகிறார்: "ஸ்காண்டிநேவிய நாடுகளில் உள்ள புகழ்பெற்ற பீர் உற்பத்திச் சாலைகளுக்குப் போயிருந்தேன். அங்கே பப்பைனுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. ஜெர்மனியிலும் அப்படியே". மருக்கொழுந்திற்கும் ஏற்றுமதி யோகம் மணம் வீசுகிறதாம்.



"மற்ற பிளான்டேஷன் திட்டங்களில் முதலீடு செய்பவர்கள், பயனை நுகர்வதற்கு இருபதாண்டு காலம் காத்திருக்க நேரும். ஆனால் எங்கள் அக்ரோ 1500 திட்டத்தில் சேர்பவர்களுக்கு, ஐந்தாண்டுகளிலேயே பலன் கிடைக்கத் தொடங்கும். யூனிட்டை வாங்குபவரின் முதலீட்டில் ஒரு பகுதியை எளிதில் பணமாக்கக் கூடிய அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்து விடுகிறோம். மேலும், பழப்பண்ணை, மலர்ப் பண்ணையிலிருந்து குறுகிய காலத்திலேயே வருமானம் பெறமுடிவதால், முதலீட்டாளருக்குத் தொடர்ந்து வருமானம் கிடைக்கிறது. அது தவிர, இருபதாண்டு முடிவில் ஒரு 'யூனிட்' வாங்கியவருக்கு முப்பது கன அடி தேக்கு மரமும் உடைமையாகிவிடும். இயற்கையின் சீற்றத்திலிருந்து முதலீடுகளைப் பாதுகாப்பதற்கு தகுந்த நஷ்டஈடு தர வகை செய்கிறோம். வறட்சி வரும் வாய்ப்பே இல்லை. வருடந்தவறாமல் நல்ல மழை பொழியும் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் தேக்கடி அருகே அமைந்திருக்கிறது எங்கள் பண்ணை. தேக்கடி என்ற பெயரிலேயே தெரிகிறது அல்லவா, அந்தப் பகுதி தேக்கு வளர்ச்சிக்கேற்றது என்று?

இத்தகைய 'தோட்டங்களில்' முதலீடு செய்ய விழைபவர் மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதா என்று கேட்டறிய வேண்டும்; நாங்கள் அதற்குரிய அறிக்கையை வைத்திருக்கிறோம். தண்ணீர் வசதி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்; கடந்த முப்பதாண்டுகளில் பெய்துள்ள மழை அளவு குறித்த அறிக்கை எங்களிடம் உண்டு. தவிர சொட்டு நீர்ப் பாசன முறையை, பழப்பண்ணையில் பின்பற்றுகிறோம். பூச்சிகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் பயிர்களைப் பாதுகாக்க, நவீன முறையில் தடுப்பு நடவடிக்கைகள் தயார். எல்லாவற்றுக்கும் மேலாக 'அனுபவம்' செறிந்த தோட்டக்கலை நிபுணரின் வழிகாட்டுதலுடனே, நாங்கள் அந்த வனப்பகுதியை வளப்பகுதியாக மாற்றமுனைந்திருக்கிறோம்.

இதுவரை இத்திட்டத்தில் 10,000 பேர் சேர்ந்தாயிற்று. அனுபவ் தோட்டங்களில் முதலீடு செய்ய நம் நாட்டின் பிற மாநிலங்களிலிருந்து மட்டுமல்ல பல,மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் இந்தியரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வந்து குவிகின்றன என்று அறிகிறோம். தோட்டம் அமைந்துள்ள எழிலார்ந்த சூழ்நிலையில் வசதி மிக்க தங்கும் விடுதிகளை அமைத்து உல்லாச விடுமுறை அனுபவிக்க ஆசைப்படும் முதலீட்டாளர்களுக்கு லாப நோக்கற்ற கட்டண விகிதத்தில் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்கிறோம்" என்று தெரிவிக்கிறார்கள்.

இப்போது பிறந்திருக்கும் இவர்களின் மற்றொரு குழந்தை, 'அனுபவ் ரிசார்ட்ஸ்' (ANUBHAV RESORTS)_ கொடைக்கானலில் இருபது ஏக்கர் பரப்பில், இதமான சுடுநீரிலான நீச்சல் குளம், உடற்பயிற்சி அரங்கம், கோபுர சிற்றுண்டிச் சாலை, டிஸ்னிலாண்ட் போன்ற கேளிக்கைமிகு பூங்கா இத்தகைய வசதிகளை அனுபவிக்கும் வண்ணம் இருநூறு விடுதிகளைக் கட்டி, டைம் ஷேரிங் முறையில் 99 ஆண்டுகளுக்கு குத்தகை விடப் போகிறார்கள். குத்தகைதாரர்கள் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் வந்து தங்கிச் செல்லலாம். குன்னூர், குற்றாலம், லோனாவாலா, டார்ஜிலிங் என்று பட்டியல் தொடருமாம்.


"இந்த மூன்று நிறுவனங்களின் குறிக்கோள் ஒன்றே; எங்களிடம் வீடு, தோட்டத்தில் பங்கு, தங்கும் விடுதி,எது வாங்கினாலும், நாங்கள் நம்பகமானவர்கள், நாணயம் உடையவர்கள் என்பதை அவர்களின் அனுபவம் உணர்த்த வேண்டும் என்பதுதான் அது" என்று முத்தாய்ப்பு வைத்தார்கள்.

வட்டத்தோணி




பால் நிலவொளியில்
படகோட்டியின் இதயம் துடிக்கிறது.

சமுத்திர ராஜனின்
கைகளைப் போலவே
நதியலை அசைகிறது.



கனவினில் மிதக்கும்
காதலி இதயம்
விழிகளில் குதிப்பதைப் போல்
பனிவிழும் நேரம்
கரைதொடும் தோணி...! - அங்கே

நதியில் நிலவு... முகம் பார்க்கும் - அலைகள்
நாளைய உதயத்தின் இசை சேர்க்கும்.



வட்டத்தோணி ஒன்று - ஓடத்
துறையைத் தாண்டி வந்து
வாடைக் காற்றில் பயணம் போகிறது.

நட்ட நடுநிசியில் - ஒளிக்
கற்றை நட்சத்திரச் சுடர் நிழலில் - அது
கடலை நினைத்துக் கொண்டே
நதியில் மிதக்கிறது.

கயல்மீன்கள் கடல்மீன்கள்
ஆகும் வெறியில்
புயலின் துளிகள் போல்
வலையைச் சிதைக்கிறது.

ஒற்றைத் துடுப்பால்... வறுமையின்
வெற்றிடம் தாண்ட

கவியரசு நா.காமராசன்

உங்கள் ராசி பலன்

பாலஜோசியர்
வித்வான். வே. லட்சுமணன்

			செவ் கேது
	கிரகநிலை		
சனி			
ராகு	சுக்	சூரி புத	குரு

17-10-1992 முதல் 15-11-1992 வரை. ஐப்பசி மாதம் 1 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை

கிரக மாறுதல்

24-10-1992 முதல் விருச்சிக – புதன்
29-10-1992 முதல் விருச்சிக – ராகு
29-10-1992 முதல் ரிஷப – கேது
3-11-1992 முதல் கடக – செவ்வாய்
8-11-1992 முதல் தனுசு – சுக்கிரன்
11-11-1992 முதல் புதன் வக்கிர ஆரம்பம்.

17-10-1992 அன்று கிரக பாதசாரம் :

சூரியன் – சித்திரை 3, சந்திரன் – மிருக சீரிஷம் 3, செவ்வாய் – புனர்பூசம் 2, புதன் – விசாகம் 1, குரு – உத்திரம் 4, சுக்கிரன் – விசாகம் 4, சனி – திருவோணம் 3, ராகு – மூலம் 1, கேது – மிருகசீரிஷம் 3.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 3 இல் அமர்ந்திருப்பதாலும், 10 ஆம் வீட்டையும், 10 ஆம் வீட்டோனையும் பார்ப்பதாலும், குரு பார்வை சனிக்கு ஏற்படுவதாலும் செய்துவரும் தொழில் சீராகவே இயங்கிவரும். இயந்திரப் பணியாளர்கள், விவசாயிகள், பொதுநலப்பணியாளர்கள் ஆகியோர் முன்னேற்றத்திற்கான மார்க்கத்தைக் காண்பார்கள். கலைத்துறையினருக்கு மாமூலான வரவேற்பு இருந்துவரும். குரு 6-லும், சுக்கிரன் 8-லும் இருப்பதால் பொருளாதாரச் சிக்கல் ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கையை மேற்கொள்வது நல்லது. வாழ்க்கைத் துணைநலம் கவனிக்கப்படவேண்டி வரும். பெற்றோரால், குறிப்பாகத் தந்தையால் ஓரிரு பிரச்னைகளுக்கு ஆட்பட நேரும். மக்கள்நலம் சீராக இராது. பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவது அவசியம்.

24 ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். 29 ஆம் தேதி முதல் ராகு 8-லும், கேது 2-லும் இடம் மாறுவதால் குடும்பத்தில் குழப்பம் உருவாகும். நோய்நொடி உபாதைகளுக்கு ஆட்படவும் நேரலாம். காரியங்கள் தடைப்பட்டு நிற்கும். பிறமொழி, மதக்காரர்களால் சங்கடத்திற்கு உள்ளாக வேண்டிவரும். நவம்பர் 3 ஆம் தேதி முதல் ராசிநாதன் 4 ஆமிடம் மாறுவதால் எதிலும் நிதானத்துடன் ஈடுபடுவது அவசியமாகும். அதன் மூலம் சங்கடங்கள் ஏற்படாதவாறு உங்களைக் காத்துக் கொள்ள முடியும். 8 ஆம் தேதி முதல் பெண்களுக்கு உற்சாகம் வேர்விடும். நற்காரியங்களில் பங்கேற்க முடியும். கேளிக்கை; உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். அக்டோபர் 17,18, 21,22,23,25,30 நவம்பர் 1,4,6,7,8,9,13,14,15 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. மிதுன, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். தெற்கும், வடக்கும் அனுகூலமான திசைகளாகும். 6, 9 எண்கள் அனுகூலமானவை. பொதுவில் சாதாரணமான மாதமிது. இறை வழிபாட்டின் மூலம் மனநிம்மதியைப் பெறலாம்.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)

5 இல் உள்ள குருவும், 7 இல் உள்ள சுக்கிரனும் உங்கள் ராசியைப் பார்ப்பதால் அந்தஸ்தும், மதிப்பும், புகழும், வாழ்க்கை வசதிகளும் கூடப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் சீர்பெறும். மனத்தில் நல்ல எண்ணங்கள் உதயமாகும். மக்களால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே திருமணம் ஆனவர்கள் இல்லறத்தில் நல்லறம் காண்பார்கள். பணநடமாட்டம் சீராகவே இருந்துவரும். நற்காரியங்களில் ஈடுபாடு கூடும். மருத்துவர்கள், விஞ்ஞானிகள், இரசாயனத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் திறமைக்குரிய வரவேற்பு கிடைத்துவரும். 2 இல் உள்ள செவ்வாய், கேது, 8 இல் உள்ள ராகு ஆகியோர் இடையிடையே சிறுசிறு பிரச்னைகளை

உண்டுபண்ணினாலும் அவற்றைக் கடந்து வெளி வந்துவிடுவீர்கள்.

24 ஆம் தேதி முதல் வியாபாரிகள் சற்று விழிப்புடன் இருப்பது அவசியம். 29 ஆம் தேதி முதல் ஜன்ம ராசிக்குக் கேதுவும், 7 ஆம் வீட்டுக்கு ராகுவும் இடம் மாறுவதால் அலைச்சல் அதி கரிக்கும். மனத்தில் குழப்பங்கள் குடிகொள்ளும். கணவன், மனைவியரிடையே கருத்து வேறுபாடுகள் கூடும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்கு தாரர்களிடம் பக்குவத்துடன் நடந்து கொள்வது அவசியமாகும். நவம்பர் 3 ஆம் தேதி முதல் செவ்வாய் 3 ஆமிடம் மாறுவதால் பொறியியல் துறையாளர்களுக்கு ஓரளவு வளர்ச்சி தெரியவரும். 8 ஆம் தேதிக்குப் பிறகு கலைத்துறையாளர்கள் வெளிச்சம் காண்பார்கள். பெண்களுக்கு உற்சாக மான சூழ்நிலை உருவாகும். நிலம், மனை, வீடு, வாகனங்கள் சம்பந்தப்பட்ட இனங்களில் ஈடு படாமல் இருப்பது நல்லது. அக்டோபர் 17,18,21, 22,23,25,28 நவம்பர் 1,4,6,7,8,9,13,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத்திசை அனுகூலமானது. கன்னியா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3 ஆம் எண் அதிர்ஷ்டமானது. மொத்தத்தில் சுமாரான மாதமிது.

மிதுனம் :(மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

செவ்வாய், குரு, சனி ஆகியோரது பலம் திருப்திகரமாக இல்லாததால் உங்கள் மனத்தில் குழப்பம் குடிகொள்ளும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடுபடவேண்டி வரும். உடல் ஆரோக்கியம் சீராக இராது. அலைச்சல் அதி கரிக்கும். விபத்துக்குக் காரணம் உண்டு என்பதால் எக்காரியத்தையும் பொறுமையோடு செய்வது அவசியம். அலட்சியப்போக்கு என்பது அடியோடு கூடாது. கணவன், மனைவியிடையே கருத்து வேற்றுமை உருவாகும். கூட்டாகத் தொழில் செய் பவர்கள் பங்குதாரர்களிடம் வீண் வாதத்தை வளர்க்க வேண்டாம். விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மை இந்த நேரத்தில் அவசியம் தேவை. தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆளாகாமல் தப்பலாம். யாரிடத் திலும் வெளிப்படையாகப் பழக வேண்டாம்.

உடன்பிறந்தவர்களால் தொல்லைகள் சூழும். தந்தை நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக் கால் வைக்க வேண்டாம். பொருளாதார நிலையில் சிக்கன நட வடிக்கை அவசியம் தேவை. கைப்பொருளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபட வேண்டாம். 24 ஆம் தேதி முதல் வியா பாரிகள் வெளிச்சம் காண்பார்கள். 29 ஆம் தேதியி லிருந்து ராகு பலம் பெறுவதால் உங்கள் ஆற்றல் வெளிப்படும். எதிர்ப்புகளைச் சமாளிக்கக்கூடிய சக்தி பிறக்கும்.. நூதன நண்பர்களால் அனுகூலம் பெற வாய்ப்புண்டாகும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு கூடும். அக்டோபர் 17,18,21,22,23,25,28,30 நவம்பர் 4,6,7,8,9,13,14,15 தேதிகள் ஓரளவு சிறப் பானவை. வடதிசை நலம் தரும். துலா ராசிக் காரர்கள் உதவுவார்கள். 5 ஆம் எண் அதிர்ஷ்ட மானது. மொத்தத்தில் விழிப்புடன் இருக்க வேண்டிய மாதமிது.

கடகம் :(புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோரது பலம் குறைந் திருப்பதால் நீங்கள் அனுகூலமான பலன்களை இப்போது எதிர்பார்க்க இயலாது. பொருளாதார நிலையில் சரிவு உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது அவசியம். வீண்சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்க வேண்டாம். பெரியவர்களின் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்க லாகாது. பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் செயலாற்றுவது அவசியம். உடல் ஆரோக்கியம் கவ னிக்கப்பட வேண்டிவரும். மார்பு, தோல் சம்பந்தப் பட்ட வியாதிகளால் ஆபத்துக்கு இடமுண்டு. உடன்பிறந்தவர்களுக்கும், உங்களுக்குமிடையே கருத்து ஒருமைப்பாடு குறையும். வீண் பழி சுமத்தப்படவும் நேரலாம் என்பதால் விழிப்புடன் பழகுவது அவசியம்.

வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தினால் ஓரளவு முன்னேற்றம் காண முடியும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறை களைச் சேர்ந்தவர்களுக்கு நவம்பர் 7 ஆம் தேதி வரையிலும் மாமூலான வளர்ச்சிக்கு எவ்விதக் குறுக்கீடும் இராது. 8 ஆம் தேதி முதல் ஓரிரு சங்கடங்களைச் சந்திக்க வேண்டிவரும். 29 ஆம் தேதி முதல் ராகு 5-லும், கேது 11-லும் இடம் மாறுவதினால் மக்கள் நலனில் அக்கறை தேவைப் படும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பை எண்ணி ஏமாற வேண்டாம். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத் திலும் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மனத்தெளிவு உண்டாகும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் தற்சமயம் நடைபெறுமானால் சோதனைகள் குறைவடையும். அக்டோபர் 17,18,21,22,23,25,28,30 நவம்பர் 1,7,8,9,13,14,15 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசை களாகும். துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவு வார்கள். 5, 6 எண்கள் அளவோடு நலம் தரும். பொதுவில் சாதாரணமான மாதமிது.

சிம்மம் :(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய், சுக்கிரன் ஆகியோர் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் அபிலாஷைகள் ஈடேறத் தொடங்கும். எடுத்த காரியத்தைத் திறம்பட ஆற்றிவருவீர்கள். மதிப்பும், அந்தஸ்தும், கௌரவமும் நாளுக்குநாள் உயர் வடையும். இனிமையாகப் பேசுவீர்கள். குடும்பத்

கூட்டிலிருந்து வீட்டிற்கு....



தாய் வீடு...
என்னை
ஆராதித்து
நடக்கச் செய்த
வயிற்று வானம்!

சோறூட்டித்
தமிழ் சொன்ன
நிலவு நாக்கு!

பூச்சூட்டிப்
பொட்டிட்ட
கை வண்ணம்!

வெட்கத்தை
விரட்டிவிட்ட
தாய்ப் பால்!

எழுந்தாலும்
விழுந்தாலும்
பற்றி எரிகிற
பாச தீபம்!

புகுந்த வீடு...
என்னைப்
புதுமையாய்ப்
பார்க்கும்
புதிய வானவில்!

தாய்க்கும்
தந்தைக்கும்
புதுப் பெயரில்
அத்தை மாமா
ஆராதனை!

நான் எழுவதறகுத
துணை செய்யும்
மற்றொரு
உணர்வு ஊன்றுகோல்!

எழுந்ததும்
தொழுது பார்க்கவும்
தொட்டுப் பார்க்கவும்
இன்னொரு
ஜீவனின் சயனம்!

குளியலில் தொடங்கி
இன்னொரு
உயிரில்
நுழைகிற இரவில்
பெண்மை வெளிப்பாடு!

ஓ...!
தாய்வீடு
தள்ளியிருக்கிறது...!
எனக்குப்
புதுவீடு
பிடித்திருக்கிறது...!

பாலசுப்ரமணி

தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கு தென்படும். மக்கட்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெற வாய்ப்புண்டு. ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மேடைப்பிரசங்கிகள், ஆன்மிகவாதிகள் ஆகியோர் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும். பொதுநலப்பணியாளர்கள் நற்பெயர் பெறுவார்கள். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும்.

பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோர் உங்கள் வளர்ச்சிக்குத் துணை புரிவார்கள். கலைத்துறையினருக்கு வரவேற்பு கூடும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்புண்டாகும். மாணவர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். கடன் உபத்திரவம் குறையும். பணநடமாட்டம் கூடும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் இடமுண்டு. 24 ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். 29 ஆம் தேதி முதல் அலைச்சல் சற்று அதிகரிக்கும். தாய்நலம் கவனிக்கப்படவேண்டிவரும். 3 ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் குறைவதால் எதிலும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து ஈடுபடுவது அவசியம். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு அதிகரிக்கும். அக்டோபர் 17,18,21,22,23,25,28,30 நவம்பர் 1,4,9,13,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, மகர, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,7,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை. மொத்தத்தில் சிறப்பான மாதமிது.

கன்னி : (உத்திரம் 2 ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

விசேடமான நன்மைகளை நீங்கள் இந்த நேரத்தில் பெறமுடியாவண்ணம் தடைகள் இருந்து வரும். அலைச்சல் கூடும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடுபடவேண்டிவரும். பொருளாதார நிலையில் சிக்கன நடவடிக்கை அவசியம்.

தேவை. நண்பர்கள், உற்றார், உறவினர்களிடம் பக்குவத்துடன் பழகிவருவது நல்லது. பேச்சில் சூடான வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டாம். பெரியவர்களின் நட்புறவை வளர்த்துக் கொண்டு அவர்களின் ஆலோசனைகளின்படி நடந்துவருவது நல்லது. மக்கள்நலம் சீர்பெறும். உடன்பிறந்தவர்கள் அளவோடு உதவுவார்கள். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிகம் பாடுபட்டால் அதற்கான பயனைப் பெறலாம். வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். 29 ஆம் தேதி முதல் ராகு பலம் கூடுவதால் எதிர்ப்புகளைச் சமாளிக்கிற ஆற்றல் பிறக்கும்.

பிற மொழி, மதங்களைச் சார்ந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். பயணம் பயன்படும். நற்காரியங்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்துவரும். 3 ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் குறைந்தாலும் அவரது ஸ்தான பலம் காரணமாக ஓரிரு நன்மைகளைப் பெறமுடியும். பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். 8 ஆம் தேதி முதல் கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். நண்பர்கள், உற்றார், உறவினர் சேர்க்கையால் நலம் உண்டாகும். புதிய ஆடையணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். ஸ்திரச்சொத்துக்களால் ஆதாயத்திற்கு இடமுண்டு. கணவன், மனைவி உறவு நிலை சீர்பெறும். பெண்களுக்கும் உற்சாகம் வேர்விடும். அக்டோபர் 17,18, 21,22,23,25,28,30 நவம்பர் 1,4,6,7,13,14,15 தேதிகள் சிறப்பானவை. தென்திசை அனுகூலமானது. விருச்சிக, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை. மொத்தத்தில் சுமாரான மாதமிது.

துலாம் :(சித்திரை 3 ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காத காரணத்தால் உங்கள் எண்ணங்கள் ஈடேறத் தடை உண்டாகும். எடுத்த காரியம் நிறைவேறத் தாமதம் உண்டாகும். பொருள்வரவைக் காட்டிலும் செலவுகள் கூடும். பெற்றோர் நலம், மக்கள் நலம் ஆகியவற்றில் கவனம் தேவைப்படும். உடன்பிறந்தவர்களால் சங்கடங்கள் சூழும். அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். மனத்தில் நிம்மதி இராது. உடல் ஆரோக்கியம் கவனிக்கப் படவேண்டிவரும். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்பு அவசியம். உங்களைக் காட்டிலும் வயதில் மூத்தவர்களிடம் பணிவன்போடு நடந்து கொள்வது நல்லது. அவர்களின் அதிருப்திக்கு ஆட்படாமல் இருப்பதன் மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துகள் விஷயத்தில் தற்சமயம் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

வெளிநாட்டுத் தொடர்பால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கு இராது. 24 ஆம் தேதி முதல் வியாபாரிகளும், எழுத்தாளர்களும் உற்சாகம் கூடப் பெறுவார்கள். 29 ஆம் தேதி முதல் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் உருவாகும். பிறமொழி, மதக்காரர்களால் சங்கடங்களுக்கு ஆட்பட நேரும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். விஷ ஜந்துக்களால் ஆபத்துக்கு இடமுண்டு என்பதால் பாதுகாப்புத் தேவை. 3 ஆம் தேதி முதல் இயந்திரப்பணியாளர்களுக்கு உற்சாகம் குறைவடையும். செய்தொழிலில் அதிகம் வளர்ச்சியைக் காண இயலாமல் போகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அனுகூலமான காலமிது. அக்டோபர் 18,21,22,23,25,28,30 நவம்பர் 6,7,8,9,14,15 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். விருச்சிக, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை. மொத்தத்தில் சாதாரணமான மாதமிது.

விருச்சிகம் : (விசாகம் 4 ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

குரு, சனி ஆகியோரது பலம் கூடியிருப்பதாலும், ஜன்ம ராசியில் சுக்கிரன் சஞ்சரிப்பதாலும் உங்கள் தோற்றப்பொலிவு, அறிவாற்றல், பராக்கிரமம் யாவும் கூடும். எடுத்த காரியத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றிவிடுவீர்கள். மக்கள்நலம் மகிழ்ச்சி தரும். பொருள் நடமாட்டம் கூடும். குடும்பநலம் சீர்பெறும். மக்களால் அனுகூலத்திற்கு இடமுண்டு. பெரியவர்களும், தனவந்தர்களும் ஆதரவு புரிவார்கள். பொதுநலப்பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். தோட்டங்கள், சுரங்கங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு முன்னேற்றத்திற்கான மார்க்கம் புலப்படும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். கணவன், மனைவியர் உறவுநிலை திருப்திகரமாக இருந்துவரும்.

திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே திருமணம் ஆனவர்கள் மகப்பேறு பாக்கியம் கைகூடப் பெறுவார்கள். 24 ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வெளிச்சமான சூழ்நிலை உருவாகும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். 29 ஆம் தேதி முதல் அலைச்சல் சற்று அதிகரிக்கும். உடல்நலனிலும் அக்கறை தேவைப்படும். நூதன நட்பு கூடாது. ராசிநாதன் பலம் குறைந்து சஞ்சரிப்பதால் எதிலும் நிதானத்துடன் ஈடுபடுவது நல்லது. இயந்திரப்பணியாளர்கள், இஞ்சினீயர்கள், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் சங்கடங்கள் சூழும். அரசு விவகாரங்களில் அதிகம் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது. அக்டோபர் 21,22,23,25,28,30 நவம்பர்

1,4,6,7,8,9 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் சிறப்பானவை. தென்கிழக்குத் திசையும் நலம் தரும். மகர, மீன, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. மொத்தத்தில் அனுகூலமான மாதமிது.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்களாகிய குரு, சனி, செவ்வாய் ஆகியோர் கோசாரப்படி அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் எண்ணங்கள் ஈடேறத் தடை உண்டாகும். அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். நூதன நண்பர்களிடம் வெளிப்படையாகப் பழகாமல் இருப்பது அவசியம். கூட்டுத் தொழிலில் கவனம் தேவைப்படும். கணவன், மனைவியிடையே வாக்குவாதங்கள் கூடும். விட்டுக் கொடுத்துப் பழகிவருவது அவசியம். வீண் வழக்கு, வியாஜ்ஜியங்களில் பிரவேசிக்க வேண்டாம். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது தலை தூக்கும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்க வேண்டாம். கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்துவருபவர்களுக்கு யாதொரு இடர்ப்பாடும் நேர்ந்துவிடாது. அலட்சியப் போக்கை அடியோடு தவிர்ப்பது அவசியமாகும்.

பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கம் கொண்டதாகவே அமையும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்குச் சந்தர்ப்பமிராது. வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் 23 ஆம் தேதி வரையிலும் அனுகூலமான போக்கைக் காண்பார்கள். அதன்பிறகு நிலைமையில் சரிவு ஏற்படக்கூடுமாகையால் விழிப்புடன் இருப்பது அவசியம். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் திறமைக்குரிய வரவேற்பைப் பெற்று வருவார்கள். 29 ஆம் தேதி முதல் வீண் செலவுகள் கூடும். தீயோர் தொடர்பை விட்டு விலகுவது அவசியம். பயணத்தின்போதும் இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. அக்டோபர் 17,22,23,25,28,30 நவம்பர் 1,4,6,7,8,9,13,14 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்குத்திசை ஓரளவு நலம் தரும். மகர, துலா ராசிக்காரர்கள் அளவோடு உதவுவார்கள். 6,8 எண்கள் ஓரளவு அதிர்ஷ்டமானவை. பொதுவில் சாதாரணமான மாதமிது.

மகரம் : (உத்திராடம் 2 ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய)

குரு, புதன், சுக்கிரன் ஆகியோரது பலம் கூடியிருப்பதால் உங்கள் அறிவாற்றலும், தோற்றப் பொலிவும், பராக்கிரமமும் மேலோங்கும். எதிர்ப்புகளை முறியடித்துக் கொண்டு வாழ்க்கைப்பாதையில் முன்னேற்றம் காண்பீர்கள். நல்ல தகவல் வந்து சேரும். மக்கள்நலம் சீர்பெறும். தெய்வப் பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்துவரும். வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் தங்கள்

அதிகம் பேர் பங்கு பெற்ற படம்

மிகச்சிறிய வேடம் என்றாலும், மிகக் குறைந்த நேரம் திரையில் தோன்றினாலும் அதிகமான நபர்கள் பங்கு பெற்ற காட்சி சர். ரிச்சர்டு ஆட்டன்பரோ இயக்கிய காந்தி படத்தில் இடம்பெறுகிறது. 1982ஆம் வருடம் தயாரிக்கப் பட்ட இந்தப் படத்தில் 'மூன்று லட்சம்பேர்'பங்கெடுத்தனராம். – பானு புத்ரன்

திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள்.

பெரியவர்கள் தனவந்தர்கள் ஆகியோருடைய தொடர்பு ஆக்கம் தரும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், சிந்தனையாளர்களும் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். 24 ஆம் தேதி முதல் தந்தையால் அனுகூலம் உண்டாகும். 29 ஆம் தேதி முதல் ஏற்றுமதி, இறக்குமதி, தோல் பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவற்றால் வருவாய்க்கு இடமுண்டாகும். புத்திசாலித்தனம் காரணமாக மற்றையோருடைய நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவ முன்வருவார்கள். சனி, செவ்வாய் ஆகியோருக்குப் பிரீதியான காரியங்களில் ஈடுபடுவது நல்லது. அதன்மூலம் நலம் கூட வாய்ப்புண்டாகும். அக்டோபர் 17,18,25,28,30 நவம்பர் 1,4,6,7,8,9,13,14,15 தேதிகள் சிறப்பானவை. வட கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை. பொதுவில் சிறப்பான மாதமிது.

கும்பம் : (அவிட்டம் 3 ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி 11 இல உள்ள ராகு ஒருவரே உங்களுக்கு அனுகூலம் புரியக்கூடிய நிலையில் சஞ்சரிக்கிறார். ஏனைய கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் நீங்கள் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். அலட்சியப் போக்கு என்பது அடியோடு கூடாது. தீயவர்களை இனம் கண்டுகொண்டு அவர்களை விட்டு விலகி, நல்லவர்களின் நட்புறவை நாடிப் பெறுவது நல்லது. பெரியவர்களின் மனம் புண்படும்படியான காரியங்களில் ஈடுபடலாகாது. மனத்தில் தெளிவு இராது என்பதால் ஸ்திரமான முடிவுகளை எடுக்க முடியாமல் போகும். நண்பர்களே விரோதிகளாகக் கூடும் என்பதால் யாரிடத்திலும் அதிகம் நெருக்கம் வேண்டாம். மக்கள்நலம், வாழ்க்கைத் துணைநலம், சகோதர நலம் இவற்றில் கவனம் தேவைப்படும்.

பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கம் கொண்டதாக அமையும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது கடினம். 24 ஆம் தேதி முதல் வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் செழிப்பான பாதையைக் காண்பார்கள். 29 ஆம் தேதி முதல் தொழிலில் சிறுசிறு இடர்ப்பாடுகள் தென்பட்டாலும் அவற்றைச் சமாளிக்கவும் வாய்ப்புண்டாகும். 8 ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். பெற்றோரால் அனுகூலத்திற்கு இடமுண்டாகும். கணவன், மனைவி உறவுநிலை சீர்பெறும். அக்டோபர் 17,18,21,22,28,30 நவம்பர் 1,4,6,7,8,9,13,14,15 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், தென்மேற்கும் அனுகூலமான திசைகளாகும். துலா, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை. பொதுவில் சாதாரணமான மாதமிது.


மீனம் : (பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

ராசிநாதன் குரு 7 இல் அமர்ந்து 11 ஆம் இடத்தையும், ஜன்ம ராசியையும் நோக்குவதால் உங்கள் அந்தஸ்தும் மதிப்பும் உயரும். நல்லவர்கள் நேசம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களால் ஆதாயம் பெறமுடியும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே திருமணம் ஆனவர்களுக்கு இல்வாழ்வில் இன்பம் கூடும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உதயமாகும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள்.

வியாபாரம் அபிவிருத்தி அடையும். கறுப்பு நிறப் பொருட்கள் லாபம் தரும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வரறவேற்பு கூடப் பெறுவார்கள். 29 ஆம் தேதி முதல் தந்தை நலனில் கவனம் தேவைப்படும். உடன்பிறந்தவர்களால் ஓரிரு சங்கடங்களுக்கு ஆட்படவும் நேரலாம். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துகளின் விஷயத்தில் விழிப்புடன் இருப்பது அவசியம். 8 ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சோதனைகளுக்கு ஆட்பட நேரும். பெண்களுக்குப் பிரச்னைகள் தலைதூக்கும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்க வேண்டாம். அக்டோபர் 17,18,21,22,23,28,30 நவம்பர் 1,4,6,7,8,9,13,14,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் நலம் தரும். கன்னி, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. மொத்தத்தில் சிறப்பான மாதமிது. ಂ


கொலு.. கொலு.. கலை.. கலை..
இங்கா முடி போய் இப்ப நவராத்ரி சுண்டலுக்கும் பாட ஆரம்பிச்சுட்டீங்களா?


நவராத்திரிக்கு பொம்மை முக்கியமா? கொலு படிகள் முக்கியமா?ன்னு பட்டி மண்டபம் நடத்துங்க.. பாருங்க கொலு பொம்மையாலே அடிச்சிக் கிட்டு.. பொம்மைங்க தூள் தூள்!


ஒன்பது பொண்ணுங்க கல்யா ணந்துக்கு நிக்குது! அலங்கா ரம் பண்ணி விட்டா நவராத்திரி க்கு ஒன்பது நாளும் ஒவ்வொ ருத்தியை பெண் பார்த்து விட்டுப் போகட்டுமே!


இந்த நவராத்ரி கொலுவை வெள்ளிக் கத்தரிக் கோலால் திற ந்து வைக்கிறேன்! அடுத்த ஆண்டு நவரத்னம் பதித்த தந்தரிக்கோ லால் திறந்து வைக்க விரும் புகிறேன்!


நம்ம வீட்லே நவராத்திரிக்கு ஒவ் வொரு ராத்திரியும் ஒவ்வொரு தினு சான திருட்டுங்க!



நால் மனிதர்கள் 16

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட்., நிறுவனமும், அமுதசுரபி வெளியீட்டாளர்கள் ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

'என்ன பாவா, ரொம்ப யோசனையா நின்னுட்டீங்க... யாருகிட்டேயிருந்து கடுதாசி வந்திருக்கு அப்படி மலைச்சு நிக்கற மாதிரி என்ன அதிலே விஷயம் எழுதியிருக்கு... தாங்க படிக்கலாம்...'

ராஜம்மா தன் கணவரிடம் தபால்காரர் கொடுத்துவிட்டுப் போன கடிதத்தை வாங்கிப் படித்தாள்.

படித்து முடித்தவுடன் முகம் மிகவும் வாடிப்போய்விட்டது. தள்ளி நின்றிருந்தவள் தன் பாவாவிடம் நெருங்கி வந்து நின்று அவரது முகத்தைப் பார்த்தாள், தோள்பக்கமாய்ச் சேர்ந்து நின்று கொண்டாள்.

பாவா எந்தவிதப் பதிலும் சொல்லாமலிருப்பதைப் பார்த்து விசனப்பட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

ராஜப்பாதான் ராஜத்தின் தலையைத் தடவிக் கொடுத்துவிட்டு, முதுகில் லேசாகத் தட்டிக் கொடுத்தார்.

ராஜத்தின் கையிலிருந்த கடிதத்தை மறுபடியும் பிரித்துப் படித்துப் பார்த்தார். 'சின்னாளப்பட்டியின்' தன் வீடு 'ஏலம்' விடுவதைப்போல 'பிரமை' ஏற்பட்டு விட்டது.

கடிதம் அவருடைய நெருங்கிய சிநேகிதன் சந்திரசேகரிடமிருந்து வந்திருந்தது. கடிதத்தில் அவர் எழுதியிருந்த விஷயம்தான் ராஜப்பாவைக் கதிகலங்கச் செய்திருந்தது.

'அன்புள்ள சிநேகிதன் ராஜப்பாவுக்கு வணக்கம்! இங்கு ஊர் பழைய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது கொஞ்சம் கொஞ்சமாக. நீ ஏற்பாடு செய்துவிட்டுப் போன 'ஒரு சொசைட்டி' இப்போது பல அரசியல் தலைவர்களின் பெயரில் 'சொசைட்டிகள்' திறக்கப்பட்டு நெசவாளிக்கு நியாயமான முறையில் 'பட்டும் நூலும்' வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இது விவரம் அறியவும். அங்கு சிநேகிதர்களுக்கும் நம்ம ஊர் ஜனங்களுக்கும் தெரியப் படுத்தவும். முக்கியமாக இன்னொரு விஷயம், உன் முதலாளி உன்னுடைய 'வீட்டை' உடனடியாக வட்டியுடன் அசலையும் சேர்த்துக் கட்டி திருப்பிக் கொள்ளும்படியும் இதற்கு 'வாய்தா' வாக இன்னும் ஒரு மாதம் தருவதாகவும் என்னிடம் எழுதச் சொல்லிச் சொன்னார், வீட்டிற்கு ஆள் அனுப்பி என்னை வரச்சொல்லி.

உனக்கு நம்பிக்கையான சிநேகிதன் நான் தான் என்று அவருக்குத் தெரிந்த விஷயம் தானே!

இது விவரம் அறியவும்.

வீட்டில் கேட்டதாகச் சொல்லவும். உன் பெண்களுக்கு என் ஆசீர்வாதங்கள். எல்லாவற்றிற்கும் உடன் பதில் விவரமாக எழுதவும் அல்லது நேரில் புறப்பட்டு வரவும்.

மிதமாக இருந்துவிட வேண்டாம், எக்காரணம் கொண்டும். உன் மகனும் அவனுடைய கல்லூரி சிநேகிதன் ஒருவனும் போனவாரம் இங்கு வந்துவிட்டுப் போனார்கள்.

உனது அன்புள்ள சிநேகிதன்,

சந்திரசேகரன்.

குழந்தைகளிடம் எப்படி நடந்து கொள்வது?



1. அதிகமாகச் செல்லம் கொடுக்கக்கூடாது.

2. குழந்தைகளைக் கண்டித்து வளர்ப்பதில் எவ்விதத் தயக்கமோ – தாட்சண்யமோ கூடாது.

3. கெட்ட பழக்கங்களை வளர்த்துக் கொள்ள குழந்தைகளை அனுமதிக்கக்கூடாது.

4. குழந்தைகளின் வயதுக்கு ஏற்றபடி நடத்துங்கள். எப்போதும் சிறு குழந்தைபோல் நடத்தினால் அக்குழந்தை நாலு பேரின் ஏளனத்துக்கு இலக்காகும்.

5. குழந்தைகளைத் தனிமையில் கண்டிப்பது தான் நல்லது. நாலு பேர் பார்க்க, கேட்கக் கண்டிப்பது குழந்தையின் மன வளர்ச்சியைப் பாதிக்கும்.

6. சிறிய தப்புகளைச் சிறிய தப்பு என்றும், பெரிய தப்புகளை பெரிய தப்பு என்றும் குழந்தைகளிடம் விளக்கிக் கூறி கண்டிப்பது மிகவும் நல்லது. அப்போது எதிர்காலத்தில் சீர்தூக்கிப் பார்க்கக்கூடிய ஆற்றலை அது பெறும்.

7. செய்யும் செயல்களின் தன்மைக்கேற்றபடி விளைவுகள் இருக்குமாதலால் அவற்றிலிருந்து அக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டாம். ஏனென்றால், சிலவற்றை மிகக் கசப்பான முறைகளில் கற்றுக் கொள்ள வேண்டியது இயற்கைதான்.

8. முன்னுக்குப் பின் முரணாகப் பேசி நடக்கக்கூடாது. குழந்தைகளுக்கு அனாவசியச் சந்தேகங்கள் வரும்படி செய்யலாகாது.

9. குழந்தையின் நியாயமான பயங்களைப் பைத்தியக்காரத்தனம் என்று ஒதுக்கக்கூடாது.

10. குழந்தைகள் என்ன செய்தியைச் சொல்ல வருகின்றன என்பதை முதலில் நிதானமாகக் கேளுங்கள். அதற்குப்பின் அதற்கேற்ற வகையில் நடந்து கொள்ளுங்கள். குழந்தையின் மனதில் தன்னம்பிக்கையை விதைத்தவர்களாவீர்கள்.

11. 'நான் தப்பு செய்யமாட்டேன்' என்று குழந்தைகளிடம் பொய் சொல்லக்கூடாது. ஏனென்றால் நீங்கள் சொன்ன பொய்யிலிருந்து எப்போதாவது மீறி நடக்க வேண்டியது வரும் போது, அதை எதிர்பாராவிதமாக குழந்தை பார்க்கும்போது அது பெரிய அதிர்ச்சிக்குள்ளாகிவிடும்.

'என்ன ராஜம் செய்யறது இப்போ? எப்படி இவ்வளவு பணத்தை உடனடியாகத் தயார் செய்ய முடியும்னு நெனைக்கிறே? இப்படி நம்ப வீட்டைத் திடீர்னு திருப்பிக்க முதலாளி சொல்றதிலே எனக்கு என்னமோ விஷயமிருக்குன்னுதான் நெனைக்கத் தோணுது.

அப்படி என்ன பணம் காசு இல்லாத ஆளா... அவங்க தாத்தா சேத்து வச்சிருக்கிற சொத்து இன்னும் பல தலைமுறைக்கு வருமே. இப்படி எதுக்கு அவசரப்படறாரு? அதுதான் எனக்குப் புரியலே. ஒட்டுமொத்தமாக இந்த அளவு பணத்தைப் புரட்டக் கூடிய தகுதி நமக்கிருந்தா நாம ஏன் இவருகிட்டே போய் வீட்டை வச்சி கடன் வாங்கணும்? ஒரு மாசம்... ஹீம்...

பொழுது விடிஞ்சு மறையும் ஒவ்வொரு நாளும் ஓடற ஒட்டமா ஓடி வந்துவிடும். என்ன செய்யறதுன்னுதான் இப்ப புரியலே.

ஏதோ இன்னும் ஒரு வருஷம் தாக்குப் பிடிச்சா, எப்படியும் மகனோட சம்பாத்யத்திலே சேந்த பணத்துலே 'வட்டி' முழுசாச்சும் கொடுத்து, சரி பண்ணிக்கலாம்னு நெனைச்சிட்டிருந்தேன்.

ஆனா –



12. குழந்தைகளிடம் தவறு செய்துவிட்டால் உடனே மன்னிப்புக் கேட்கத் தயங்க வேண்டாம். அது கௌரவக் குறைவு என்று நினைக்க வேண்டாம். நீங்கள் மன்னிப்பு கேட்பதால் குழந்தை உங்கள் மேல் வைத்திருக்கும் பாசம் – அன்பு, மரியாதை ஆகியவை பன்மடங்கு உயரும். நெருக்கமும் அதிகமாகும்.

13. குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப நாமும் வளர வேண்டியது அவசியம். அப்போதுதான் குழந்தைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

14. புதிய சோதனைகளைப் பரிட்சித்துப் பார்க்க விரும்பும் குழந்தைகளை நாம் தடுக்க வேண்டியதில்லை. அவற்றைப் பொறுமையோடு சகித்துப் போவது அவசியம்.

15. குழந்தைகள் நல்லபடி வளர அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களிடம் அன்பு காட்டுங்கள்.

16. குழந்தைகளின் கேள்விகளுக்கு உரிய பதிலைச் சொல்லுங்கள். பதில் சொல்லாமல் நழுவவிடக் கூடாது. நீங்கள் பதில் சொல்லா விட்டால் குழந்தைகள் அதே கேள்வியை மனதிலே தேக்கி அதற்கு விடை தெரியாமல் குழப்பமடைய நேரும்.

ஆதாரம் : 'அழகுக்கு அழகு செய்ய மருத்துவ ரீதியான யோசனைகள்' என்ற நூல்.

சி. பன்னீர் செல்வன்

இப்போ இந்த மாதிரி அமைஞ்சிப் போச்சே... என்ன செய்யறது?, வார்த்தைகளில் நடுக்கமும், கண்களில் ஒருவிதமான கலக்கமும் இருந்தது ராஜப்பாவிடம். முகத்தில் வழிந்த வியர்வையைத் தோளிலிருந்த துண்டை எடுத்துத் துடைத்துக் கொண்டார். வீதியில் வரும் போகும் ஜனங்களை அர்த்தமில்லாமல் வெறித்துப் பார்த்தபடி இருந்தார்.

ராஜத்தையும் கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறதோ என்ற ஆசையுடன் பார்க்க வெளியே வந்து நின்ற இரண்டு பெண்களையும் மாறி மாறிப் பார்த்தார். சிறிது நேரத்தில் நின்று கொண்டிருந்தவர் சோர்ந்ததுபோலத்திண்ணையின் தூணைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார்.

இப்படி ராஜப்பா சோர்ந்து உட்கார்ந்ததைப் போல எந்தக் காலத்திலும் தனக்குத் தெரிந்து இல்லையே என்று ராஜம் அதிசயப்பட்டாலும் கடிதத்தில் இருந்த வாசகங்கள் தான் முக்கிய காரணம் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டதுபோல,

'பாவா என்ன நீங்க, நீங்களே இப்படின்னா நாங்க என்ன செய்யறது? எதிர்ப்பாக்காத வந்த சேதி, என்ன செய்யலாம்னு தானே நாம இப்ப யோசிக்கணும்' என்று சொல்லி விட்டு ராஜப்பாவிடம் நெருங்கி வந்து நின்று கொண்டாள். பெண்கள் இரண்டு பேரும் அப்பாவின் முகத்தையும் அம்மாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்தார்கள்.

தம்பிகள் இரண்டு பேரும் இல்லாத நிலையில், ஏதாவது எக்குத்தப்பாய் ஆகிவிட்டால் என்ன செய்வது என்பதுதான் ராஜப்பாவிற்கு மிகவும் கவலையாக இருந்தது.

தானே நேரில் போய் 'வாய்தா' கேட்பது தவிர வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை யோசித்துப் பார்த்ததில். அவருடைய முகத்தைப் பார்க்கையில் ராஜத்திற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. ஆண்களின் கம்பீரமும், பேச்சின் உறுதியும் பற்றி ஊருக்குள் உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால்,

தன்னுடைய கணவனைத் தவிர வேறு யாரையும் சொல்லுமளவிற்கு ஆண்கள் ஊரில் இல்லை என்று சொல்லுமளவிற்குக் கௌவரமாய் நினைத்திருந்தும், சமயங்களில் சிநேகிதிகளிடம் பேசியும் இருந்த ராஜம், இப்போது தலைகுனியும்படியான நிலையைத் தன் வீட்டுக்காரர் தந்துவிடுவாரோ என்ற பயம் பிடித்துக் கொண்டது.

கட்டியவனுக்கு வாழ்க்கையில் ஏதாவது கஷ்டநஷ்டம் வந்தால் கழுத்தில் போட்டிருக்கும் 'சங்கிலி'யோ வேறு தங்க நகைகளோ, பணமோ கொடுத்து உதவி செய்யக்கூடிய சூழ்நிலை தனக்கு இல்லையே என்று மிகவும் சங்கடப் பட்டுக் கொண்டாள். கண் கலங்கியது.

"ராஜம், ஊருதான் சகஜமான நிலைக்குத் திரும்பிட்டிருக்கறதா கடிதாசிலே எழுதியிருக்குல்லே. நான் போய் என்ன ஏதுன்னு விசாரிச்சிட்டு வரலாம்னு இருக்கேன்.

ஏதோ, நம்ளாலே முடியறது இப்போதைக்குப் போய் முதலாளியிடம் பேசிப் பாக்கறதைத் தவிர வேறு எதுவுமில்லே.

எப்படி உங்களையெல்லாம் கூட்டிட்டுப் போறாதா, இல்லை நான் மட்டும் தனியா போயிட்டு வர்றதான்னு யோசனை".

"என்னங்க இது, நீங்க மட்டும் போகணும், நாங்க இங்க இருக்கணும்மா... ஆம்பளைங்க இல்லாமே... யாருமே இல்லாமே நாங்க எப்படிங்க இருக்க முடியும்? நீங்க இப்படிச் சுலபமா சொல்றீங்க. எங்களையும் கூட்டிட்டுப் போங்க. நாங்களும் வர்றோம். அதுவும் பொண்ணுங்க இருக்கிற வீடு, நாமதானே ஜாக்கிரதையா இருக்கணும்".

"ஆமாப்பா... எங்களையும் கூட்டிட்டுப் போங்க, நாங்க மட்டும் தனியா இங்கே இருக்க முடியாது".

தன்னுடைய மனைவியும், பெண்களும் பேசியதைக் கேட்டுவிட்டு ராஜப்பா ஒரு கணம் யோசித்தார். இவர்களை விட்டுவிட்டுப் போவதைவிட கூடவே கூப்பிட்டுக் கொண்டு போவதுதான் உசிதமாகத் தெரிந்தது ராஜப்பா விற்கு.

இங்கேயே விட்டுவிட்டுப் போனாலும், ஊருக்குப் போய் அங்கிருக்கும் சூழ்நிலையைத் தெரிந்து கொண்டு பின் அங்கேயே இருப்பதா மறுபடியும் இங்கேயே திரும்பி வந்துவிடுவதா என்ற யோசனைகூட, ராஜப்பாவிற்கு வந்தது. என்ன இருந்தாலும் சரி, போகும்போது வந்த மாதிரியே எல்லோரும் சேர்ந்தே போவோம் என்ற தீர்மானத்துடன் திண்ணையைவிட்டு எழுந்தார்.

ஊருக்குப் போய்த் தன் முதலாளியிடம் 'வாய்தா' கேட்டு, அவர் அப்படித் தரமுடியாது என்று சொல்லிவிட்டால், வேறு யாரிடமாவது பணம் புரட்டிக் கடனை அடைத்துவிட்டு, வீட்டைப் புதிதாகப் பணம் வாங்கியவரின் பெயருக்கு எழுதிக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையுடன்,

பணத்தை, தன்னை நம்பி யார் ஊரில் கொடுக்கக்கூடும் என்ற நினைப்பில் நினைவு களில் ஆட்களின் பெயர்களைப் 'பட்டியல்' போட்டு போட்டு அடித்தல் திருத்தல் செய்தார்.

எதுவுமே தன்னுடைய எண்ணத்திற்கு ஒத்து வரவில்லை என்றால், பேசாமல் விற்றுவிடலாம் முதலாளிக்கே ஒரு கிரயம் போட்டு. இதுவரை வாங்கிய கடனும் வட்டியும் போக மீதிப் பணத்தை வாங்கி எதையாவது செய்யலாம். வாடகை வீடு எடுத்துக்கொண்டு, தம்பிகள் வந்து கேட்டால் விவரம் சொல்லிவிட வேண் டியதுதான். தம்பிகளின் பெண்டாட்டிகளுக்கு ஊரில் எனக்கு ஏற்பட்ட நிலைமை தெரி யாமலா போய்விடும்? ஒருவேளை தம்பிகள் வந்து கையெழுத்துப் போட்டால்தான் விற் பனை செய்ய முடியுமென்றாலும் முதலாளியே பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். 'வேறு யாருக்காவது வீட்டை விற்கிறேன்' என்றால் தானே தனக்குக் கிடைக்கவில்லையே என்ற எரிச்சல்பட்டு ஏடக்கூட ஏதாவது செய்வார்.

அவருக்கே வீட்டை விற்பதாக உறுதி எழுதிக் கொடுத்துவிட்டால் தம்பிகள் வரும் வரைக்கும் பொறுத்துக் கொள்வார். பொறுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். வேறு வழியில்லை அவருக்கு என்பதைக் கூட்டல் கழித்தல் போட்டு ஒரு முடிவுக்கு வந்தபின்தான் ஆயாசப் பெருமூச்சு விட்டார் ராஜப்பா.

ஒரு டம்ளர் 'மோர்' கொண்டு வாச்.சொல்லி குடித்துவிட்டுக் கொட்டாவி விட்டார். தீர்க்கவே

ஒளிவிடும் உயிரினங்கள்

நாக்டிலூகா (Noctiluca) என்ற கடல் நுண்ணுயிர்களுக்கும் ஒளிரும் தன்மை உண்டு. இந்த நாக்டிலூகா அமைதி கலைகின்றபோது மட்டுமே ஒளிரும். அதனால் இரவில் கப்பல், படகு போன்றவற்றால் இந்த நுண்ணுயிர்கள் அலைக்கழிக்கும்போது கடலில் ஓர் ஒளிப் பாதையையே உண்டாக்கி ஆச்சரியத்தில் ஆழ்த்தும்!

கணவாய் மீன்கள் பொதுவாக எதிரியிட மிருந்து தப்பிக்க கருநீல நிற மை போன்ற திர வத்தையே சுரக்கும். ஆனால் மத்திய தரைக் கடலில் வாழும் ஹிட்டெரோ டுதிஸ் (Hetero Teuthis) என்ற கணவாய் மீன் எதிரிகளிட மிருந்து தப்பித் தன்னைச் சுற்றி ஒரு வண்ண ஒளிப்படலத்தைத் தோற்றுவிக்கும். திடீரென்று ஏற்பட்ட வண்ண ஒளியால் எதிரிகள் திகைத்து நிற்கும். ஹிட்டெரோடுதிஸும் இந்த சமயத் தைப் பயன்படுத்திக் கொண்டு தப்பியோடி விடும்!

லோபியஸ் (Lophios) என்னும், மீனுக்கு ஒரு சிறு கொம்பு உண்டு. அந்த ஒளிரும் கொம்பு களால் கவர்ந்திழுக்கப்பட்ட சிறு உயிரினங்கள் லோபியஸுக்கு இரையாகி விடும்!

ஜைகான்டாக்டிஸ் (Gigantactis) என்னும் மீன் கடலினுள் 6000 அடி ஆழத்தில் வாழ்கிறது. இதன் தலையில் அமைந்த குச்சி போன்ற முனையிலிருந்து ஒளி வெள்ளம் பாய்ந்து, இந்த மீன் செல்லும் பாதைக்கு வெளிச்சம் காட்டும்!

கலாதியாத்துமா அக்ஸலி (Galatheathuma Axeli) என்ற ஆழ்கடல் மீனுக்கு ஒளிரும் பற்கள் உண்டு. அதனால் இது வாயைத் திறந்தாலே வெளிச்சம்தான்! இது வாயைத் திறக்கும்போது ஏற்படும் வெளிச்சத்தால் ஈர்க்கப்பட்ட இதனுடைய இரைகள், இதன் வாய்க்கே வந்து பலியாகும்!

ஓடன்டோசில்லிஸ் (Odontosylis) என்னும் கடற்புழுக்களின் அடிப்பாகம் முழுவதும் பச்சை நிறமாக ஒளிரும். இந்தப் புழுக்கள் நீர்மட்டத்தின் மீது வந்து, விட்டு விட்டு ஒளிர்வது சிறப்பாக இருக்கும்!

பெர்முடாஸ் என்னும் தீவுகளுக்கு அருகில் பைரோஸோமா என்னும் சிறு கடல் உயிரினங்கள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. இந்த உயிரினத்தின் உடலில் சிறு உராய்வு ஏற்பட்டால்கூட இவற்றின் உடலில் ஒளிவீசும். 'மொஸ்லி' என்ற ஆராய்ச்சியாளர் இந்த உயிரினத்தின் ஒன்றின்மீது தனது பெயரை விரலால் எழுதினார். அவரது பெயர் சற்று நேரத்தில் பைரோஸோமாவின்மீது நியான் விளக்கைப்போல் பளிச்சிட்டது!

துருக்கி நாட்டில் பனஜீர்தாக் மலைச் சரிவில் 'நார்த்தெக்ஸ்' என்னும் செடி இருக்கிறது. இந்தச் செடியின் தண்டினுள் உலர்ந்த மென்சோறு உண்டு. இந்த மென்சோற்றை வெளியே எடுத்தால் அது இருட்டில் பல மணி நேரம் பிரகாசிக்கும்!

'சின்னஞ்சிறுகோபு'

முடியாத ஒரு விஷயத்திற்கு முடிவு கண்டு விட்டது போல திருப்தி பட்டுக்கொண்டார். முகத்தில் இருந்த சோகத்தின் சாயல் வெளிறிப் போய்விட்டது.

தன்னுடைய மனைவியும் பெண்களையும், ஊருக்குச் செல்லப் புறப்படுவதற்கு இன்னும் இரண்டு மூன்று நாட்கள் தான் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒதுக்குப்புறம் செய்துவிட்டு, எதையெதை ஊருக்குக் கொண்டு போக வேண்டுமோ இதையெல்லாம் சரிசெய்து எடுத்து வைக்கச் சொன்னார். இந்த அளவில் சொன்னபோது ராஜத்திற்கு மட்டுமல்ல, அவருடைய பெண்களுக்கும் 'ஏதோ ஒரு முடிவு' செய்திருக்கிறார் என்ற எண்ணம் வந்தவுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் திருப்தியுடன் படுதாவை விலக்கிவிட்டு உள்ளே சென்றார்கள்.

அவர்கள் உள்ளே போனவுடன், ராஜப்பா ஊரில் இருந்த அந்த வீட்டை நினைத்துக் கொண்டார். கண்களை மூடியபோது அந்த வீட்டின் அருமை பெருமைகள் அவரைக் கண் மூடச் செய்து விடாமல் செய்தன. ராஜப்பாவிற்கு இருப்புக் கொள்ள முடியவில்லை. கண்களிலும் ஒரே சமயத்தில் அந்த வீட்டின் ஞாபகங்கள் வந்து பெருமூச்சை விடச் செய்தன, கண் கலங்கிப் போயிருந்தது.

கைவிரல்களைச் சொடக்குப் போட்டு உதறிக் கொண்டார். அந்தப் பெருமைமிக்க வீட்டை முதலாளிக்கோ வேறு யாருக்கோ விற்றுவிடுவதில் கொஞ்சமும் விருப்பமில்லை அவருக்கு.

அந்த வீட்டின் ஒவ்வொரு அசையும் பொருட்களும் அசையாத பொருட்களும் ஞாபகத்தில் வந்து பரிதாபப்பட வைத்தன.

சின்னாளப்பட்டியிலிருந்து காரைக்குடிக்குப் புறப்பட்டு வரும்போது, தேவையில்லாமல் இருந்த பழைய கயிறு கட்டில்கள், தேக்கு மரப்பலகையால் ஆன பீரோக்கள், பெரிய பெரிய பித்தளை மொடக்கள், இன்னமும் நூல் சுற்றும் கண்டுகுச்சி, ராட்டை, தகரப்போணிகள், ஆசு சுற்றும் மிசின் – சட்டம் என்ற தொழில் கருவிகள்... தட்டுமுட்டுச் சாமான்கள் பழைய சைக்கிள் இரண்டு என்று எல்லாவற்றையும் உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுத்தான் வந்தார் ராஜப்பா.

முதலாளியிடம் போய் தான் நேரில் சொன்னால் கேட்டுக் கொள்வார். இதுவரை அவரிடம் எந்த எக்குத்தப்பாகவும் நடக்கவில்லை என்ற தனிப்பட்ட எண்ணமே, வலித்துக் கொண்டிருந்த அவரது நெஞ்சை ஆசுவாசப்படுத்தியது. எப்படியும் புறப்பட்டே ஆகவேண்டிய கட்டாய நிலை வந்துவிட்டது. தன்னுடைய நெருங்கிய சிநேகிதனிடமும், மற்றவர்களிடமும் விவரம் சொல்லியாக வேண்டும், இரண்டு மூன்று நாட்களுக்குள்.

வெளியே தயார் செய்து கொடுத்திருந்த சேலைகளுக்கு வரவேண்டிய பணத்தை இரண்டொரு நாளில் தரும்படி முன்பே சொல்லி வைத்தால்தான் சரி, புறப்படும் போது கையில் பணம் இருக்கும். இல்லையென்றால் இனி எப்போ திரும்பி வருவது, எப்படி வாங்குவது என்ற எண்ணத்துடன் ராஜப்பா எழுந்து வீதிக்கு வந்தார்.

ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். சிநேகிதனின் வீட்டிற்கே போய் விட்டு வருவதாக வெளியே இருந்து சொல்லிக் கொண்டே நடக்கத் தொடங்கினார் ராஜப்பா.

தொடரும்...

நவராத்திரியில் நகைச்சுவை

பத்மினி பட்டாபிராமன்

திருமதி உமா எஸ்.வி. சேகர்

சென்ற வருடம் நவராத்திரியின் போது "பாம்பு செட்" பொம்மையில் பாம்பு பொம்மை மட்டும் விழுந்து உடைந்து விட்டது. என் கணவரிடம் ஒரு பாம்பு பொம்மை வேண்டுமென்று காலையில் கேட்டேன். அன்று மாலை கொலுப் படியில் அழகாய் ஒரு குட்டி பாம்பு பொம்மை! "அட உடனே வாங்கி வந்து விட்டாரே!" என்று பாராட்டியபடி அருகில் போனால் நிஜப் பாம்பு! தோட்டத்திலிருந்து படிக்கு வந்திருக்கிறது!

திருமதி நிர்மலா உதயம்ராம் :

திருமணம் ஆன வருடம் தலை நவராத்திரி தினம். நானும் என் கணவருமாக அழகிய கிருஷ்ணர் பொம்மை ஒன்று வாங்கி வந்தோம். கொண்டு வந்து படியில் வைத்த உடனே, சொல்லி வைத்தாற்போல ஒரு மூதாட்டி வீட்டிற்கு வந்தார். கிருஷ்ணர் பொம்மையைப் பார்த்துவிட்டு "இதே போல அடுத்த வருடம் இந்த வீட்டில் ஒரு குட்டிக் கிருஷ்ணன் தவழுவான்" என்று வாழ்த்திச் சென்றார்... அன்று தூக்கத்தில் ஓர் அர்ச்சகர் என் கையில் கிருஷ்ணர் பொம்மை பிரசாதமாக அளிப்பது போலக் கனவு. வியர்த்துப் போய் விழித்தால் அருகில் இவர் சரியான கொர்... முதியவள் வாழ்த்தும், பிரசாதமும் வீண் போகவில்லை! அடுத்த வருடமே வந்து உதித்த குட்டிக் கிருஷ்ணனுக்கு இன்று வயது ஆறு!

திருமதி ஜெயந்தி ராஜசேகர் :

போன வருடம் எனது சிறு மகனை அழைத்துக் கொண்டு பொம்மை வாங்கப் போனோம். நாய் பொம்மை ஒன்று வாங்கினோம். உடலெல்லாம் பட்டும் நகைகளுமாய் வேலைப்பாடு செய்திருந்த முருகன் பொம்மையை வாங்கவேண்டுமென்று என் மகன் ஒரே அழுகை! அடம்! ஏற்கனவே முருகன் பொம்மை இருக்கிறதே என்றாலும் கேட்கவில்லை. வாங்கி வந்தோம். படியிலிருந்த கிருஷ்ணர் பொம்மையை சுட்டிக்காட்டிச் சொன்னான் என் மகன் – "ஏம்மா நேற்று இந்த கிருஷ்ணர் மாதிரி எனக்கு வேஷம் போட்டிருந்தே – நாளைக்கு முருகன் வேஷம்னு சொன்னியே!" இப்போது பிஞ்சுக் கை, பழனியாண்டவர் கோலத்திலிருந்த பழைய முருகன் பொம்மையைக் காட்டியது... "இது மாதிரி போட்டுடப் போறியேன்னு தான் ஜம்முனு டிரஸ் பண்ணின முருகன் பொம்மை வாங்கச் சொன்னேன்" என்றது அந்த வாண்டு.

செல்வி ஹரினி ராகவன் :

பரணிலிருந்து எடுத்து, படிகளில் அடுக்கிய பின்பு பார்த்தால், செட்டியார் பொம்மையைக் காணோம்! 'செட்டியாரின் மனைவி' மட்டுமிருக்க, போன வருடம் சிரித்தபடி இருந்த செட்டியார் எங்கே போனார்? வீடு முழுக்கத் தேடினோம்! கிடைக்கவில்லை. சமையலுக்கு அரிசி எடுக்கப் போன அம்மா, டிரம்மைத் திறந்தால் அதற்குள் செட்டியார் பொம்மை! அங்கே எப்படி வந்தது? குட்டித் தம்பி விளக்கம் கொடுத்தான். "நவராத்திரி முழுக்க அவர் வியாபாரம் பண்ண வேணாமா? அரிசி வாங்க நான்தான் அனுப்பினேன்!" ∘∘



உமா எஸ்.வி. சேகர் — நிர்மலா உதயம்ராம் — ஜெயந்தி ராஜசேகர் — ஹரினி ராகவன்

பெண்களும் எழுத்தும்

தமிழில் : வையவன்

[நேருஜியின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட்டின் மகளான நயனதாரா சஹ்கல் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நன்கு பிரபலமான ஆங்கில எழுத்தாளர். சாஹித்திய அகாடமியும், இண்டியா இன்டர் நேஷனல் சென்டரும் ஏற்பாடு செய்திருந்த 'எழுத்தாளரைச் சந்தியுங்கள்' என்ற நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் இது.]

நான் நேரு குடும்பத்தில் பிறந்தவள். இது என் குற்றமில்லை. குடும்பங்களைச் சுற்றிச் சுழலும் ஒரு சமூகத்தில், ஆதிக்கத்தில் உள்ள ஒரு குடும்பத்தினால் முற்றிலும் வசீகரிக்கப்படும் மக்கள் நான் ஏதோ மாசு மருவற்றவள் என்று கருதுகிறார்கள்.

எனக்கு ஒரு தந்தை என்று கேள்விப்பட்ட எவரும் முற்றிலும் ஆச்சரியப்படுகிறார்கள். உண்மையில் நான் நேரு குடும்பத்தில் பிறந்தவளே அல்ல. பண்டிட் குடும்பத்தில் பிறந்தவள்.

என் தாயை மணந்த முக்கியமான மனிதரை உங்களுக்கு அறிமுகம் செய்ய விரும்புகிறேன். அவர் பெயர் ரஞ்சித் சீதாராம் பண்டிட். அவருடைய மூதாதையர் மகாராஷ்டிரத்தில் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள பாம்புலி கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

பின்னர் அவர்கள் ராஜ்காட்டிற்குக் குடிபெயர்ந்தனர். அங்கேதான் வெற்றிகரமான பாரிஸ்டர்களும் புகழ்மிக்க சம்ஸ்கிருத மேதைகளும் அந்த சந்ததியில் வந்தனர். அவர்களில் என் தந்தையும் ஒருவர்.

சம்ஸ்கிருதத்துடன்கூட பல இந்திய ஐரோப்பிய மொழிகளையும் அவர் அறிந்திருந்தார்.

அவருக்கு மிக இனிய சாரீரம் உண்டு. அவர் ஒரு நுட்பமான விளையாட்டு வீரர். வேட்டைக்காரர். மலர்களையும் செடிகளையும் பொறுத்தமட்டில் அவர் ஒரு மந்திரவாதி.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அவர் வைக்கப்பட்டிருந்த சிறையின் தாழ்வாரங்களில்கூட தோட்டம் அமைத்தார். மகாத்மா காந்தியைப் பின்பற்றி நடக்கத் தனது வக்கீல் தொழிலைத் தூக்கியெறிந்து, கடைசிச் சிறை வாசத்தின்போது உயிரை விட்டவர்.

அரசியலுக்கு அவர் தம் உயிரைக் கொடுத்தாரே தவிர ஆத்மாவைத் தரவில்லை. கலை, மேதைமை அல்லது எந்தத் தொழில் சாதனையைக் காட்டிலும் சுதந்தரம் முக்கியம் என்று அவர் நினைத்ததால் தான் தம் உயிரைக் கொடுத்தார்.

என்னைக் கேள்வி கேட்கக் கற்பித்து, இசையிலும் இலக்கியத்திலும் இன்று எனக்குள்ள பிரேமை, என் சுதந்தரப் போக்கு இவையெல்லாம் உருவாக அவர்தான் வாய்ப்பளித்தார்.

நான் எழுத்தாளராக வேண்டுமென்று திட்டமிட்டு ஆனவளல்ல. ஒருவர் செய்யப்படவேண்டிய வேறு காரியங்கள் எத்தனையோ உள்ளன.

நம் சமூகம் இளம் பெண்களை ஒரு மாதிரி கட்டுப்பாடு செய்கிறது. நிஜவாழ்வு என்பது பெண்களைப் பொறுத்தமட்டில் கல்யாணம் செய்து கொள்வது, குழந்தை பெறுவது, ஏற்கெனவே மிகுதியாகச் சாப்பிட்டிருப்பவர்களுக்கு முடிவில்லாத சாப்பாடுகளைக் கணவருடைய தொழில் முன்னேற்றத்திற்குத் தயாரிப்பது; இதிலும் அதிலும் வந்துள்ள லேட்டஸ்ட் பொருள்களை வாங்குவதுதான் என்று நம் சமூகம் அவர்களை நம்ப வைத்து விடுகிறது.



இந்தக் காரியங்களை எல்லாம் நான் வருஷக்கணக்கில் செய்தேன். இடைப்பட்ட நேரங்களில் புத்தகங்களும் எழுதினேன். நான் எழுதுவது பற்றி எனக்கே ஒரு குற்ற உணர்வு தான் காரணம். பெண்கள் கடிகாரச் சுற்றில் கட்டுண்ட மனைவிகளாகவும், தாய்களாகவும், இல்லத்தரசிகளாகவும் தான் கருதப்பட்டார்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் எனக்கு எழுதுவதற்கு என்று ஒரு தனியறை கிடைத்தது. எந்தக் காரணத்தாலோ எழுத்து என்பது வெறுக்கப்படுகிறது. அதில் உங்களைத் தோயவிட யாரும் நினைப்பது இல்லை.

எழுத்து ஒரு மாதிரி சமூக விரோத நடவடிக்கை போலும்! குடும்பம், நண்பர்கள் என எல்லாரிடமிருந்தும் விடுபட்டு மணிக்கணக்கான தனிமை அதற்குத் தேவைப்படுகிறது.

ஜீவனத்திற்கு வேறு ஏதோ செய்தாக வேண்டிய எழுத்தாளர்கள் காலத்தைக் கொஞ்சம் கண்டுபிடித்துக் களவாடி அதைப் பராமரித்துக் காப்பாற்ற வேண்டி வருகிறது.

இதனால்தான் எனது முதல் நான்கு புத்தகங்களை எழுதும் சந்தர்ப்பங்களில் எண்ணற்ற குறுக்கீடுகள், உணர்ச்சிக் கொந்தளிப்புகளால் நான் தடுமாற வேண்டி வந்தது.

இந்தச் சூழலில் சரியான மூளையுள்ள எவள்தான் எழுத்தாளராக விரும்புவாள்? அதற்கான பதில் அதை எவரும் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தான். அது ஒரு சொறிந்து கொண்டே இருக்கத் தூண்டும் சொறி மாதிரி அந்த எழுத்துப் பணி. சொறியச் சொறிய அது மேலும் வளர்கிறது.

எழுத்து என்பது பிறர் மீது செலுத்தும் செல்வாக்கு ஒரு புறம் இருக்கட்டும்; எழுதுகிற தன் மீதே செலுத்தும் செல்வாக்கைக் கவனிப்போம்.

தனக்குக் கற்றுத்தரப்பட்ட எல்லாவற்றையும் மறக்கச் செய்யவும், அனுபவங்களை முற்றிலும் மாறான விதத்தில் ஒரு பக்கத்தில் அமைக்கவும், பிறர் நம்மீது சுமத்திய லேபிள்களையும், அபிப்பிராயங்களையும் உதறியெறியவும் முக்கியமாகத் தன்னைத்தானே அறிய முயலும் அபாயகரமான காரியத்தில் ஈடுபடவும் எழுத்தாளரை எழுத்து தூண்டுகிறது.

நான்கு புத்தகங்கள் எழுதிய இந்தக் கால கட்டத்தில் எனக்கே உரிய என் சொந்தச் சூழலின் நிர்ப்பந்தம் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்த இடம் - விவாகரத்து.

அதற்குப்பின் நான் தொழில் முறையில் எழுத்தில் ஈடுபட வேண்டி வந்தது. ஜீவனத்திற்காக நான் கதைகளும் எழுதினேன்; பத்திரிகைகளுக்கும் எழுதினேன்.

என் பத்திரிகை எழுத்துகளுக்காக என்னை விமர்சித்தவர்கள் கதை எழுதுவதோடு நிற்கச் சொன்னார்கள். என்னால் நாவால் எழுத முடியாது என்று நினைத்தவர்கள் பத்திரிகைகளில் மட்டும் தொடரச் சொன்னார்கள்.

நல்லது, நாம் எல்லாரையும் மகிழ்விக்க முடியாது. இந்தப் பிரச்சனையை எவரையும் பொருட்படுத்தாததன் மூலம் தீர்த்துக் கொண்டேன்.

ஒரு கோணத்தில் எழுத்தாளர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதிலும் ஒரே விஷயத்தைத் தான் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். என்னதான் வெவ்வேறு பலகைச் சட்டங்களில் மாற்றினாலும் அதே கருப்பொருள்தான்!

எனக்கு ஈடுபாடுள்ள கருப்பொருள் சுதந்தரம்தான். அப்புறம் 'நற்பண்புள்ள பெண்' என்று ஒரு கருப்பொருள் எனக்கு உண்டு.

என் ஒவ்வொரு நாவலிலும் கதாநாயகி சகட்டுமேனிக்கு ஒரு செக்கு வட்டத்தில் சுற்றும் நற்பண்புள்ள நாயகியிடமிருந்து ஓர் அடி எடுத்து வைப்பாள்; நற்பண்பின் புதிய வரைமுறை

இனி இருள் இல்லை

கவிஞர் தமிழ் மணவாளன்

(15.8.92 அன்று அமுதசுரபி - கவிதை உறவு இணைந்து நடத்தும் கவிதை இரவு கவிதைப் போட்டியில் ஆசிரியர் விக்கிரமன் அவர்கள் முன்னிலையில் முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை)

கிணறெடுத்தோம் நீருக்காய்! ஆனால் இங்கே
கிணற்றுக்குள் பூதமென்றால், என்ன செய்ய?
உணர்வெடுத்தோம் வேகத்தால்! ஆனால் இங்கே
உணர்வெல்லாம் வன்முறையாய், என்ன செய்ய?
உணவெடுக்க உப்பென்றோம்! ஆனால் இங்கே
உப்பினையே உணவென்றால், என்ன செய்ய?
கனவுகளோ வருபவைதான்! ஆனால் இங்கே
கனவுகளே வாழ்க்கையென்றால், என்ன செய்ய?

விடியலுக்காய் இமைதிறந்தோம்! ஆனால் இங்கே
விழிகளுக்கே ஒளியில்லை, என்ன செய்ய?
செடிகளுக்கே நீரிறைத்தோம்! ஆனால் இங்கே
செழிப்பனவோ களைகளென்றால், என்ன செய்ய?
கொடிபடரக் கொம்பு நட்டோம்! ஆனால் இங்கே
கொம்புகளே கொடியறுத்தால், என்ன செய்ய?
அடிகளுக்குப் பதிலுரைத்தோம்! ஆனால் இங்கே
அங்குலங்கள் அச்சுறுத்தும், என்ன செய்ய?
மூழ்கிடுவோம் முத்துக்காய்! ஆனால் இங்கே
மூழ்குவதே முத்தென்றால், என்ன செய்ய?
தோள்கொடுக்க நிமிர்கின்றோம்! ஆனால் இங்கே
தேள்கொடுக்கால் துடிக்கின்றோம், என்ன செய்ய?
இரவுகளின் உச்சியிலே வெளிச்சம் தானே!
இனி இல்லை இருளென்று சொன்னீர்! ஆனால்
இரவுகளின் உறவுகளால் இடிந்து போனோம்
எழுவதென்று! எழுந்த அன்று இருளே இல்லை.

ஒன்றை நோக்கி அவள் அடியெடுத்து வைப்பாள். இப்படித் தான் அதை நான் அர்த்தப் படுத்திக் கொள்கிறேன்.

"திஸ் டைம் ஆஃப் மார்னிங்" என்ற நாவலில் என் கதாநாயகி ராஷ்மி தன் பொருந்தாத திருமணம் சகிக்க முடியாத நிலையை எட்டும்போது கணவனை விட்டு நீங்குகிறாள்.

"ஸ்டார்ம் இன் சண்டிகர்" நாவலில் சரோஜ் கொத்தடிமை விடுதலைக்குப் போராடுகிறாள். மூன்றாவது குழந்தை வயிற்றில் இருக்கும்போது பொறாமைபிடித்த, விசுவாசமற்ற கணவனை விட்டு இரண்டு குழந்தைகளுடன் வெளியேறுகிறாள்.

'த டே இன் ஷேடோ' நாவலில் ஏராளமான குழந்தைகளைப் பெற்ற ஸ்மிரித் கணவனால் விவாகரத்து செய்யப்பட்டு அவர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு புறப்படுகிறாள்.

நம் குழந்தைகள்தான் நம்மை அந்தஸ்துச் சூழ்நிலையில் சங்கிலியிட்டுப் பிணைப்பவை. நம்மைப் பிளாக் மெயில் செய்வதற்காக அவர்கள் உபயோகிக்கப்படுகிறார்கள்.

என் கதாநாயகி சரோஜ் இதற்கு இரையாவதில்லை. எல்லாரையும் தன்னோடு அழைத்துக் கொண்டு கிளம்பி விடுகிறாள்.

வீட்டை விட்டுக் கிளம்பும் இந்த மூன்று கதாநாயகிகளுக்கும் நற்பண்புக்கும் என்ன தொடர்பு?

சதி எனப்படும் உடன்கட்டையில் ஒரு பெண்ணின் நற்பண்பு வெளிப்படும். இதுவும் தன்னைத்தானே சுய வதை செய்து கொள்வதும் ஒன்று தான்.

இனிமேல் உடன்கட்டை வேண்டாம். வாழ வேண்டும்; அதுவும் சுயமரியாதையோடு வாழ வேண்டும். இதுதான் புதிய பெண் செய்யும் தீர்மானம்.

அவளது நற்பண்பு தைரியம் என்ன வருமோ என்று அறியாத ஒன்றைச் சந்திக்கத் துணிந்து விளைவை ஏற்கச் சித்தமாவது. இந்த எல்லா நாவல்களிலும் கணவனால் காலி செய்யப்பட்ட இடத்தை இட்டு நிரப்ப ஓர் ஆண் கிட்டத்தட்ட வட்டமிட்டவாறு காத்திருப்பான்.

ஆனால் 'ஸிசுவேஷன் இன் நியூடெல்லி' நாவலில் வரும் தேவியோ, 'ரிச் லைக் அஸ்' என்ற நாவலில் வரும் ஸோனாலியோ முற்றிலும் ஆண்களைச் சாராதவர்கள்.

ஆண்கள் சமத்துவமுள்ள கூட்டாளிகளாகவும், உண்மையாக நீடித்து நிற்கும் காதல் கொண்டவர்களாகவும், எந்தக் கருத்து வேறுபாடுகளையும் கடந்த உண்மைக் காதலைப் பெற்று வழங்கும் பண்புடையவர்களாகவும் இன்னும் மாறவில்லை என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

ஆண்கள் வளரும்போதே பெண்களும் தம் போக்கில் வளரவேண்டும். வலிமையும் தன்னம்பிக்கையும் பெற்றுத் தனிமையில்கூட ஓர் அர்த்தம் காண முயல வேண்டும்.

இந்த எல்லாப் பெண்களிடமும் ஓர் அச்சம் கலந்த சந்தேகம் உண்டு. மனிதக் காதல் தோல்வியுற்றே தீரும். அதிகபட்சமாக அதை எதிர்பார்ப்பது அநீதி. ஏனெனில் ஒரு நாடு; ஒரு கொடி (ஒரு கொள்கை) இவற்றிற்கு விசுவாசமாக இருப்பது இயல்பாகவும் முடியக் கூடியதாகவுமுள்ள உலகைத்தான் மனிதர்கள் கட்டியமைத்திருக்கிறார்கள்.

கடவுள் ஒருவரிடம்தான் பரிபூரண சரணாகதி சாத்தியமும் வரவேற்கத்தக்கதுமாகும். ஏன் முடியக்கூடியதும்கூட.

அல்லது மனிதக் காதல் வெற்றிபெறப் பொறாமையோ, சுரண்டலோ, கர்வமோ அற்ற வேறு உலகம்தான் தேவைப்படுகிறது.

தமிழில் தவறுகளை அறிவோம் / மூத்துதண்ணப்பர்

சந்திப் பிழைகளைச சிந்திப்போம்

வலிமிகா இடங்கள் (தொடர்ச்சி)

21)'ஆ' 'ஓ' என்னும் எழுத்துகளை இறுதியில் கொண்டுள்ள வினாச் சொற்களுக்குப் பின் மிகாது :

(எ-டு) முருகனா + சென்றான் = முருகனா சென்றான்?

அரங்கனோ + பார் = அரங்கனோ பார்?

22) 'ஏ' என்னும் எழுத்து எண்ணுப் பொருளிலும், தேற்றப் பொருளிலும் (தெளிவுப் பொருள்), பிரிநிலைப் பொருளிலும் வருமாயின் மிகாது :

(எ-டு) பாலே மோரே பழமே தருக = பாலும், மோரும், பழமும் தருக என்பது பொருள். (இப்படி வருவது எண்ணுப் பொருள் எனப் படும்) 'கண்ணனே செய்தான்' எனத் தேற்ற (தெளிவு)ப் பொருளிலும், 'அவர்களுள் கண்ணனே செய்தான்' எனப் பிரிநிலைப் பொருளிலும் மிகவில்லை.

23) வன்றொடர்க் குற்றியலுகரச் சொல்லையடுத்துப் பன்மைப் பொருள் தரும் 'கள்' விகுதி சேர்ந்தால் பெரும்பாலும் மிகாது :

(எ-டு)

மொட்டு + கள் = மொட்டுகள்

தோப்பு + கள் = தோப்புகள்

குறிப்பு : மொட்டுக்கள் - என 'க்' மிகுந்தால், மொட்டின் உள் இருக்கும் கள் - அதாவது தேன் எனப் பொருள்படும். 'அவ்வாறே 'தோப்புக் கள்' என்றால் தோப்பிலிருந்து வந்த 'கள்' (மதுவகை) எனப் பொருள்படும். ஆனால், பலர் இன்றும் வல்லெழுத்துப் போட்டே 'மொட்டுக் கள்', 'தோப்புக்கள்', 'பாட்டுக்கள்' என எழுதுகிறார்கள். அது அவ்வளவு சரியன்று.

24) எழுவாய்த் தொடரில் மிகாது :

(எ-டு) குதிரை + கனைக்கிறது = குதிரை கனைக்கிறது

(எழுவாய்த் தொடர் : முதலில் எழுவாயும் பின்னர் அடுத்துப் பயனிலையும் வருவது. இத் தொடரில் 'குதிரை' எழுவாய், 'கனைக்கிறது' - பயனிலை).

24) ஏவல் வினை முற்றுக்குப் பின் மிகாது : (ஏவல் - ஏவுவது)

(எ.டு) போ + பயலே = போ பயலே.

25) முன்னிலை வினைமுற்றுக்குப் பின் மிகாது :

(முன்னிலை நமக்கு முன் உள்ளவர் / உள்ளது - நீ, நீர், நீங்கள் முதலியன)

(எ-டு)

வாராய் + பிள்ளாய் = வாராய் பிள்ளாய்

வாரீர் + பிள்ளைகாள் = வாரீர் பிள்ளைகாள்

குறிப்புப் பெயரெச்சத்தின் பின் மிகாது :

(குறிப்புப் பெயரெச்சம் என்றால் நிலை மொழியில், காலத்தைக் குறிப்பாகக் காட்டும் முற்றுப்பெறாத வினைச்சொல். (எ-டு) நல்ல, கெட்ட, சிறிய, பெரிய முதலியன)

(எ-டு) நல்ல }		{நல்ல பையன்
கெட்ட }		{கெட்ட பையன்
சிறிய }	+ பையன் =	{சிறிய பையன்
பெரிய }		{பெரிய பையன்
சின்ன }		{சின்ன பையன்

இவை முக்காலத்தில் எதையும் தெளிவாகக் காட்டாமல் குறிப்பாக இருப்பதாலும், பெயர்ச் சொல்லைத் தழுவி பொருள் முற்றுப் பெறுவதாலும் குறிப்புப் பெயரெச்சமாம்.

குறிப்பு : சின்னச்சின்ன, சின்னக் குழந்தை, சின்னப்பெண் என்றெல்லாம் பலர் எழுதுகின்றனர். அது தவறு. 'பெரிய' என்னும் சொல்லுக்கு எதிர்ச் சொல் 'சின்ன' அல்லவா?

'பெரியப் பையன்' என்று எழுதுவது உண்டா? அப்படித்தான் 'சின்னப்பையன்' என்று எழுது வதும் தவறு.

27) நிலை மொழியும் வருமொழியும் சமஸ் கிருதச் சொல்லாயின் மிகாது :

(எ-டு)

பாரத + தேசம் = பாரத தேசம்

பரத + கண்டம் = பரத கண்டம்

குறிப்பு : நிலைமொழியும் வருமொழியும் சமஸ் கிருதமாயின் கண்டிப்பாக மிகல் கூடாது. ஆனால், நிலைமொழி சமஸ்கிருதச் சொல்லா யிருந்து வருமொழி தமிழ்ச் சொல்லாயின் வல்லெழுத்து மிகுவதும் காணப்படுகிறது.

(எ-டு) தேச + தந்தை = தேசத்தந்தை

பண்டித + தேர்வு = பண்டிதத் தேர்வு முதலியன.

தேசம் + தந்தை = தேசத்தந்தை

பண்டிதம் + தேர்வு = பண்டிதத்தேர்வு

இவற்றில் நிலைமொழி ஈற்று மகரம் (ம்) கெட்டு வல்லெழுத்து மிகுந்தது என்றும் கொள்ள லாம்.

வலிமிகும் இடங்கள், மிகா இடங்கள் பற்றி மேலும் சில குறிப்புகளையும் காண்போம்.

நிலைமொழி தமிழ்ச் சொல்லாயிருந்து, வரு மொழி கடினமாக அல்லது அழுத்தமாக உச்ச ரிக்கப்படும் எழுத்தை முதலெழுத்தாகக் கொண் டுள்ளதாயின் (சேர்க்கையில்) வலி மிகாது எழுதுதலே சிறந்தது.

(எ-டு)

அந்த + கங்கை = அந்த கங்கை

கிழக்கு + பம்பாய் = கிழக்கு பம்பாய்

உனக்கு + தர்மம் = உனக்கு தர்மம்.

வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் மிகும் என்று அறிந்தோம். ஆனால் நிலைமொழி வினைத் தொகையாயின் மிகாதிருத்தலே சிறந் தது.

(எ-டு) ஒட்டு + பசை = ஒட்டுபசை (ஒட்டிய பசை, ஒட்டுகின்ற பசை, ஒட்டும் பசை)

கூப்பு + கரம் = கூப்பு கரம் (கூப்பிய கரம், கூப்புகின்ற கரம், கூப்பும் கரம்)

கட்டு + சோறு = கட்டு சோறு (கட்டிய சோறு, கட்டுகின்ற சோறு, கட்டும் சோறு)

கொட்டு + பறை = கொட்டு பறை (கொட்டிய பறை, கொட்டுகின்ற பறை, கொட்டும் பறை)

சில விதி விலக்குகள்

இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது என்பது விதி. ஆனால் சில இடங்களில் மிகுந்துள்ளதையும் காணலாம்.

(எ-டு) கனா + கண்டேன் = கனாக்கண்டேன் (கனாவைக் கண்டேன்)

('தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்' – திருப்பாவை)

புறா + பிடித்தாள் = புறாப் பிடித்தாள் (புறாவைப் பிடித்தாள்)

உம்மைத் தொகையில் வலி மிகாது என்பது விதி. ஆனால் சில இடங்களில் மிகுந்துள்ள தைக் காணலாம்.

(எ-டு) இரா + பகல் = இராப்பகல்

ஏற்றம் + தாழ்வு = ஏற்றத்தாழ்வு

இராப்பகல் என்றால் இரவும் பகலும் என்பது பொருள். ஏற்றத்தாழ்வு என்றால் ஏற்றமும் தாழ்வும் என்பது பொருளாகும். இவற்றுள் 'உம்' மறைந்து (தொக்கி) நிற்கிறது.

பண்புத் தொகையில் பெரும்பாலும் மிகாது எனக் கண்டோம். ஆனால் பல இடங்களில் மிகுந்தும் உள்ளதைக் காணலாம்.

(எ-டு) புது + பலகை = புதுப்பலகை (புதுமை + பலகை)

மீதி + காசு = மீதிக்காசு (மீதியாகிய காசு)

2,3,4,7 ஆகிய வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் மட்டும் மிகும் என்று கண்டோம். ஆனால் 5ஆம் வேற்றுமை உருபும் பய னும் உடன் தொக்க தொகையிலும் சிலவிடங் களில் மிகுந்துள்ளது.

(எ-டு) வாய் பேச்சு = வாய்ப்பேச்சு (வாயினின்று வரும் பேச்சு) நின்று 5ஆம் வேற்றுமை உருபு.

இவ்வாறு வருவனவற்றையெல்லாம் விதி விலக்குகளாக அல்லது வழுவமைதிகளாகக் கொள்ளலாம். இவை விதிகளுக்குச் சற்றுப் புறம்பானவை எனினும் அறிஞர்களின் எழுத்து களில் காணப்படுவதால் சரியென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இலக்கண விதிகளுக்குப் பெரும்பாலும் கட்டுப்பட்டு, மரபைக் காத்து நடத்தலே சிறந்தது.

சங்கப் பலகை

ஸ்ரீ சுப்ரமண்ய ஆனந்த தத்வ ப்ரகாசம்

வெளியீடு - ஸ்ரீ புவனேஸ்வரி மந்த்ரம்

விலை ரூ. 30/.

பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் அவர்களின் ஆசியில் மலர்ந்தது இப்புத்தகம். இதற்கு முன் இம்மாதிரி விளக்கங்கள் அடங்கிய புத்தகம் வந்ததில்லை என்று சொல்லலாம். 'ராமாயணத்தில் முருகன்', 'மகாபாரதத்தில் முருகன்', 'தர்ம சாஸ்திரங்களில், முருகன்', 'வேதத்தில் முருகன் என்பன போன்ற கட்டுரைகளில் தகுந்த சான்றுகளோடு உதாரணங்களோடு முருகப் பெருமான் விளங்குகிறார் என்பது நல்லதொரு ஆராய்ச்சி. முருக பக்தர்களுக்கு இது ஒரு வரப்ரசாதமே. சண்முக உபாசகர்களுக்கு இப்புத்தகம் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முருகனின் பதினாறு தெய்வ மூர்த்தங்களுக்கு ஏற்ப, பதினாறு தியான சுலோகங்களும், பதினாறு தெய்வ மூர்த்தப் படங்களும் அவசியம் பார்க்க ஆவலைத் தூண்டுகிறது. இப்புத்தகத்திற்கு மகுடம் வைத்தது போல் முருகனின் வண்ண அழகுப் படம் இறை அருளைக் கூட்டி வைக்கிறது. இப் புத்தகத்திற்கு தினமும் இரண்டு புஷ்பத்தை வைத்தாலே போதும். முருகனின் அருள் சுரக்கும்.

கிடைக்குமிடம் :

ஸ்ரீ பாரத்வாஜ ஆச்ரமம், கங்கை நகர், ரெட்ஹில்ஸ் சாலை, - அம்பத்தூர், சென்னை - 600 053.

போன் : 844579

ஸ்ரீ புவனேஸ்வரி மந்த்ரம்

23, அனுமந்தராயன் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை - 600 005.

முத்து மணிக்கதைகள்

(ஆசிரியர் : நீலவன். வெளியீடு : திருமேனி நிலையம், வெண்மாலகரம், சிறுமயிலூர் அஞ்சல், (வழி) தொழுப்பேடு செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் - 603 310. பக்கங்கள் : 95. விலை : ரூ. 15.00)

இதில் நன்னெறி புகட்டக்கூடிய ஆறு கதைகளைத் தனக்கே உரிய எளிய நடையில் தந்திருக்கிறார் நீலவன். இதைப் படிக்கின்ற மாணவர்களும் தாங்களும் முத்து போல் இருக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்வார்கள்.

சாணக்கியன்

(ஆசிரியர் - சுந்தர பாண்டியன். வெளியீடு - காவ்யா, 16, 17 ஆவது E கிராஸ், இந்திரா நகர், பெங்களூர் - 560 038. விலை - ரூ. 25. பக்கங்கள் - 227).

புத்தி கூர்மைக்குப் பெயர் பெற்றவன் சாணக்கியன். அவனுடைய வரலாற்றை, அவன் செய்த ராஜதந்திரங்களை, பகைகளால் சிதறிப் போயிருந்த நாட்டை ஒன்று சேர்த்த விதத்தை, வரலாற்றில் அவனுக்கு மட்டும் எப்படி ஒரு தனிப்பட்ட மகத்துவம் ஏற்பட்டது என்பதைச் சுந்தரபாண்டியன் அழகுத் தமிழில் சுவை குன்றாமல், கதாபாத்திரங்களோடு ஒன்றிப்போய்விடும் அளவுக்கு எழுதியிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரமாலை

(தொகுப்பாசிரியர் - அம்மன் சத்தியநாதன். வெளியீடு - அம்மன் பதிப்பகம், 212. இராயப்பேட்டை நெடுஞ் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14. பக்கங்கள் - 48. விலை - ரூ. 5.00).

இந்நூலில் ஸ்ரீ அஷ்டலக்ஷ்மியின் வரலாறும் வழிபடும் முறைகளும் மிகவும் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் புண்ணிய வாசஸ்தலங்கள் எவை என்று கூறப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாது ஸ்தோத்திர மகிமைகள், ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர சத நாமாவளி, அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்திரம், அஷ்டலக்ஷ்மி ஸ்துதி, மகாலக்ஷ்மி அஷ்டகம், கனகதாரா ஸ்தோத்திரம், ஸ்ரீ மகாலக்ஷ்மி கவசம், ஸ்ரீஸூக்தம், மகாலட்சுமி ஸ்தோத்திரம், லக்ஷ்மி கீர்த்தனைகள், அகத்தியர் அருளிய திருமகள் துதி, ஸ்ரீலக்ஷ்மி காயத்ரி மூலமந்திரம்... இன்னும் நிறையச் சொல்லிக் கொண்டே போகலாம். அவ்வளவு விஷயங்கள் இந்தச் சின்னப் புத்தகத்துக்குள் அடங்கியிருக்கின்றன. மனிதனுக்குத் தெய்வ வழிபாடு முக்கியம். தெய்வ வழிபாட்டுக்கு இந்நூல் மிகவும் முக்கியம்.

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்தோத்திர மாலை

(தொகுப்பாசிரியர் - அம்மன் சத்தியநாதன். வெளியீடு - அம்மன் பதிப்பகம், 212 இராயப்பேட்டை நெடுஞ் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14. பக்கங்கள் - 47. விலை ரூ. 5.00).

இந்நூலில் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு, மற்றும் வழிபடும் முறைகள் விளக்கமாகத் தரப் பட்டுள்ளன. இது தவிர ஸ்ரீ ஹநுமத் அஷ்டோத்தர சத நாமாவளி, அஷ்டோத்தர சத நாமஸ்தோத்திரம், ஸ்ரீ ஹனுமத் ஸ்தோத்திரம், ஹனுமத் புஜங்க ஸ்தோத்திரம், ஆபதுத்தாரண ஸ்தோத்திரம், தண்டகம், ஸங் கட மோசன ஹனுமானாஷ்டகம், ஹனுமதஷ்டகம், ஸ்ரீ ராகவேந்தி ரரின் சுந்தரகாண்ட ஏகஸ் லோகம், துளசி ராமாயணம், புரந்தரதாசரின் ஆஞ்சநேயர் பாடல் மற்றும் பாராயணத்திற் கான கம்பராமாயணப் பாடல் கள் - மற்றும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடுச் சம்பந்தமான அனைத்து ஸ்தோத்திரங்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஸ்ரீராமபிரான் என்றால் ஸ்ரீ ஆஞ்சநேயர் நம் நினைவுக்கு வருவார். ஸ்ரீ ஆஞ்சநேயர் என் றால் நிச்சயம் இந்த ஸ்தோத் திரமாலையும் நம் நினைவில் வந்து நிற்கும்.

பள்ளி மாணவர்களுக்குப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

(ஆசிரியர்-நீலவன். வெளி யீடு - நீலமணி பதிப்பகம், 11, கிருஷ்ணப் பிள்ளைத் தெரு, சாயிநாதபுரம், வேலூர் - 622 001. பக்கங்கள் - 210. விலை ரூ. 15.00).

படித்தவர் முதல் பாமரர் வரை அனைவரும் புகழக் கூடிய பாடல்களைப் புனைந் தவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள். அவருடைய பாடல்களில் மாணவர்கள் அவசியம் தெரிந்துக் கொள்ள வேண்டிய பாடல்களை இந் நூலாசிரியர் நீலவன் கதை வடிவில் அமைத்துத் தந்திருக் கிறார். படிக்கின்றபோதே அந்தப் பாடல்கள் மனப்பாடம் ஆகிவிடுகின்றன. அந்த அள வுக்குப் பொருத்தமான பாடல் களைப் பொருத்தமான இடத் தில் சுவாரஸ்யம் குன்றாத வகையில் தந்திருக்கும் ஆசிரி யரை அவசியம் பாராட்டியே தீரவேண்டும். பொழுதை அர்த்தமுள்ளதாக்க, இன்னும் சொல்லப் போனால் வாழ்க் கையை அர்த்தமுள்ளதாக்க மாணவர்கள் என்றில்லை அனைவரும் இந்நூலைப் படித்து அதன்படி நடக்க வேண்டும்.

—வேலுமணி

பொருநை வெள்ளம்

(ஆசிரியர் : இலந்தை சு. இராம சாமி. பதிப்பகம் : சுந்தர் பதிப் பகம், 14,29ஆவது தெரு, தில்லை கங்கா நகர், சென்னை - 600 061. பக்கங்கள் : 128. விலை : ரூ. 20.00)

ஆழமாயும் அகலமாயும் உழப் பட்ட நிலம் போன்ற 51 கவிதைகள் அடங்கிய இத்தொகுப்பு அழகான கட்டமைப்புடன்வசீகரிக்கிறது.

'நாளை நாளை நாளை...' எனும் தலைப்பிலுள்ள ஒரு கவிதையின் சில வரிகள் இதோ -

'ஓடும் காலத்து ஒவ்வோர்
கணமும்
ஒரு வாள் ஆகிறது - நீ
ஒய்ந்து கிடந்தால் சாதனை
இன்றி
ஒடித் தேய்கிறது!'

நல்ல கவிதை நூல்!

வாணிதாசன் குழந்தை இலக்கியம்

(ஆசிரியர் : பாவலர் சு. வேல் முருகன். பதிப்பகம் : கம்பன் பதிப்பகம், 60, குயவர் வீதி, முருங்கப்பாக்கம் அ.நி புதுவை - 605 004. பக்கங்கள் : 104. விலை : ரூ. 14.00)

கவிஞரேறு வாணிதாசன் குழந்தைகளுக்காகப் பாடிய பாடல்கள் விளக்கங்களுடன் நூலாகியுள்ளது. ஊரினைத் திருத்து, ஜயம் அறத்தெளி, ஒரு தலை பேசேல் போன்ற புதிய ஆத்திசூடி மற்றும் ஊருக் குழைப்பது சீரிய பணியாம், ஓதுவ தெல்லாம் தாய்மொழியாக்கு போன்ற புதிய கொன்றை வேய்ந் தோனும் இடம் பெற்றுள்ளன.

ஓர் இளைய இதயத்தின் புலம்பல்கள்

(ஆசிரியர் : எம்.ஏ. கபீர். பதிப் பகம் ; எம்.எஸ். இஸ்மாயில் ஹஜீரா மன்ஜில், 50A. பழைய கடை, பள்ளியாடி - 629 169. பக் கங்கள் : 85. விலை : ரூ. 12.50)

இளைஞர்களுக்கு விவேகமும், வேகமும் ஊட்டக்கூடிய பல கவிதைகள் உள்ளன.

'முப்பது வயதிற்கு மேல்
உயிர் வாழ்பவனின் பெயர்
கின்னஸில்
இடம் பெறலாம்!' -

இப்படித் தான் 'இளைஞர்கள் இவர்கள்..' என்று அறிமுகம் செய்கிறார் கவிஞர்.

பாப்பா மகிழ 10 கதைகள்

(ஆசிரியர் : கவிஞர் எஸ்.ஆர்.ஜி. சுந்தரம். பதிப்பகம் : பாற்கடல் பதிப்பகம், 12, ஆறுமுகம் லேன், திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பக்கங்கள் : 96. விலை : ரூ. 12.00)

குழந்தைகளுக்குப் பிடித்தமான விலங்குகள், பறவைகள் போன்ற வற்றைப் பாத்திரங்களாகக் கொண்டு எளிய நடையில் எழுதப் பட்டுள்ள பத்துக் கதைகள் இத் தொகுதியில் அடங்கியுள்ளன.

பாப்பா மகிழ மட்டுமல்ல, பக்கு வப்படவும் இந்நூல் உதவும்.


வெண்மை போர்த்தியது

(ஆசிரியர் : காவேரி.பதிப்பகம் : காவ்யா புத்தக விற்பனையாளர் 16, 17th E கிராஸ், இந்திரா நகர், பெங்களூர் - 560 038. பக்கங்கள் : 189. விலை : ரூ. 25.00)

நான்கு சிறுகதைகளுள் கஸ்தூரி யும், வெண்மை போர்த்தியதும், இரண்டு நெடுங்கதைகளுள் இந்தியா கேட்டும் ஒரு நல்ல தொகுப்பைப் படித்த நிறைவை ஏற்படுத்துகின்றன.

—நீலவண்

சைனீஸ் செக்கர்ஸ்



‘சைனிஸ் செக்கர்ஸ்’ என்ற விளையாட்டு இரண்டு பேரோ ஆறு பேரோ வண்ணமிட்ட கோலிகளை வைத்து ‘ஹெக்சகனல்’ பலகையில் ஆட வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த விளையாட்டுக்கு ‘ஹால்மா’ என்று நாமமிட்டு 1930 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிரபலமாகி விட்டது. பலகை இரண்டு விதமாகத் தயாரிக்கப் படுகிறது. சிறிய பலகையில் 10 கோலிகளை வைத்து ஆடப்படும். பெரிய பலகையில் 15 வண்ணக் கோலிகளை வைத்து ஆடுவார்கள். போட்டியாளர்கள் தனியாகவும் பார்ட்னர்களாகவும் ஆடுவர். இந்த ஆட்டத்தின் குறிக்கோள் போட்டியாளர் தனது கோலிகளை ஒரு முனையிலிருந்து எதிர்த்த முனை கோடிக்கு எடுத்துச் செல்வதுதான். எந்த விளையாட்டுக்காரர் அல்லது கோஷ்டி இத்தகைய ‘டிரான்ஸ்பர்’ செய்து முடிக்கிறதோ அதுவே வெற்றிக் குழுவாகக் கருதப்படும்.

ஆட்டக்காரர்கள் ஒரு காயைத்தான் ஒரு தருணத்தில் நகர்த்த இயலும். ஒரு காயைப் படி நகர்த்தலாம்; அல்லது குதிக்கலாம். இந்த நகர்த்தல் ஆறு திசைகளில் அருகிலுள்ள குடியேறாத சதுரத்தில் நடக்கும். தாண்டல் ஒரு கட்டம் தாண்டி அதே வரிசையில் அடுத்ததற்குத்தான். அடுத்த நகர்த்தல் தாண்டல் இரண்டும் ஒரே சமயத்தில் ஒரே திசையில் இயலாது.

இந்த விளையாட்டில் முன்னேறுவதற்கு எளிதான வழி, சில வண்ணக் கோலிகளை ஏணியைப் போல் வைத்து விட்டு, பிறகு ஆரம்ப கட்டத்திலிருந்து எல்லைக் கோட்டுக்குக் கடைசிக் காயைத் தாண்டிச் சென்று ஆடுவதுதான். வெற்றிக் களிப்பில் இந்த விளையாட்டில் மூழ்கிவிட்டால் நேரம் போவதே தெரியாது.

சீட்டு விளையாட்டு

சீட்டுகள் மெலிதான கார்ட் போர்டிலானது. ஒவ்வொரு சீட்டுக்கும் எண்ணிக்கை, படம் குறிக்கப்பட்டிருக்கும். சீட்டாட்டத்தில் நூற்றுக் கணக்கான விளையாட்டுகள் உள்ளன. சீட்டில் தனியாகவும், இரண்டு பேரும், மூன்று பேரும், நான்கு பேரும் பங்கு கொண்டு ஆடலாம்.


ஒரு சீட்டுக்கட்டில் 52 சீட்டுகள் இருக்கும். 52 சீட்டுகளில் நான்கு வகைகள் உண்டு. ஒவ்வொரு வகைக்கும் 13 சீட்டுகள் இருக்கும். டைமண்ட், கிளாவர், இஸ்பேட், ஆட்டின் என்று நால்வகை ஜாதிகள் உண்டு. சீட்டுக்கட்டில் ராஜா, ராணி, ஜாக் என்று படமுள்ள சீட்டுகள் இருக்கும்.

சீட்டு விளையாட்டு ஏ.டி.800 ஆம் ஆண்டில் இந்துஸ்தானத்தில் தோன்றியது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஐரோப்பாவில் இத்தாலியில்தான் 1279 ஆம் ஆண்டில்தான் சீட்டுக்கட்டுகள் பிரபல்யமாயின. ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் என்று நாட்டுக்கு நாடு இந்த ஆட்டம் பரவத் தொடங்கியது.

சீட்டாட்டத்தில் ‘பிரிட்ஜ்’ விளையாட்டு நான்கு பேர்கள் ஆடுவார்கள். பிரிட்ஜ் விளையாட்டுக்கு ‘கான்ட்ராக்ட் பிரிட்ஜ்’ என்ற பெயரும் உண்டு. விளையாட்டில் ‘கான்டிராக்ட்’ பூர்த்தியடைய முயற்சி செய்யும்போது எதிர்த்த குழு அதைத் தடுக்க முயலும். கான்டிராக்ட்களைப் பூர்த்தி செய்தால் பாயிண்ட்; பூர்த்தி செய்யாது இழந்தால் பெனல்டி பாயிண்ட்!

பிரிட்ஜ் ஆட்டத்தில் எந்தக் குழு ஆடி, இரண்டு ஆட்டங்களை வெற்றி பெற்றால் அந்தக் குழு வெற்றிக் குழுவாகக் கருதப்படும்.

குண்டுமணி



பிரிட்ஜ் ஆட்டக்காரர்கள் தங்கள் சீட்டுக்களிலுள்ள மதிப்பீட்டைக் கணக்கிடுவார்கள். ஏஸ் சீட்டுக்கு 4 பாயிண்ட்கள்; ராஜாவுக்கு 3 பாயிண்ட்; ராணிக்கு 2 பாயிண்ட்; ஜாக்குக்கு 1 பாயிண்ட்.

விளையாட்டுக்காரர் 12 பாயிண்ட்களுக்குக் கீழே வைத்துக் கொண்டு 'பிட்'பண்ண ஆரம்பிப்பார். பிறகு அந்தச் சீட்டுகளின் மதிப்பு கூடும்; மாறும். தோற்ற பிரிட்ஜ் ஆட்டக்காரர்கள் விரிவான 'பிட்டிங்' தந்திர முறைகளில் எண்ணிக்கை பெருக்கப் பாடுபடும் அதிசயத்தை ஆட்டத்தை நேரில் கண்டவர்கள் வியப்பார்கள். 'கிராண்ட் ஸ்வாம்' என்பது பிரிட்ஜ் ஆட்டத்தில் அதிக அளவு கோரிக்கை.

பிரிட்ஜில் 'டிக்ளேர்' செய்யும் ஆட்டக்காரருக்கு இடது புறத்தில் உள்ளவர் முதல் கார்டைத் தொடங்குவார். 'டிக்ளேர்' பார்ட்னர் தம் சீட்டுகளை மேஜையில் விரித்து வைப்பார். ஆட்டம் மேஜையில் கடிகார முள் சுற்றும் வரிசையில் நடக்கும். டிக்ளேரர் தமது 'டம்மி' கார்டுகளையும் ஆடுவார். எக்குழு கான்டிராக்டைப் பூர்த்தி செய்கிறதோ அதுவே பாயிண்ட்கள் பெறும். ஆறு 'டிரிக்'கள் சேர்த்து விடுவதற்கு 'Book' என்று பெயர். ஆறுக்கு மேற்பட்ட எல்லாம் பாயிண்ட்களாகப் பெருகும். எந்தக்குழு 100 பாயிண்ட்களைப் பெறுகிறதோ அது வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.

1500 ஆம் ஆண்டிலேயே இங்கிலாந்தில் 'பிரிட்ஜ்' ஆட்டம் பிரபல்யமாகிவிட்டது. 1742 ஆம் ஆண்டில் பிரிட்ஜ் சீட்டாட்டத்துக்கான சட்டதிட்டங்கள் உருவாயின. இந்தச் சட்டதிட்டங்களை உருவாக்குவதில் ஆங்கிலேய சட்ட நிபுணர் எட்மாண்ட் ஹோயிலின் சேவை குறிப்பிடத்தக்கது. சீட்டாட்டத்தில் 'கான்ட்ராக்ட் பிரிட்ஜ்' ஆட்டத்தைத் தோற்றுவிக்கக் காரணமானவர் அமெரிக்கர் ஹெரால்ட் வாண்டர் பில்டும் அவரது சகாக்களுமாவர்.

சீட்டாட்டத்தில் 'ரம்மி' ஆட்டத்தில் மூழ்கியவர்கள் நேரம் காலம் தெரியாது அதிலேயே ஆழ்ந்துவிடுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ரம்மி ஆட்டத்தில் பலர் பணம் வைத்து ஆடித் தோற்றுப்போனதும் உண்டு. ரம்மி ஆட்டத்தில் தம் குடும்பச் சொத்தைப் பறி கொடுத்த சீட்டாட்ட வெறியர்களும் உண்டு.

சீட்டாட்டம் ஒரு பொழுது போக்காகப் பயன்பட வேண்டுமே தவிர, ஒரு சூதாட்டமாகப் பயன்படக் கூடாது. இண்டோர் விளையாட்டாகப் பலர் 'கிளப்'களில் ஆடுவதைப் பார்க்கலாம்.

கோகோ

கோகோ ஆட்டம் இந்திய நாட்டில் சடுகுடுவைப் போல் பிரபல்யமான விளையாட்டு. இதன் சரித்திரம் இன்னும் புரியாப் புதிர்.

கோகோ ஆட்டத்தில் ஓடி, விரட்டி ஓர் எல்லைக் கோட்டுக்குள் பிடிப்பதும், பிடிபடாமல் தப்புவதும் விளையாட்டின் குறிக்கோள்.

கோகோ ஆட்டத்தின் மைதானம் 34 மீட்டர் நீளம், 16 மீட்டர் அகலம் கொண்டதாயிருக்கும். கோகோ குழுவில் விரட்டிப் பிடிக்கும் குழு அமர எட்டு சதுரக்கட்டங்கள் உண்டு. கோகோ ஆட்டத்தில் ஒரு கம்பம் நிறுவப்பட்டிக்கும். கோகோ ஆட்டத்துக்குத் தேவையான ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை ஒரு குழுவுக்கு 9 பேர்களாகும். கோகோ போட்டிக்கு 28 நிமிஷங்கள் பிடிக்கும்.

கோகோ விளையாட்டு மகாராஷ்டிரத்தில் ரொம்பவும் பிரபல்யமாக விளங்குகிறது. பூனாவிலுள்ள கோகோ விளையாட்டு நிபுணர்கள் ஒன்று கூடி கோகோ விளையாட்டு விதிமுறைகளைப் படைத்திருக்கிறார்கள்.


எல்லா ஆட்டக்காரர்களையும் குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் பிடித்து வெளியேற்றச் செய்த வெற்றிக் குழுவுக்கு 'லோனா' என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்த கோகோ ஆட்டத்தை நடுவர்கள் நிர்வகிப்பார்கள். ஒரு குழுவுக்கு இரு தடவைகள் விரட்டுவதற்கும் ஓடுவதற்கும் சான்ஸ் உண்டு.

கோவையில் தேசியப் பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. இந்த விளையாட்டுப் போட்டிகளில் கோகோ விளையாட்டைப் பார்க்கத் திரளான மக்கள் கூடியிருந்தது திகைப்பைத் தந்தது.

கோகோ ஆட்டத்தில் தமிழகக் குழுவில் ஆடிய பெண் பி.சரிதா. இவர் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் பொருளாதார பாடத்துக்குப் பயின்று கொண்டிருக்கிறார். கோகோ ஆட்டத்தில் நல்ல திறமைசாலி.

"கோகோ ஆட்டத்தில் மகாராஷ்டிரக் குழு மிகுந்த,தேர்ந்த



அனுபவம் மிக்கது. அந்தமான் நிக்கோபார் குழுவுக்கெதிராக நாங்கள் 22.0 இன்னிங்க் தோல்வி முன்பு கொடுத்தது எங்களது ரிகார்டு."

தமிழகக் குழுவில் கோகோவில் தேசிய விளையாட்டு வீராங்கனைகள் ஆறு பேர்கள் இருப்பது தனிச்சிறப்பு. சரிதா, தேவி, அருணா, அமுதா, ஷோபா மேரி, சாந்தி என்று புகழ்பெற்ற கோகோ ஆட்டக்காரிகள் தமிழக அணிக்குப் பல தடவை புகழ் சம்பாதித்துத் தந்தவர்கள்.

சமீபத்தில் சர்வகலாசாலைகளுக்கான கோகோ போட்டி சிகந்திராபாத்தில் நடந்தது. இந்தப் போட்டியில் பங்கேற்ற சென்னை சர்வகலாசாலைக் குழுவில் மூன்று பெண்கள் சரிதா, தேவி, லதா பங்கேற்றனர். கோகோ ஆட்டத்துக்கு அப்பாவு பயிற்சியாளராகத் திறமையுடன் செயலாற்றுகிறார். 1974 ஆம் வருஷம்தான் கோகோ பிரபல்யமடையத் தொடங்கியது.

1984 ஆம் ஆண்டு ஹரியானாவில் நிகழ்ந்த கோகோ போட்டியில் தமிழக ஆடவர் குழு 'தங்கம்' பெற்றது அரிய சாதனை. 1938 ஆம் ஆண்டில் தமிழகப் பெண்கள் பீஹாரில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழகத்தில் கோகோ ஆட்டத்துக்குச் சூடு பிடித்திருப்பது சமீபத்தில்தான். ஆனால் மகாராஷ்டிரம் தொடக்க நாளிலிருந்தே கோகோ ஆட்டத்தில் முன்னேறி வருவது அங்குள்ள ஆட்ட வல்லுநர்களின் பயிற்சிக்குக் கிடைக்கும் பரிசுகள்.

கோகோ ஆட்டத்துக்கு இன்னும் ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தால் தமிழக அணிகள் மேலும் பல சாதனைகளைச் செய்து பெருமை சேர்க்கும்.

கத்தரித்து ஒட்டியது



ஹிட்லர் காலத்தில், ஒருவன் முகத்தில் அடிபட்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான்.

"ஏதாவது விமானத் தாக்குதலில் அகப்பட்டுக் கொண்டு விட்டீர்களா!" என்று கேட்டாள் நர்ஸ்.

"இல்லை:

"பின்!"

"விமானத் தாக்குதலினால் வீடு இழந்த என் நண்பன் ஒருவன் நடுவில் நின்று கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், வழக்கம்போல ஹெய்ல்! ஹிட்லர்! என்றேன். அவன் கொடுத்த அடி இது".

வாங்கின கடனை அடைக்க முடியாமல் திவாலா ஆகிறவனை ஆங்கிலத்தில் பாங்க்ரப்ட் (Bankrupt) என்று கூறுவார்கள்.

இந்த வார்த்தை வந்தது ஒரு வேடிக்கை. இத்தாலியில் ஒரு காலத்தில் வியாபாரிகள் பெஞ்சுகளில் உட்கார்ந்து கொண்டு வியாபாரம் செய்வார்கள். எவனாவது ஒரு வியாபாரி திவாலா ஆகிவிட்டால் அவன் பெஞ்சை உடைத்துப் போட்டு அவனை 'உடைந்த பெஞ்சு", அதாவது இத்தாலி மொழியில் "பாங்கோராட்டோ!" (Banco Rotto) என்று கூப்பிடுவார்கள். "பாங்க்ரப்ட்" ஆகியது அது.

உலகில் முதலில் தோன்றியது யார்? சிற்பியா, அரசியல்வாதியா, வைத்தியரா என்று தர்க்கம் எழுந்தது.

"ஆதாமின் எலும்பிலிருந்து ஏவாள் உண்டானதால், அது ரணசிகிச்சையின்றி நடக்காத காரியம். ஆகவே வைத்தியர் தான் முன்னால் தோன்றினார்" என்றார் வைத்தியர்.

"அதற்கும் முன்னால் குழப்பத்திலிருந்து ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டது. ஆகவே சிற்பிதான் அதற்கும் முன்னால்" என்றார் சிற்பி.

"அதற்கும் முன்னால் குழப்பம் முதிர்ந்தது, அதை ஏற்படுத்தியது யார்? ஆகவே அரசியல்வாதிகள்தான் எல்லாருக்கும் முன்னர் இருந்திருக்கின்றனர்" என்றார் அரசியல்வாதி.

தாமும் ஒரு பிலிம் டைரக்டராக ஆகவேண்டும் என்று விரும்பிய ஒருவர் ஒரு பிரபல பிலிம் டைரக்டரைப் பார்த்து, "ஒரு பிலிம் டைரக்டருக்கு என்ன தகுதிகள் தேவை" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பிரபல பிலிம் டைரக்டர்,

"அவருக்குப் பல மொழிகள் தெரியவேண்டும். சங்கீதம், நடனம், நடிப்பு, மனோதத்துவம் தெரியவேண்டும். ஒளி அமைப்பு தெரிய வேண்டும்" என்று இப்படி அடுக்கிக் கொண்டே போனார்.

"ஆமாம், இத்தனை தகுதிகள் தங்களிடம் உள்ளனவா!"

"இல்லை".

"பின் எப்படி தாங்கள் பிரபல பிலிம் டைரக்டர் ஆனீர்கள்?"

"நான் யாரையும் என்ன தகுதிகள் தேவை என்று கேட்கவில்லை, அதனால்தான்".

ஒரு ஞாபக மறதியுள்ள கலாசாலை ஆசிரியர், தம் பாக்கெட் கடிகாரத்தை ஞாபக மறதியாக வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டார். கலாசாலைக்குச் சென்று கொண்டிருந்த அவருக்குப் பாதி வழியில்தான் கடிகாரத்தின் ஞாபகம் வந்தது. பையைத் தடவிப் பார்த்தார். கடிகாரம் இல்லை! வீட்டிற்குத் திரும்பிப் போய் அதை எடுத்துக் கொண்டுவர நினைத்தார். அதற்கு நேரம் இருக்குமா என்று கடிகாரத்தைப் பார்ப்பதற்காக மீண்டும் பையைத் தடவினார்!

நாடோடி

நெருப்பாய்த் தகிக்கும் நண்பகல். வேலூர் லாங் பஜார் வெறிச்சோடிப் போயிருந்தது. நடேசன் ஜவுளிக்கடை. வேலூர் சுற்று வட்டாரம் மட்டுமின்றி இம்மாவட்டத்தின் பெருநகரங்களிலும் வெகு பிரசித்தம் பெற்றிருந்தது.

வெயிலின் தகிப்பால் கடை குமாஸ்தாக்களில் சிலர் உட்கார்ந்தவாறே தூங்கிக் கொண்டிருந்தனர். அந்தக் குமாஸ்தாக்களில் ஒருவன், வஜ்ரம்.

வஜ்ரம் இருபதை எட்டிக் கொண்டிருக்கும் இளம் வயது. சொந்த ஊர் வாணியம்பாடி அடுத்த செட்டியப்பனூர். சிறு வயதில் தந்தையை இழந்தவன். தாயின் வியர்வை சொட்டும் உழைப்பால் வளர்ந்தவன். விபரம் அறியும் பருவம் வந்ததும் தாயின் சுமைக்குத் தோள் கொடுக்கவும் வயிற்றைக் கழுவவும் வாணியம்பாடியில் மூட்டை சுமப்பது உள்பட பல வேலைகளைச் செய்தும் வாய்க்கும் வயிற்றுக்கும் இழுபறிதான்.

இந்த நிலையில்தான் செட்டியப்பனூரின் பெரும்புள்ளி தனக்கோட்டி சிபாரிசினால் வேலூர் நடேசன் ஜவுளிக்கடையில் குமாஸ்தாவாகச் சேர்ந்தான் வஜ்ரம்.

சில மாதங்கள் ஆயிற்று. பக்கத்துத் தெருவிலே மெஸ் சாப்பாடு. கடை முதலாளி பெரிய மனசு வைத்து அவன் தங்கிக் கொள்ளத் தனது கடல் போன்ற வீட்டில் இடம் ஒதுக்கிக் கொடுத்தார். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வாங்கிய சம்பளத்தில் கணிசமாக மிச்சப்படுத்தி ஒரு ஞாயிறு விடுமுறையில் புறப்பட்டுச் சென்று அம்மாவைச் சந்தித்தான்.



மகன் கொடுத்த தொகையைப் பூரிப்புடன் வாங்கிக் கொண்ட அந்தத் தாயுள்ளம் சிலிர்த்தது.

வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போட்டாள். மகன் உண்ணும் அழகைக் கண்டு குளிர்ந்தாள். புதூர் கெங்கையம்மன் திருவிழாவுக்கு மீண்டும் வருவதாகச் சொல்லிவிட்டு அன்று மாலையே போய் விட்டான் வஜ்ரம்.

நினைவிலிருந்து விடுபட்ட வஜ்ரம் புதூர் திருவிழாவைப் பற்றிக் குறிப்பிட்டு நேற்று தன் தாயிடமிருந்து வந்த கடிதத்தை நினைவுபடுத்திக் கொண்டான்.

கல்லாவில் உட்கார்ந்திருந்த நடேசன் மகன் கந்தசாமிதான் தன் தந்தை காலமான காலத்திலிருந்து கடையின் நிர்வாகத்தை ஏற்றுப் பொறுப்புடன் நடத்தி வந்தார்.

வியாபாரமின்றி ஆட்கள் உறங்கிவிழுவதைப் பார்த்தார் அவர். நினைவில் தோய்ந்திருந்த வஜ்ரத்தைப் பார்த்து, "வஜ்ரம், கண்ணமங்கலம் காட்டுகானூர் கோவிந்தன் தன் மக கல்யாணத்துக்கு எடுத்த ஜவுளி பாக்கி பத்தாயிரத்து



சொச்சம் நிக்குது. நீ போயி அந்தப் பணத்தை வாங்கிட்டு வா. பணம் பத்திரம்" என்று கூறி ஒரு கடிதத்தையும் கொடுத்தார். வஜ்ரம் புறப்பட்டான். அவனுக்குத் தனது பழைய தோஸ்து ராஜாமணி நினைவு வந்தது.

செட்டியப்பனூரில் அந்த நாட்களில் பக்கப் பக்க வீடுகளில் வசித்த இருவரும் ஒன்றாக வேலை தேடி அலைந்ததும், வேலை இல்லாத நாட்களில் பாதிரி குட்டை மர நிழல்களில் பசியோடு படுத்துறங்கியதும், பக்கத்து மாந்தோப்புகளில் மாங்காய் பறித்துத் தின்றதும் ஒனிறாகவே உண்டு உறங்கியதும் நினைவுக்கு வந்தது.

ராஜாமணி கண்ணமங்கலத்தில் டீக்கடை வைத்திருக்கும் விஷயம் தெரியவந்தது. இன்று அவனை எப்படியும் சந்திப்பது என்று எண்ணியவாறே பஸ் ஸ்டாண்டை நோக்கி வேகமாக நடந்தான்.

ராஜாமணியின் டீக் கடையை விசாரித்து அடைந்த வஜ்ரத்தைக் கண்டதும் ராஜாமணி கட்டித் தழுவி வரவேற்றான். இருவரும் குசலம் விசாரித்துப் பழைய நினைவுகளில் முக்குளித்தனர்.

வஜ்ரம் தான் வந்த விஷயத்தைச் சொன்னான். காட்டுகானூர் செல்ல எதிரிலுள்ள கடையில் வாடகை சைக்கிள் எடுத்துக் கொடுத்தான் ராஜாமணி. வஜ்ரம் வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினான். முதலாளி சொன்ன வீட்டு அடையாளங்களை வைத்துக் கோவிந்தன் வீட்டைக் கண்டடைந்தான். பெரிய வீடு.

கட்டிலில் உட்கார்ந்திருந்த கோவிந்தனிடம் பவ்யமாகக் கடிதத்தை நீட்டினான் வஜ்ரம். அமரச் சொல்லிச் சைகை மூலம் தெரிவித்தார் அவர். அமர்ந்தான். கடிதத்தை நோட்டம் விட்டவர், "கொஞ்சம் இரு, வர்றேன்" என்றவாறு உள் கட்டிலிலிருந்த தன் மனைவிக்குக் குரல் கொடுத்தார். உள்ளே சென்று பணக் கத்தையுடன் வந்தார். அவர் மனைவி பெரிய செம்பில் மோருடன் வந்தார். வஜ்ரம் வாங்கிப் பருகினான்.

"பத்தாயிரம் இருக்கு. மீதி நாளை மறுதினம் வந்து தர்றேன். சரியா எண்ணிக்கோ". இந்த லெட்டர்லே பெற்றுக் கொண்டேன்னு ஒரு கையெழுத்துப் போடு" என்று நீட்டி எழுதி வாங்கிக் கொண்டார். வஜ்ரம் புறப்பட்டான்.

மாலை நான்கு மணி. கண்ணமங்கலம் வந்து சைக்கிளை விட்டுவிட்டு ராஜாமணியிடம் விடை பெற்றான். வேலூர் டவுன் பஸ் நின்றிருந்தது. அதில் உட்காருவதற்குக்கூட இடமில்லை.

பஸ் புறப்படத் தயாரானது. ஓடிச்சென்று ஏறி நின்று கொண்டான். சட்டையின் பக்கவாட்டுப் பாக்கெட்டிலுள்ள பணத்திற்குக் கவசமாக வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டான்.

பஸ் கணியம்பாடி வந்தது. வஜ்ரம் அனிச்சையாகப் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். பாக்கெட் கனத்தது. பஸ் கொள்ளாத அளவுக்குக் கூட்டம் ஏறியது. வழியெல்லாம் பயணிகள் ஏறினர். பஸ் திக்குமுக்காடியது. வஜ்ரம் சிரமப்பட்டு நசுங்கி, புழுங்கி, நெளிந்து, வளைந்து கூட்டத்தில் ஒடுங்கினான்.

பஸ் ராஜா தியேட்டர் வந்து நின்றது. பஸ்ஸில் பாதிக்

பயன்தரும் குறிப்புகள்

★ கீரையை வேகவிடும் போது முதலில் நீரில் சிறிது வெள்ளைச் சுண்ணாம்பு, தேவையான உப்பு இவற்றைப் போட்டு ஒரு கொதி வந்ததும் கீரையை வேக வைத்தால் பசுமை மாறாமலும் சுண்ணாம்புச் சத்துடனும் இருக்கும்.




★ கூட்டு, குழம்பு இவற்றிற்குத் தேங்காய், மிளகாய், சீரகம் அரைக்கும்போது அத்துடன் இரண்டு ஸ்பூன் பச்சரிசியை ஊற வைத்து அரைத்தால் கூட்டும் குழம்பும் கெட்டியாகும். தேங்காயின் அளவையும் குறைத்துக் கொள்ளலாம்.

★ சுண்டல் செய்ய நினைத்தால் முழுக்கடலையோ, வெள்ளைக்கடலையோ, பட்டாணியோ எதுவானாலும் முதல் நாள் காலையில் ஊற வைத்துவிட்டு அன்று இரவில் தண்ணீரிலிருந்து எடுத்து ஈரத் துணியில் போட்டு கட்டி வைத்தால் முளைவரும். முளைவந்த தானியத்தைச் சுண்டல் செய்து சாப்பிட்டால் முழுப்பயனும் சத்துக்களும் கிடைக்கும்.

'ராதி'

அமுதசுரபியின் 'முக்கனி'- திட்டம்



ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ.3000/- டெபாஸிட் செய்து 6 வருடங்களில் இரட்டிப்பாக ரூ.6000/- பெறுங்கள்.

44 வருடங்களாகத் தமிழகத்தில் தொடர்ந்து வெளிவரும் ''அமுதசுரபி'' தமிழ்ப் பெருமக்களால் விரும்பிப் படிக்கப்படும் தமிழ் மாதப் பத்திரிகை.

இயல், இசை, நாடகத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கமான ஸ்ரீராம் டிரஸ்ட், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிய 'அமுதசுரபி'யை வெளியிடுகிறது.

அதன் தொடர்பாக வாசகப் பெருமக்களுக்கு இனிய பல நல்ல பலன்களை அளிக்கவே இந்த முக்கனித் திட்டம்.

முக்கனி போனஸ்:

1. ஒவ்வொரு மாதமும் ''அமுதசுரபி'' மாத இதழ் சந்தா முதலீடு செய்த உங்களுக்கோ அல்லது நீங்கள் விரும்பும் அன்பருக்கோ அனுப்பப்படும்.

   ஆறு வருடத்திற்கு, வருடா வருடம் ''தீபாவளி மலர்'' பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

   நீங்கள் முதலீடு செய்தவுடன் உங்களுக்கு (அன்பளிப்பாக) 8 கிராம் எடையுள்ள பூஜையில் வைப்பதற்கேற்ற வெள்ளிப் பதக்கம் அளிக்கப்படும்.

உங்கள் முதலீட்டிற்கு, ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (Shriram Investments) முழு உத்திரவாதம் அளிக்கிறது.

சந்தா முதலீட்டுத் திட்டத்தில் (டெபாஸிட்) முதலீடு செய்பவர்களுக்கு :

1. தமிழ் அன்பர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளிக்கப்படும் டெபாஸிட் இது.
2. ரூ.3000/-ம் டெபாஸிட் தொகை ஆறு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் ரூ.6000/-ம் ஆகத் திருப்பித் தரப்படும்.
3. டெபாஸிட் தொகையை டிராப்ட்டாகவோ, செக்காகவோ ''ஸ்ரீராம் டிரஸ்ட்'' பெயருக்கு கிராஸ் செய்து Account Payee எனக் குறிப்பிட்டு எழுதப்படல் வேண்டும்.
4. டெபாஸிட்டுகளைத் தனியாகவோ கூட்டுக் கணக்காகவோ அளிக்கலாம். திரும்பப் பெறும்போது முதலில் குறிப்பிட்டுள்ள பெயருக்கோ அல்லது எழுத்து மூலம் தெரிவிக்கப்படுபவருக்கோ டெபாஸிட் தொகை அளிக்கப்படும்.
5. ஆறு ஆண்டு காலத்திற்குப் பிறகே டெபாஸிட் தொகை (இரட்டிப்பாக) திருப்பி அளிக்கப்படும்.

கலையும், நிதியும் கலந்து அளிக்கும் ஸ்ரீராம்.

வீணாகும் விளை நிலங்கள்..!



ஓ...
அந்நியச் செலாவணியை
அள்ளித்தரும் தோலே
நீ வடிக்கும் கழிவால்
வீணாகும் விளைநிலங்கள்!
பாழாகும் பருகும் நன்னீர்!
பீடிக்கும் பல்வேறு நோய்கள்!
இவற்றிற்கோர் நிரந்தர விமோசனத்தை
இன்றே நன்றே செய்ய
இனிய முதலாளிகளிடம்
எடுத்தியம்பிப் பாரேன்!

கே. விஜயபாரதி

கூட்டம் வடிந்தது. வஜ்ரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். மடித்துக் கட்டிய வேஷ்டி கீழ் இறங்க பாக்கெட் கிழிக்கப்பட்டுப் பணம் காலியாகி இருந்தது.

"ஐயோ, பத்தாயிரம் போச்சே" வஜ்ரம் புலம்பி அரற்றினான். அவனைச் சுற்றி ஜனவட்டம். ஆளுக்கு ஆள் கேள்வி எழுப்பினர். விழிப்புணர்ச்சிக்குப் பாடம் நடத்தினர். முதலாளியிடம் நடந்ததைச் சொல்லி அழுதான்.

"இந்த வேஷமெல்லாம் என் கிட்டே வேணாம். நீதான் அந்தப் பணத்தை மறைச்சி வெச்சிட்டு இப்படி நாடகமாடுறே. உன்னே சிபாரிசு செஞ்ச செட்டியப்பனூர் தனக்கோட்டி முகத்தைப் பார்த்து உன்னே உடனடியா போலீசுல ஒப்படைக்கலே. என்ன செய்வியோ, ஏது செய்வியோ, ஒரு நாள் டயம் தர்றேன். நாளைக்குச் சாய்ந்தரத்துக்குள்ள பணத்தை ஒப்படைக்கல... போலீசுல சொல்லிக் கம்பி எண்ண வைப்பேன். என் எதிர்ல நிக்காதே போய்டு" என்று விரட்டினார் முதலாளி.

அன்றிரவு வஜ்ரம் தான் தங்கியிருந்த முதலாளி வீட்டுக்குச் செல்லவில்லை. பல இடங்களில் சுற்றி அலைந்து கோட்டை பார்க்கில் வந்து படுத்துக்கொண்டான்.

அவன் மனத்தில் எண்ணங்கள் அலையடித்தன. பத்தாயிரத்துக்கு எங்கே போவது? ஒரு வேளை தனக்கு ஜெயில் தண்டனை கிடைத்து விட்டால் ஊராரும், உற்றாரும் எள்ளி நகையாட மாட்டார்களா? மற்றவர்கள் கிடக்கட்டும். அம்மா... அவள் மானி. ஏழ்மையிலும் நேர்மையாக வாழ்ந்தவள். இந்தச் செய்தியை அவள் தாங்குவாளா? இப்படி ஒரு அவமானம் ஏற்பட்ட பின் எந்த முகத்தோடு ஊர் சென்று அம்மாவையும், மற்றவர்களையும் பார்க்க முடியும்?

காலைப் பொழுது. கோட்டை வாசலில் கூட்டமான கூட்டம். "தண்ணியிலே பொணம் மிதக்குது" என்று ஆளுக்கு ஆள் வாய்க்கு வாய் அசை போட்டது. "இளம் வயசு போல இருக்கு. யாரு பெத்த புள்ளையோ... பாவம் துள்ளத் துடிக்கப் போய்ட்டான்".

போலீசுக்குத் தகவல் போயிற்று. கூட்டத்தை விலக்கி உள்ளே வந்த போலீசார் சில ஆட்களின் உதவியுடன் பிணத்தைக் கரைச் சேர்த்தனர். சோதனையிட்டனர். கூட்டத்திலே ஒருவர் "நடேச மோலியார் ஜவுளிக்கடை குமாஸ்தா வஜ்ரம் தான்" என்று அடையாளம் சொன்னார். ஜவுளிக் கடை முதலாளிக்குத் தகவல் போயிற்று.

முதலாளி வந்தார். வஜ்ரத்தின் உடலைப் பார்த்ததும் விசனிப்பது போல் முக பாவனை செய்தார். போலீசார் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். "நேற்று மத்தியானம் அரை நாள் லீவு சொல்லிவிட்டுப் போனவன் தான். எங்கே போனான்? எப்படி இதுல விழுந்தான்? என்று எதுவும் தெரியாது" என்று இரங்கிய குரலில் கூறினார். மனசாட்சி குத்தியது. நடந்ததைச் சொன்னால் பிறகு போலீஸ், கேஸ், கோர்ட் என்று வேண்டாத தொல்லைகள் வரும். கடைப்பெயரும் கெடும் என எண்ணி உண்மைக்குத் திரைப் போட்டார்.

வாழ்வைத் தேடி - எதிர்காலக் கனவுகளைக் கண்களிலே தேக்கி நம்பிக்கையுடன் வேலூர் வந்த அந்த ஜீவன் மானத்தைக் காத்துக்கொள்ளச் சாவைத் தேடிச் சரணாகதி அடைந்துவிட்டது.

சாதனைச் செல்வர் நல்லி குப்புசாமி



மேலட்டையில்:

திருமதி ஜெயலட்சுமி மற்றும்

திருமதி சங்கீதா சுந்தரராஜன்

மதுரை 'நல்லி சில்க்'


புதிய ஷோரூம்

திறந்தபோது எடுத்த படம்

வண்ணப்படம்: யோகா

தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியா முழுவதும், ஏன் புடைவை நாகரிகம் வளர்ந்து வரும் உலக நாடுகளில் எல்லாம்கூடப் பெருமையுடன் பேசப்பட்டுவரும் புகழுக்குரிய பெயர் - நல்லி குப்புசாமியும், அவர் பட்டு விற்பனை நிலையமும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே இவருடைய தாத்தா பட்டுச் சேலைகளைத் தலைச் சுமையாகச் சுமந்து விற்றவர். நாளொன்றுக்கு இரண்டு மூன்று புடைவைகள் விற்றாலே அதிகம். இவருடைய தந்தை காஞ்சிபுரத்தில் இருந்து சென்னைக்கு வாடிக்கையாளர்களுக்குப் புடைவை கொண்டு வந்து தந்து வியாபாரம் செய்தவர்.



இன்று...?

நல்லி கடையில் நாளெல்லாம் பண்டிகை தான் - திருவிழாக்கூட்டம்தான்.

எப்படி முடிந்தது இவரால் இப்படி வளர?

எப்படி வந்தது இந்த முன்னேற்றம் இவருக்கு?

எப்படி இயன்றது இவரால் இப்படியொரு சாதனை படைக்க?

இந்த வினாக்கள் எல்லாவற்றிற்கும் ஒரே விடை உழைப்பு, உழைப்பு, உழைப்பு... என்பது தான்.

"உங்களுடைய இன்றைய இந்த வெற்றியின் ரகசியம் என்ன?" என்று கேட்டபோது அவரே சொன்னார்:

முன்பெல்லாம் ஒரு வாடிக்கையாளருக்குத் தேவையான கலர் - டிசைன் புடைவை அப்போது கைவசம் கடையில் இல்லை என்றாலும், இரண்டொரு நாளில் தறியில் இருந்து தருவித்துத் தருகிறோம் என்று சொன்னால் அவர்களும் பொறுமையாக இரண்டு நாள் கழித்து வந்து வாங்கிச் செல்வார்கள். இன்று காலம் மாறிவிட்டது. இந்தக் கடையில் அந்த டிசைன் இல்லை என்றால் வேறு கடைக்குப் போகிறார்கள். அல்லது இருப்பதில் நல்லதைத் தேர்வு செய்து விடுகின்றனர். எனவே வாடிக்கையாளர்கள் திருப்தியை நிறைவேற்றுவது வியாபாரத்தின் முக்கிய நோக்கமாக இன்று உள்ளது. இந்தத் திருப்தி அவர்கள் வாங்கும் பொருளின் தரத்தில் அசையாத நம்பிக்கை வைப்பதைப் பொறுத்தே வளரும். எனவே எங்கள் வியாபாரம் அன்றும் இன்றும் என்றும் தரம் - அதுவே நிரந்தரம் என்ற முழக்கத்தையே மூச்சாகக் கொண்டுள்ளது".

"காஞ்சிபுரம் பட்டு என்றாலே ஆயிரக் கணக்கில் விலை இருக்குமோ?"

"ஆமாம், காஞ்சிபுரம் பட்டு என்றாலே விலை ஆயிரத்துக்கு மேல்தான். காஞ்சிபுரம் பட்டின் குறைந்தபட்ச விலையே ஆயிரம், ஆயிரத்து ஐநூறு ரூபாய்தான். ஆயிரம் ரூபாய்க்குள் பட்டுச் சேலை வேண்டும் என்றால் ஆரணி, தர்மாவரம் புடைவைகள்தான் வாங்க வேண்டும்".

"இந்த விலை வித்தியாசம் இந்தப் புடைவைகளின் தரத்திலும் இருக்குமோ?"

"இருக்காது. காஞ்சிப்பட்டு சூப்பர் ஃபைன் பாவு நூலே உபயோகித்துத் தயாரிக்கப்படுகிறது. சரிகையும் மூன்று அல்லது நான்கு அங்குலம் என்று இருக்கும். மற்ற பட்டுப் புடைவைகளில் ஒன்று அல்லது ஒன்றரை அங்குலம் தான் இருக்கும். இந்த வித்தியாசம் தவிரத் தரத்தில் வித்தியாசம் இருக்காது".

பட்டுப் புடைவைகளின் விலை உயர்வுக்கு இன்னொரு காரணம், அவை தறியில் நெய்யப்படுவது. ஒரு புடைவை நெய்து முடிக்க ஆகும் நாள்கள், செலவிடப்படும் மனித உழைப்பு இவையும் மனதில் கொண்டால் விலை வித்தியாசத்துக்குக் காரணம் புரியும். கையால் ஓர் ஓவியம் வரைய ஒரு மாதம் ஆகலாம். அதன் விலை ஓராயிரம்கூட இருக்கலாம். ஆனால் அதையே அச்சில் பதித்து விற்க ஆரம்பித்தால் நொடியில் ஆயிரக் கணக்கில் தயாரித்து விடலாம். விலையும் மிகக் குறைவாக இருக்கும். பட்டுத்துணிகள் விற்பனை உயர்வுக்கு இதுதான் காரணம்."

"இவ்வளவு விலை கொடுத்தும் பட்டுப் புடைவைகளையே ஏன் வாங்குகிறார்கள்?"

"பண்டிகைகள், திருமணங்களுக்கு பட்டுப் புடைவைகள் வாங்குவதும் பட்டு உடுத்திப் போவதும் நமது பழக்கமாகி விட்டது. பூசை நேரங்களில் கூடப் பட்டுவேட்டி கட்டிக் கொள்வது புனிதமாகக் கருதப்படுகிறது. அல்லாமலும் காஞ்சிப்பட்டின் சிறப்பு அதன் பாரம்பரியப் பழமை குன்றாச் சிறப்பே - கைவண்ணமே - கலர்களே. புதுப் புது டிசைன்கள் புடைவைகளில் எவ்வளவோ வரலாம். ஆனால் பட்டுப் புடைவைகளில் அதன் பெருமை அதன் பழம் பெருமையே - புராதனச் சிறப்பே. இன்றும்கூடக் காஞ்சிபுரத்தில் உள்ள டிசைனர்கள் பழைய டிசைன்கள் எங்கே கிடைக்கும் என்று தேடித் தேடி வருகிறார்கள். இந்த வகையில் காஞ்சிபுரம் வீவர்ஸ் சர்வீஸ் சென்டர் ஆற்றி வரும் சேவை மகத்தானது.

நல்லி குப்புசாமி அவர்களின் இந்த பதில் நமக்குப் பட்டின் கதையையே படித்துக் காட்டுகிறது.

நூறு ரூபாய் புடைவை முதல் ஆயிரம் ஐநூறு ரூபாய் புடைவை என்று எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வைத்துக் கொண்டு எல்லாரும் அங்கே கூடிக் கூட்டம் போட்டுப் பரிதவிப்பதைத் தடுக்க நல்லி கடையில் ஒரு நல்ல ஏற்பாடு உள்ளது. அவரவர் விரும்பும் விலைக்கேற்ற புடைவைகள் விலைக்குத் தகுந்ததுபோல் பீரோக்களில் உள்ளன. எனவே நீங்கள் வாங்க விரும்புவது ஆயிரம் ரூபாய் விலையில் புடைவையா, நீங்கள் 27 ஆம் நம்பர் பீரோவுக்கு முன்னே போய் நின்றால் போதும். ஆயிரத்து ஐநூறு ரூபாய் விலையிலா? அடுத்த பீரோ. நொடியில் செலக்ஷன் முடிந்துவிடும். கஷ்டம் மிச்சம். பணியாளர்களுக்கும் எடுத்துப் போட்டு மடித்து வைக்கும் வேலை மிச்சம். இந்த நேரத்தில் அவர்கள் இன்னும் நான்கு வாடிக்கையாளர்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்யலாம் அல்லவா? நல்லி கடையில் விற்பனைப் பிரிவில் உள்ளவர்களுக்குச் சொல்லித் தரப்பட்டிருக்கும் முதல் பாடம் 'விலையைச் சொல்லாதே. தரத்தைப் பற்றியே சொல்' என்பதுதான். தரத்தில் அவர்களுக்கு உள்ள அக்கறை மட்டுமல்ல இதற்குக் காரணம். தரமான பொருள்களையே வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற தார்மீக சிந்தனையும் இதற்குக் காரணம். வாங்க வந்தவர்கள் தலையில் எதையாவது கட்டிவிடத் துடிக்கும் கடைக்காரர்களிடையே நல்லியின் வியாபார நோக்கம் நாகரிகமானது, நாணயமானது, நம்பிக்கையானது.

அவர் சொன்னார்:

"காஞ்சிப்பட்டுக்கு இன்று உள்ள வரவேற்பும் புகழும் என்றும் இருக்கும். இது வளருமே தவிர குறையாது. எத்துணை செயற்கை இழைப் பட்டுகள், பாலியஸ்டர்கள் வந்தாலும் காஞ்சிப்பட்டின் புராதனப் பெருமைக்கு ஈடுதர அவற்றால் முடியாது.",

சாதனைச் செல்வர் நல்லி குப்புசாமியின் சாதனைப் பட்டியலில் தொழில் வளர்ச்சி, தொழிலாளர் ஏற்றம் மட்டுமல்ல. தொழிலில் - வர்த்தகத்தில் ஒரு பண்பாட்டு வளர்ச்சி - பயனுடைய கலை முயற்சி. கைத்தொழில் தேர்ச்சி. ஒரு மணிவிழாக் காலம் கண்டுவிட்ட நல்லி நிறுவனம் வைரவிழா - நூற்றாண்டு விழாக் காண வாழ்த்துவோம். ஃ

பேட்டி-:

ஞா. மாணிக்கவாசகன்

விக்கிரமன்

26. வாழ்க, பேரரசர்!

தஞ்சைப் பெருநகர் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. அந்தப் பரபரப்பில் மகிழ்ச்சி காணப்படவில்லை.

சந்திக்கும் மக்கள் ஒருவரோடொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டனர்.

பெண்கள் தங்கள் அண்டை வீட்டுப் பெண்ணோடு பேசும்போது, எதிர் வீட்டிலிருப்பவரும் வந்து சேர்ந்தனர்.

குழந்தைகள் வீதிகளில் புழுதியில் விளையாடாமல், பேசிக் கொண்டிருக்கும் தன் தாயின் முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

தஞ்சை அரச வீதியில் இரட்டைக் குதிரை பூட்டிய ரதங்கள் மாளிகையை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. அவற்றினின்று எழுந்த புழுதி தணியாமல் வானத்தில் மேகங்களை எட்டிக் கொண்டிருந்தன.

"நம் சக்கரவர்த்திக்குத் திடீரென்று உடல் நலம் சரியாயில்லையாமே?"

"இரண்டு நாள்களாக விழிக்காமல் படுத்துக் கொண்டிருக்கிறார்" என்ற உரையாடல்கள் எங்கும் மெல்ல எழுந்தன.

அரசருடைய உரிமை மகளிர் வாழ்ந்த பகுதிகளான வேளத்தில் உள்ளவர்கள் கவலை நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

மூதாட்டிகளும், நடுத்தர வயதுப் பெண்டிரும் கண்ணீர் மல்கக் குரல் தழுதழுக்கப் பேசிக் கொண்டனர்.

அவர்களுக்குப் பணியாளர்கள் வேலை ஏதும் செய்வதறியாது தூண்கள் அருகே நின்று கொண்டிருந்தனர். சுந்தரசோழ விண்ணகர ஆதுரச் சாலையிலிருந்து மருத்துவர்கள், மாளிகையை நோக்கி விரைந்தனர். பச்சிலைச் சாறுகளைக் கலயத்தி லிட்டு வேறு சில மூலிகைகளுடன் சேர்த்துக் கலக்கிக் கொண்டிருந்தனர்.

திடீரென அங்கே பரபரப்புக் காணப்பட்டது. கருவூர்த்தேவர் வருகிறார் என்ற செய்தி பரவியது.

வெண்தாடியுடன், வெண்ணிற ஆடையை முழங்கால் வரையில் உடுத்தியிருக்க அந்த முதுமைப் பிராயத்திலும் கம்பீரமாக ஆதுர சாலைக்குள் நுழைந்த கருவூர்த் தேவர், தலைமை மருத்துவரை அழைத்து ஏதோ கூறினார்.

ஆதுரச் சாலைப் பணியாட்கள், பெருவுடையார் கோயிலை அடுத்து இருக்கும் நந்தவனத்திற்கு விரைந்தனர்.

தேடிச் சென்ற மூலிகைக் கொடி உடனே கிடைத்துவிட, அதைக் கருவூர்த் தேவரிடம் கொண்டுகொடுத்தனர்.

"இராசராசன் உயிருக்கு இன்று ஆபத்து இல்லை" என்று அவர் முணுமுணுத்தார்.

"இன்னும் இந்த உயிர்க் காக்கும் கொடியைத் தேடிக் கொண்டு வாருங்கள்" என்று கூறி கருவூர்த் தேவர் மாளிகையை நோக்கி விரைந்தார்.

மாளிகையின் உள்ளும் வெளியும் அதிகாரிகளும், பெருந்தலைவர்களும் கூடியிருந்தனர்.

சக்கரவர்த்தியின் உடல்நிலை குறித்து, தவறான செய்திகள் பரவாமலிருக்க, மாளிகையின் வெளியே மூத்த அதிகாரி கிருஷ்ணன் ராமன் மேடை ஒன்றின்மீது ஏறி நின்று, அரசர் உடல்நிலை குறித்து அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருந்தார்.

"இவர் யார், அண்மையில் நாம் இவரை வெளியே எங்கும் காணவில்லையே" என்று இளைஞர் ஒருவர் கேட்டார்.


அவன் அருகே நின்று கொண்டிருந்த பெரியவர், "தம்பி, இவர்தான் சோழ நாட்டின் படைத்தளபதியாக இருந்தவர்.

கங்காபுரிக் காவலன்

சோழர்களின் வெற்றிகள் பலவற்றிற்கு இவர்தான் காரணம். சக்கரவர்த்தி இராச ராசர் அன்பை மிகவும் பெற்றவர்" என்று கூறினார்.

"ஓ... தளர்ந்து போன வயதானவர்கள் படைத்தலைவராக இருந்தால் இளைஞர் களின் திறமைக்கு வாய்ப்பளிப்பது எப்படி?" என்று அவன் அருகே இருந்த மற்றொரு இளைஞன் கேட்டான்.

"தம்பி, அப்படிச் சொல்லாதே. சோழர்ப் படைகளுக்குப் பல தலைவர்கள் உள்ளனர்.



கிருஷ்ணன் ராமன் உன்னைப்போல் இளைஞனாக இருக்கும்போதுதான் படை யில் சேர்ந்தார். திறமையால், உண்மையான உழைப்பால் உயர்ந்தார். அதனால்தான் சக்கரவர்த்தி இவரைத் தன் நம்பிக்கைக் கும் உரிய பொறுப்பான பதவியை அளித் துள்ளார். திருமந்திர ஓலை நாயகம் இவர் தான்".

முதியவர் கூறியதைக் கேட்டுத் திருப்தி அடைந்தவனாக இளைஞன் அங்கிருந்து மெல்ல நகர்ந்தான்.

மாளிகைக்குள்ளே செல்லத் தகுதியுடைய வர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங் கினர். வெளியேயுள்ள திறந்தவெளியில் கூடியிருந்தவர்கள், வருபவரை ஒவ்வொரு வராக அடையாளங் கண்டு வாழ்க வாழ்க என்று கோஷமிட முயன்றனர். அவ்வாறு வாழ்க ஒலி எழுப்புபவர்களைப் பார்த்து, "தம்பிகளா! வாழ்த்தொலி எழுப்பி மகிழ்ச்சி யைத் தெரிவிப்பதற்கு ஏற்ற சமயமா இது? அமைதியாக இருங்கள். மௌனமாக இருங்கள். ஆடவல்லானை மனத்திற்குள்ளே தொழுது பிரார்த்தனை செய்யுங்கள். எங்கள் பேரரசர் உடல்நிலை தேறி இன்னும் பல ஆண்டு வாழ அருள் வாய், என் ஈசா என்று பிரார்த்தனை செய்யுங்கள். மனத்திற்குள்ளே சொல்லிக் கொள்ளுங்கள். உதடுகள் மெல்ல அசையட்டும். பட்டமேறி யுள்ள எங்கள் பேரரசர் இராசேந்திரசோழ சக்கரவர்த்திக்கு உதவியாக இன்னும் பல ஆண்டுகள் ஜீவித்து இருங்கள் என்று பிரார்த்தனை செய்யுங்கள். எங்கள் அரசியார் சக்தி விடங்கன் தேவியார் கழுத்தில் துலங்கும் பொற்தாலிக்கு எந்தப் பங்கமும் வரக்கூடாது என்று இறைவனை வேண்டுதல் செய்யுங்கள்" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார். எங்கும் அமைதி நிலவியது.

மலையமானும், கொடும்பாளூர் வேளி ரும், சம்புவரையரும், நடுக்காட்டுக் காவல் பெருந்தலைவரும், கொங்கு வேளிரும் விரைந்து வந்ததைக் கண்ட மக்கள் கூட்டம் "பேரரசர் வாழ்க! சக்கரவர்த்தி இராசராசர் வாழ்க, வாழ்க!" என்று குரல் எழுப்பினர்.

முண்டாசு கட்டி, கழுத்தில் மணி மாலைகள் அணிந்து, மேலே பட்டாடை போர்த்திய புலவர் ஒருவர் மக்கள் திரளை விலக்கிக் கொண்டு வந்து, உரத்த குரலில் "ஐயா, எங்கள் மாமன்னரின் உடல்நிலை இப்போது எவ்வாறு உளது? கந்தவேள் போல் அழகான எங்கள் பேரரசர், உடல் மெலிந்து பிரண்டைக் கொடிபோல் கிடப்ப தாக அறிகிறேன். தமிழ்மொழியின் காப் பாளராக விளங்கிய எங்கள் பேரரசர் தமிழ்த்தாயின் அருந்தவத் திருமகனார் புலவர்களை அழைத்துப் பாராட்டாத நாளே இல்லை. கடந்த ஒரு திங்களாக பேரர சரைச் சந்திக்க இயலாதிருந்ததே வாழ்க் கையில் ஒளி குன்றியது போலிருந்தது" என்று கூறிய புலவர், உரத்த குரலில், "எங்கள் சக்கரவர்த்தி இராசகேசரி இராச ராச சோழ தேவரைப் போல் இனி இந்த உலகில் பேரரசர் ஒருவர் தோன்றுதல் இயலுமோ!

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக்கல மறுத்தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்பபாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழமண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்
எழில் வளருழியு ளெல்லா யாண்டுஞ்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராச ராச தேவர்... வாழ்க, வாழ்கவே!"

புலவர் உணர்ச்சிப் பெருக்கால் இராச ராசன் புகழ் பாடிக் கொண்டு போகும் போது அவர் தோளின் மீது ஒரு கரம் பதிந்தது.

"புலவரே! சற்று அமைதியாய் இருங்கள்" என்றார் கம்பீரமான அந்த உருவத்துக்கு உடையவர்.



"ஏன், ஏன்? என் உள்ளத்தில் பொங்கி வரும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. அதனால் சக்கரவர்த்தியின் புகழ்ப் பரணி பாடுகிறேன்" என்று கூறி அவர் கரத்தைத் தள்ளினார்.

"ஆமாம் ஐயா - சக்கரவர்த்தியின் பெரு மையை, புகழைப் பாடியவர்களே புலவர் கள் தாமே? அவர்கள் வழி வந்த இந்தப் புலவரை ஏன் தடுக்கிறீர்கள்? அரசர் வாழ்க! அரசர் வாழ்க!" என்று வாழ்த் தொலி கூற, அந்தக் குரல் வானை எட்டி னால் ஒருவேளை இறைவன் மனங் குளிர்ந்து, அரசரைக் காப்பாற்ற ஓடிவர லாம்!" என்றார் அருகிருந்த ஒருவர்.

'ஆமாம்; ஆமாம். சக்கரவர்த்திகளின் பெருமையைப் பேசுவதைத் தடுக்காதீர்கள்' என்று கூடியிருந்த மக்கள் குரல் எழுப் பினர்.

"புலவரைத் தடுக்கவில்லை ஐயன்மீர்! தன்னுடைய சொந்தக் கவிதை நயம்போல் பாடுகிறாரே! இது சக்கரவர்த்தியின் மெய்க்கீர்த்தி ஐயா!" என்றார் கம்பீரத் தோற்றமுடைய அதிகாரி. அவர் பேச்சு எடுபடவில்லை.

"அமைதி அமைதி" என்று கிருஷ்ணன் ராமன் கையசைத்துப் பலனில்லை.

திடீரென மாளிகை மேல் மாடத்திலிருந்து முரசு அதிர்ந்தது.

முரசு அதிர்ந்தால் முக்கியமானவர் மாளிகைக்கு வருகிறார் என்று அடை யாளம்.

சில நொடிகளில் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. சேவகர்கள் கூட்டத்தினரை வழிவிட்டு நிற்குமாறு கேட்டுக் கொண்டனர்.

"பரகேசரி இராசேந்திர சோழர் வாழ்க, வாழ்க!" என்ற வாழ்த்தொலி எங்கும் எழுந்தது. காற்றிலும் வேகமாகப் புரவி யொன்றின் மீது அமர்ந்து இராசேந்திரன் மாளிகை வாசலுக்கு வந்தார். புலிக்கொடி தாங்கிய வீரர்கள் அவரைத் தொடர்ந்தனர்.

இராசராச சோழ தேவரின் திருமக னார் இராசேந்திர சோழர், குதிரையி னின்று துள்ளிக் குதித்து காற்றினும் மிக வேகமாகத் தன் தந்தை படுத்திருக்கும் இடம் நோக்கி விரைந்தார்.

இராசராச சோழ தேவர் மஞ்சத்தில் படுத்திருந்தார். அவர் அருகே சென்றார் இராசேந்திரன்.

தந்தையை உற்று நோக்கியவாறிருந்த இராசேந்திரன் சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழுதார்.

இராசராசன், தன் மகனை அருகே வருமாறு சைகை செய்தார்.

அருகிருந்த பட்டத்தரசிக்கும் வியப்பாக இருந்தது. சென்ற சில நாட்களாக, கண் விழிக்காதிருந்த பேரரசர், கண் விழிக் கிறார். தன் வலது திருக்கரத்தைத் தூக்கி மகன் இராசேந்திரனை அருகழைக்கிறார். முதுமையும், நோயும் ஒன்று சேர்ந்ததால் ஒளி குன்றியிருந்த முகத்தில் புதிய பிர காசம் ஏற்படுகிறது. கடுமையான காய்ச்ச லால் காய்ந்திருந்த உதடுகளில் மகிழ்ச்சி யின் கோடுகள். புன்முறுவல் மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் மெல்ல மலர் கிறது.

பட்டத்தரசி பரபரப்புடன் அருகே நெருங்குகிறாள், தங்கக் கிண்ணத்தில் இருக்கும் பாலை எடுத்து அவருக்கு கொடுக்க.

வழியும் விழிநீரைத் துடைத்துக் கொண்டு இராசேந்திரன் அவர் அருகே நெருங்கு கிறார். இராசேந்திரன் கரத்தை எடுத்துத் தன் கரங்களுடன் இணைத்துக் கொள் கிறார். மெல்லிய அழுத்தத்தை உணர் கிறார். இராசராசரின் உள்ளத்தில் பொங்கி நிற்கும் அன்பும் பாசமும் அந்தக் கரங் களின் வழியே இராசேந்திரன் உடலில் பாய்கிறது.

"மகனே! நலமாக இருக்கிறாயா?" என்று இராசராசர் கேட்கிறார்.

பேச இயலாமல் இருந்த இராசராசரிட மிருந்து மெல்லிய குரல் வெளிப்படுகிறது.

அவர் படுத்திருந்த கூடத்திற்கு வெளியே முக்கிய அதிகாரிகள் நிற்கிறார்கள். உள்ளே வருவது மரியாதைக் குறைவு என்ற வகையில் அவர்கள் கூடத்துக்கு வெளியே நிற்கிறார்கள். மிக முக்கிய அதிகாரியான திருமந்திர ஒலை நாயகமும் அங்கேயே நிற்கிறார்.

'அரசர் பேசுகிறார் - கரம் தூக்கி இராசேந்திரனை ஆசி கூறுகிறார்' என்ற

செய்தி, மாளிகைக்கு வெளியே கூடியிருந் தவர்களுக்குப் பரவுகிறது.

"அப்பாடா, அரசர் உயிர் பிழைத்து விட்டார்" என்ற நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள் கூடியிருந்தவர்கள்.

"இராசராச சோழ சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க!" என்ற கோஷம் வானை எட்டுகிறது. சிறிது சிறிதாக மெல்லக் கலைகிறார்கள்.

"மகனைப் பார்த்தவுடன், சக்கரவர்த்தி களுக்கு இருந்த நோய் மறைந்துவிட்டது".

"மனநோய் என்று சொல்கிறாயா? தன் தந்தை அருகே இராமல் இர்ராசேந்திர சோழர் வேறு எங்கே சென்று விட்டார்?"

"அது தெரியாதா சேதி? தந்தைக்கும் மகனுக்கும் சில காலமாகவே கருத்து வேற் றுமை. சில போது கடுமையாகவும் மாறி யது. கலைக்கோயில் அமைக்கப் போவ தாக ஒரு காட்டுப் பகுதியில் தங்கியிருக்கி றார் தன் மகன் என்ற செய்தி அரசருக்கு அதிர்ச்சியை அளிக்கிறது. வெளியே புலப் படுத்தாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்திருந்ததால் நோயாக மாறிவிட்டது.

"ஆமாம்; நானும் கேள்விப்பட்டேன். அங்கே அவருடைய புதிய துணைவிக்கு மாளிகை கட்டிக் கொடுத்திருக்கிறாராம்".

"துணைவி என்றோ மனைவி என்றோ சொல்லாதீர்கள். பட்டத்து அரசியைவிடச் சக்திவாய்ந்தவர்கள். எளிய குடும்பப் பெண் வீரம்மாளின் அதிர்ஷ்டத்தைப் பார்த் தீர்களா? இளமையின் மோகத்தில் மயங்கி விட்டார் இராசேந்திரர்".

"உச்... பெயரைச் சொல்லிச் சாதாரண மாக அழைக்கிறீர்களே! நம் பேரரசர் ஐயா. அவர் நம் பேரரசர். இராசராசர் மன முவந்து தன் வாழ்நாளிலேயே தன் மகனைப் பேரரசராக்கினார்".

"பேரரசர் - ஆமாம். இராசராச சோழ ரைப் போல் மகத்தான பேரரசர் என்பது நமக்குப் பெரும் அதிர்ஷ்டம், பெருமை".

"அப்படிச் செய்தாலாவது தன் மகன் தன் பிடிவாதத்தை மாற்றிக் கொள்வான் என்று இராசராசர் நினைத்திருக்கலாம்".

"எல்லாம் சரிதான்; ஆனால் தன் தந்தை யைவிடத் தனக்குப் புகழ் அதிகமாக வேண் டும் என்று அவர் விரும்புவதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை".

"அதில் என்ன தவறு? இராசராசர் அடையாத புகழ் இல்லை. தன் மகனுக்கு என்று அவர் எதையும் விட்டு வைக்க வில்லை. எவ்வளவு வெற்றிகள்! புலிக் கொடியை எட்டுத் திக்குகளிலும் பறக்க விட்டவர்...".

"சரி... தந்தையின் வெற்றியில் மகன் பங்கும் இருக்கிறதே? தனக்கு எனத் தனிப் பெருமை அடைய நினைப்பது நியாயம் தானே?"

"ஓ! அழியாப் புகழைத் தருவது கலை ஒன்றுதான் - அதனால் கலைக்கூடம் ஒன்றைப் படைக்கத் திட்டமிட்டிருக்கிறார்".

"அதற்கு வீரம்மாள்தான் காரணம்".

"இராசராச சோழ சக்கரவர்த்தி தன் மகனுடைய எண்ணத்தை ஏற்கவில்லை".

"அதுமட்டுமா? தஞ்சைப் பெரிய கோயிலைவிட மகத்தான கோயில் ஒன்றைக் கட்டவேண்டும் என்று தன் மகன் சிற்பிகளை அழைத்து ஆலோசனை கேட் டிருப்பது சக்கரவர்த்திக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது".

"ஒரு நாளும் முடியாது. பெரிய கோயிலைவிட மற்றொரு கோயிலா? தக்ஷிணமேருவைவிட மற்றொரு மேருவா? ஹும்ஹும் நடக்கவே நடக்காது. இராசேந் திரன் வீண் கனவு காண்கிறார். அவரைத் தூண்டிவிட்ட வீரம்மாள் மீதும் சக்கர வர்த்திகளுக்குக் கோபம்... மகன் மனத்தை மாற்ற முடியவில்லை".

"இராசேந்திர சோழரின் பட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் வீரம்மாளை வெறுக் கிறார்கள். வீரமாதேவி என்று அழைக் காமல் வீரம்மா என்றே ஒருமையில் அழைத்து அவமானப்படுத்துகிறார்கள்".

"அதனால் வந்த வினைதான். தன்னை அலட்சியப்படுத்திய, அவமானப்படுத்திய மாளிகைப் பெருமாட்டிகள் எதிரே வீரமா தேவி ஒரு சபதம் செய்துவிட்டாள். அதன் விளைவுதான் காட்டுப் பகுதியில் ஒரு கலைக்கோயில் உதயமாவதற்கான திட்டம்!"

"ஓ! அப்படிப் போகிறதா கதை! அர சாங்கக் குடும்பச் செய்தியே விசித்திரம்

தான்! வீரமாதேவியின் சபதம், இராசேந்திரனின் புகழ்ப் போதை இரண்டும் சேர்ந்து சோழ நாட்டில் பெரிய கலைக்கோயில் உருவாகப்போகிறது!"

"அது இராசராச சோழச் சக்கரவர்த்தியின் உயிரைக் குடிக்கும் கொடிய விஷமாகவும் அமைந்துவிடப் போகிறதே. இராசராசர் படுத்த படுக்கையாகி, பேச இயலாமல் போனதற்கு இராசேந்திரனின் திட்டம் தான் காரணம். என்ன நேரப் போகிறதோ?"

"கவலைப்படாதே! இன்று இராசேந்திரனைப் பார்த்தவுடன் இராசராசர் புதிய தெம்பைப் பெற்று விட்டாராம். தன் மகனிடம் அவர் மனம் திறந்துப் பேசினாராம்".

"ஓ! அதன் விளைவுதான் நாளைக்கு ராஜராஜ விஜயம் நாட்டிய நாடகம் நடக்கப் போகிறதா? வீரமாதேவியும் வருகிறாள். அதைவிட மிக முக்கிய செய்தி: அந்தக் காட்டுப் பகுதியில் உள்ள நடனப்பள்ளி நடத்திவரும் பெண் ஒருத்திதான் ராஜராஜ விஜயம் நாடகத்தை நடத்துகிறாளாம்".

"ஆகா! அவள் வருகிறாளா? அந்தப் பெண் - ஒரு பெரிய இரகசியமே மறைந்திருக்கிறது".

இவர் இப்படிக் கூறியவுடன் சுற்றிலுமுள்ளவர்கள், அந்தச் செய்தியைக் கேட்க ஆவல்கொண்டனர்.

(தொடரும்)

சென்னை - 2இல் உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன், ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி.எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன், நிர்வாக அலுவலகம், த.பெ.எண் : 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001, தொலைபேசி : 528545, ஆண்டுச்சந்தா ரூ. 60.